# கல்கி



KALKI டிசம்பர் 31, 1950 4 அணா




சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :

சுராஜ் ஏஜன்ஸீஸ்

10, ஜானிபாட்சா சாஹிப் தெரு, சென்னை-1

கோவை, பாலக்காடு அண்டு நீலகிரிக்கு
சோல் ஏஜண்டுகள் :

B. பாலபட்டாபி செட்டியார்

346, வைசியாள் தெரு - கோயமுத்தூர்

ஸ்டாக்கிஸ்டுகள் :

மெஸர்ஸ். சண்டிகா & கோ.,

முதல் அக்ரஹாரம் சேலம் டவுன்

"கல்கி" ஆசிரியர் எழுதிய

# பார்த்திபன் கனவு

தமிழ் நாட்டுச் சரித்திரத்தின்
மகோன்னத காலத்தை அற்புத
மாக விளக்குகின்றது

விலை ரூ. 6-8-0

•

கவியரசர் டாகூர் காந்தி மகாத்மாவின்
பெருமையையும் அவர் இந்தியாவுக்கு
ஆற்றி யிருக்கும் அருந் தொண்டையும்

# மகாத்மா காந்தி

என்ற நூலில் வெகு அழகாக
விளக்கி யிருக்கிறார்

•

விலை அணா எட்டு
(தபால் செலவு தனி)

•

சசி தேவி

எழுதிய

# விஜயா

முதலிய கதைகள்

விலை ரூ. 2-8-0

(தபால் செலவு தனி)

•

கிடைக்குமிடம்

## கல்கி காரியாலயம்

சேப்பாக்கம் :: சென்னை



விறுவிறுக்கு ஒரு விந்தை
அடுக்கடுக்காக அதிசயங்கள்
கதை முழுவதுமே ஒரு மர்மச்சுழல்
ஜூபிடரின்
மர்மயோகி
டைரக்ஷன் · கே. ராம்நாத்
விரைவில் வருகிறது.....
ஸ்டூடியோ
சென்ட்ரல்


1 — 31.12





# ஓவல்டின்

இரவில்

**நல்ல தூக்கம்**

வர உதவுகிறது.


**அதன் பயனாக**

**மறுநாள் உங்களுக்கு**

**புதிய ஜீவசக்தி**

**கிடைக்கின்றது!**

நல்ல ஆரோக்கியம் அனுபவிக்க ஆழ்ந்த இயற்கை நித்திரை மிகவும் அவசியம். நீங்கள் உறங்கும்போது, உங்கள் உடலுக்கும் மூளைக்கும் புதியதாகத் தெம்பு உண்டாவதுடன், நரம்புகளுக்கும் ஓய்வு கிடைக்கின்றது.

'ஓவல்டின்' இவ்வாழ்ந்த நித்திரை கிடைக்க உதவுவதால் மறுநாள் புதிய பலமும் சக்தியும் கிடைக்கின்றது.

'ஓவல்டின்' ஆரோக்கியத்திற்கு முக்கிய அங்கமாக விளங்குவதன் காரணம் அதிலடங்கியுள்ள இயற்கையின் மிகச்சிறந்த உணவுப் பொருள்களாகும். பழுத்த பார்லி மால்ட், சுத்தமான பசும்பால், விசேஷமாகத் தயாரித்த கோகோ, இயற்கை பாஸ்பேட்டுகள், விட்டமின்களே அவை. இந்த சத்துக்கள் நிறைந்த அளவு இருப்பதால் ஓவல்டின் உபயோகத்தில் மிகவும் சிக்கனமானது.

ஆழ்ந்த நித்திரைக்கும் நிறை ஆரோக்கியத்திற்கும், இன்றே ஓவல்டின் சாப்பிட ஆரம்பியுங்கள். ஓவல்டின் என்று பெயருள்ளது ஒன்று தான். இணையற்ற பிரத்யேக வகையைச் சேர்ந்தது.





# 'OVALTINE'

## 'ஓவல்டின்'

**ஆழ்ந்த, சுகமான நித்திரை கிடைக்க.**

விநியோகஸ்தர்கள்:—


கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி,

(இந்தியா) லிமிட்.

OV. 305.

ஷாலிமார் தயாரிப்புகளே ஆர்டர் செய்யும்போது எந்த வேலைக்காக என்பதை தெரிவிக்கவும்.

ஓர்
அழகு ஊட்டி
அதிககால
உழைக்கவல்ல
வர்ணப்பூச்சு



மஞ்சள் பொன்னைப் போன்ற பிரகாசமுடைய ஷாலிமார் வுட் கோட் உடனே உபயோகிக்கும் படியாக கலந்து வைக்கப்பட்டுள்ள ஓர் பெயிண்ட். நிரந்தரமாய் உழைக்கவல்லது. எல்லாவிதமான கட்டட உட்புற வெளிப்புற பாகங்களுக்கும் உகந்தது 32 வர்ணங்களில் கிடைக்கும்

அடித்தாற் போல் சொல்லுங்கள்

ஷாலிமார் வுட் கோட்

SPX.52-TM

மர வேலைகளுக்கு புதுப்பொலிவளிக்கும் பெயிண்ட்

SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.,
Post Box 136, Madras 1. Importers & Distributors for Ceylon:
Lewis Brown & Co., Ltd., Post Box 85, Colombo

# சாப்பாட்டிற்குப் பின் மனக்கலக்கமா?




## இவ்விதம் தீர்த்துக் கொள்ளவும்...

சாப்பாட்டிற்குப்பின் அஜீர்ணமோ, புளியேப்பமோ, மார்பு எரிச்லோ, அல்லது வாய்வு கோளாறுவோ உங்கள் சந்தோஷத்தை நிலை குலைக்கின்றனா? சாப்பாட்டிற்கு பின் ஏற்படகூடிய பிரதிபலன்களுக்காக சாப்பிடவோ, அல்லது பானங்கள் அருந்தவோ பயப்படுகிறீர்களா? அப்படியானல், நிச்சயம் பயன் தரும் சுலபவழி இதோ சாப்பிட்டவுடன் ஒரு தேக்கரண்டி அளவு பிஸ்மாக் (4 or 5 மாத்திரைகள்) கை 'கொஞ்சம் ஜலத்துடன் உட்கொள்ளவும் பிஸ்மாக்கிலுள்ள மருந்து பகுதிகளுள்ள உடனே வேலை செய்யதொடங்கி வயிற்றிலுள்ள அதிகபுளிப்பை சமனப்படுத்தி, மிருதுவான குடல் ஓரங்களை சந்நாப்படுத்தி, சாப்பாடு கொடாமல் பாதுகாக்கிறது. சில நாட்கள் ஒவ்வொரு சாப்பாட்டிற்கு பிறகு பிஸ்மாக்கை சாப்பிட்டால், குணப்படுத்தும் வேலையை செய்யும்.

"பிஸ்மாக்" வெகுவாக வலியிலிருந்து நிவாரணம் தருகிறது.

வயிற்றுக் கோளாறுகளுக்கெல்லாம் முக்கிய காரணமான அதிகப்படியான புளிப்பை "பிஸ்மாக்" முதன்முதலில் முறித்தும் பயனற்றதாகச் செய்கிறது. புளிப்பை முறிக்கும் பொருள்கள் துரிதமாகவே வலியிலிருந்து நிவாரணம் அளித்தபின்னர் 'பிஸ்மாக்'கிலுள்ள மற்றுமுள்ள பொருள்கள் தங்கள் வேலையைத் துவக்குகின்றன. ஒன்று அதிகப்படியான புளிப்பு மேலும் சேருவதைத் தடுப்பது: மற்றொன்று வயிற்றிலுட்பாகத்து எரிச்சலைச் சமனம் படுத்திக் குணமளிப்பது.





மாத்திரை
யாகவும் பவுடராகவும்
கிடைக்கும்

இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:
ஜியாப்ரே மானர்ஸ் & கோ. லிட்., பம்பாய்-1
பிராஞ்சுகள்: கல்கத்தா - மதராஸ் - டில்லி

நீங்கள் சுவாசிப்பதுபோலவே தானாகவே சாவி இயக்கிக் கொள்ளும்!

# ETERNA-MATIC


## எடர்னா-மாடிக்



**பால் பேரிங் மூலம் தானாகவே சாவி இயக்கிக் கொள்ளும் முதல் ஆடோமாடிக் கடிகாரம்**

பால் பேரிங்குகள் அமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட முதல் கடிகாரம் எடர்னா மாடிக்தான். இந்தப் புதிய எடர்னா மாடிக் கடிகாரங்களை பொதுமக்களுக்கு வெளிவிடுவதற்கு முன், நான்கு வருஷ பரிசீலனை செய்யப்பட்டே பிறகு வழங்கப்பட்டன.

எடர்னா-மாடிக் கடிகாரத்தின் பால் ரேஸில் ஐந்து சின்னஞ் சிறு கோலிகள் இருக்கின்றன. இதனால் எவ்வித உராய்ப்பும் ஏற்படாமல் எக்காலத்திற்கும் தானாகவே சாவியை இயக்கிக் கொள்கிறது. இந்தப் புதிய எடர்னா-மாடிக் கடிகாரங்களை உங்கள் பேவர்-லூபா டீலர்களிடம் பாருங்கள். அல்லது விவரமான பிரசுரத்திற்கு எழுதுங்கள். விலைகள்: ஸ்டெயின்லஸ் ஸ்டீல் கேஸ் ரூ. 340. ரோல்ட் கோல்டு முகப்பும் பின்புறம் ஸ்டீலும் உள்ளது ரூ. 396.




WATER-PROOF
SHOCK-PROOF
ANTI-MAGNETIC

**முக்கியமான பகுதி**

ஒரு அணா நாணயத்திற்கேற்றாக காட்டப்பட்டிருக்கும் ஐந்து சிறிய எஃகு கோலிகளே எடர்னா-மாடிக்கின் சாவி இயங்கும் முக்கிய சாதனமாகும். எடர்னா-மாடிக்கின் இயந்திர ஓட்டம் முழு வட்டத்தில் வலது புறமாகவும் இடது புறமாகவும் ஓடுகிறது. சிறிய அசைவு, மெயின் ஸ்பிரிங்கை சப்தமோ அதிர்ச்சியோ இல்லாமல் சுற்ற வைக்கிறது.

**மற்ற ஆடோமாடிக் கடிகாரத்துடனும் இவைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்**

1. வலது புறமும் இடது புறமும் சுழலும் சுலபமான எடையின் உராய்ப்பில்லாத ஓட்டம்.
2. கியேர்களுடன் 360 முழுதும் அசையும் பாரம்.
3. 40 மணிக்கு வேலைக்கே விசை சேமித்துக் கொள்ளும் இயல்பு.
4. அசைவின்றி, சப்தமின்றி சுலபமாக சாவி இயக்கிக் கொள்வது. பம்பர் ஸ்பிரிங்குகள் கிடையாது.
5. உழைப்பில் மிகவும் சிறந்தது.

# FAVRE-LEUBA

பேவர்-லூபா & கோ., லிட்., பம்பாய் - கல்கத்தா

Look for this ETERNA-MATIC Symbol on the dial

எமது கம்பெனியின் வாடிக்கைக்காரர்களுக்கும்
நண்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்

எங்களது மனமார்ந்த

# புது வருஷ நல் வாழ்த்துக்கள்!

•

# நியூடன் & கம்பெனி

ஆர்டிஸ்டிக் என்கிரேவிங் ஆப்டோன்
லயன், கலர் பிளாக்குகள் மற்றும்
ரப்பர் ஸ்டாம்புகள் தயாரிப்போர்

80, வாலாஜா ரோடு :: மதராஸ் - 2

போன்: 86729



நியூடெல்கி, "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகையின் பிரதம அகௌண்டெண்ட் ஸ்ரீ S. V. ராமசாமி அவர்களின் குமாரர் - மருமான் சிரஞ்சீவிகள் ராமசாமி, ஸ்ரீனிவாசன், இருவருக்கும் மதுரையில் சமீபத்தில் உபநயனம் நடந்தேறியது. சென்னை மாகாணப் பிரதம மந்திரி, இந்திய சர்க்கார் உள்நாட்டு இலாகா மந்திரி முதலிய பிரமுகர்களிடமிருந்தும் உறவினர் நண்பர்களிடமிருந்தும் வடுக்களுக்கு அநேக வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் கிடைத்தன.


பம்பாய், மாதுங்கா ஸ்ரீ ஷண்முகானந்தா பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி கட்டிட நிதிக்காக
இன்னிசை விழா: *1951 ஜனவரி 6-ம் முதல் 14-ம் தேதி வரை*
டான் பாஸ்கோ பள்ளிக்கூட விளையாட்டு மைதானத்தில் விசேஷமாக அமைக்கப்பட்டுள்ள பந்தலில்
சனிக்கிழமை ஜனவரி 6-ம் தேதி அன்று மாலை 5 மணிக்கு
*பம்பாய் பிரதம மந்திரி கனம் ஸ்ரீ பி. ஜி. கேர் அவர்கள் விழாவைத் துவக்கி வைப்பார்கள்*

| | | |
|---|---|---|
| **6-1-1951** | செம்மங்குடி ஸ்ரீ R. ஸ்ரீனிவாசய்யர் | — பாட்டு |
| சனிக்கிழமை | கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை | — வயலின் |
| மாலை 6 மணிக்கு | பாலக்காடு ஸ்ரீ T. S. மணி அய்யர் | — மிருதங்கம் |
| | பழனி ஸ்ரீ M. சுப்பிரமணிய பிள்ளை | — கஞ்சிரா |
| **7-1-1951** | ஸ்ரீ G. N. பாலசுப்பிரமணியம் | — பாட்டு |
| ஞாயிறு மாலை | கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை | — வயலின் |
| 5-30 மணிக்கு | பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் | — மிருதங்கம் |
| | பழனி ஸ்ரீ M. சுப்பிரமணிய பிள்ளை | — கஞ்சிரா |
| **9-1-1951** | மதுரை ஸ்ரீ மணி அய்யர் | — பாட்டு |
| செவ்வாய் | கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை | — வயலின் |
| மாலை 8 மணிக்கு | ஸ்ரீ C. S. முருகபூபதி | — மிருதங்கம் |
| **11-1-1951** | | |
| வியாழன் | ஸ்ரீமதி D. K. பட்டம்மாள் & பார்ட்டி | — பாட்டு |
| மாலை 8 மணிக்கு | | |
| **12-1-1951** | | |
| வெள்ளி | ஹிந்துஸ்தானி பாட்டு | |
| மாலை 8 மணிக்கு | | |
| **13-1-1951** | ஸ்ரீ T. R. மகாலிங்கம் | புல்லாங்குழல் |
| சனி | ஸ்ரீ T. N. கிருஷ்ணன் | — வயலின் |
| மாலை 6 மணிக்கு | ஸ்ரீ C. S. முருகபூபதி | — மிருதங்கம் |
| **14-1-1951** | | |
| ஞாயிறு | குமாரி கமலா — பரதநாட்டியம் & அபிநயம் | |
| மாலை 6 மணிக்கு | | |

ருசி மிகுந்த உணவுகளை வனஸ்பதியினால் **துஷார்** அளியுங்கள்



நீடித்த புதுமைக்கும் ரகத்தின் மேன்மைக்கும் ஏற்றவாறு துஷார் வனஸ்பதி தயாரிக்கப்பட்டது. உங்கள் ஆகாரத்திற்கு துஷார் ருசி, மணம் இவற்றுடன் நல்ல போஷாக்கையும் அளிக்கின்றது.



துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்நூல்



வருஷக்கணக்கில்
வனப்பும் வாலிபப்பொலிவும்
வாடாமலிருக்க




Distributors:

A. V. R. A. & CO.,

45, Thambu Chetty Street, Madras-1 :: 6, Lohar Chawl, Bombay-2

# பரத நாட்டியம் - அபிநயம்



# குமாரி ராதா

★

நடன ஆசிரியர் :

நாட்டியக் கலாபோர் வழுவூர் ஸ்ரீ ராமையா பிள்ளை

★

## பெங்களூர் ஸிடி
## நரஸிம்ம ராஜா ரோடு
## டவுன் ஹாலில்

**சனிக்கிழமை 6-1-1951 மாலை 6 மணிக்கு**

★

**ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள்**

*அபிநயத்துக்குப் பதங்கள் பாடுவார்கள்*

டிக்கட்டுகள் :

**ரு. 15/- ரு. 10/- ரு 5/- ரு. 2-6/-**


முதல் மூன்று வகுப்புகளிலும் பிரத்தியேகக் கட்டணமின்றி ஸீட்டுகள் ரிஸர்வ் செய்யப்படும்

கே. எஸ். கிருஷ்ண அய்யர்
ஆர்கனைசர்



புத்தப் புதிய டிசைன்களில்
ஸ்டாக்குகள் ஏராளமாக
வந்துள்ளன

பல பல நவீன ரகங்களில் புத்தம் புதியவை. விலைகள் மிகவும் குறைக்கப் பட்டுள்ளன. இந்த விலை குறைவுச் சலுகை பதினைந்து நாட்களுக்கு மட்டுமே அமுலில் இருக்கும். ஜுவல் பதித்த கடிகாரங்கள் 10 வருட கத்திரவாதம் கொண்டவை



புதிய ரக அலாரம் 17/-

ஸ்பேஷல் ரேடியம் 23/8/-
பாக்கெட் வாட்ச் 14/-



5 ஜுவல் ரேடியம்
சென்டர் செகன்ட் 26/-
ரவிக்கோ கார்டன் க்ரோமியம் 24/-
லேடீஸ் கவரண்ட் கப்ரிக் 32/-



15 ஜுவல் நீண்ட சதுர ஸ்பேஷல் 55/-
லேடீஸ் கோல்டன் கலண்ட் சிறியது 33/-
ஜென்டில்மேன் பாரின் ஷேப் 41/-



குரோமியம் ரேடியம் 20/8/-
ஸ்பேஷல் கோல்டன் செகன்டுமுள் 23/8/-

POSTAGE EXTRA, FREE ON TWO.

**STANDARD WATCH COMPANY**
POST BOX No. 288, CALCUTTA-1

# பொருள் அடக்கம்

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 10 இதழ் 22 | 1950 டிசம்பர் 31 | விக்ருதி ௵ மார்கழி 16


| | | |
|---|---|---|
| புது வருஷ உதயத்தில்...... | சாஸ்திரி | ... 10 |
| தும்பையும் வாகையும் கைவிட்ட கதை! | ... | ... 11 |
| மழையும் துவானமும் | ... | ... 13 |
| அமர சிருஷ்டி | வ. சா. நாகராஜன் | ... 17 |
| வட்ட மேஜை | ... | ... 24 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... 27 |
| பங்களூர் நாகரத்தினம்மாள் | ஸ்ரீ துரையப்ப பாகவதர் | ... 38 |
| அன்னை | எஸ். சங்கரன் | ... 42 |
| சமுத்திர சுந்தரி (பாப்பா மலர்) | ஸோமாஸ் | ... 47 |
| ரொட்டி, ரொட்டி! | உமா | ... 50 |
| அங்கப்பனின் வெற்றி | கிட்டப்பா | ... 51 |
| ராமன்பட்டி ஜமீன்தார் | எஸ். வி. என். | ... 55 |
| ஆரோக்கிய ரகசியம் | வி. எல். குமாரசாமி | ... 59 |
| மிஸ்டர் பராங்குசம் | விஜயம் | ... 62 |
| போய் விட்டான் அதிகாயனும் | டி. கே. சி. | ... 65 |
| மருக்கொழுந்துக் கூடைக்காரி | வேப்பு | ... 66 |


"கல்கி'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே;

## அட்டைப்பட விளக்கம்

பூக்குடலையுடன் மலர்ப் பொழிலுக்கு வந்த ஆண்டாள் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். அவள் கால்கள் மேலே ஒரு அடி எடுத்து வைக்க மறுத்துவிட்டன. கைகள் மலரைப் பறிக்க மறுத்துவிட்டன. சுற்றுமுற்றும் பார்த்தாள். வண்ண மலர்கள் கண்ணனின் ஒவ்வொரு அழகிய அங்கத்தையும் நினைவுறுத்தித் துன்புறுத்தின.

நீல நிறக் காயா மலர்கள் கண்ணனின் திருமேனியை நினைவுறுத்தின. செவ்வாம்பல், அவனுடைய செவ்விதழ்களை நினைவுறுத்தின. தாமரை இதழ்கள் நீண்ட விழிகளை நினைவுறுத்தின. கண்ணன் நினைவு வர வர, கண்ணனே தன்னைத் துன்புறுத்த இத்தனை வண்ண மலர்களை ஏவி விட்டிருக்கிறானோ என்றுகூட எண்ணத் தொடங்கி விட்டாள்.

> கார்க் கோடற் பூக்காள்!
> கார்க்கடல் வண்ணன்என் மேல் உம்மைப்
> போர்க் கோலம் செய்து
> போரவிடுத்(து) அவன் எங்குற்றான்?
> ஆர்க்கோ இனி நாம்
> பூசலிடுவது? அணிதுழாய்த்
> தார்க்கோடும் நெஞ்சந்தன்னைப்
> படைக்கவல் லேன், அந்தோ!


என்றெல்லாம் அவள் நினைக்கிறாள். முல்லை மலர்களைப் பார்த்தாள்:

"முல்லைப் பிராட்டி நீ உன் முறுவல்கள் கொண்டெம்மை அல்லல் விளைவியேல்"

என்று கெஞ்சுகிறாள். 'முல்லைப் பிராட்டி' என்று எவ்வளவு அருமையாக முல்லை மலரை விளித்துக் கேட்டுக் கொள்கிறாள்.

இது மார்கழி மாதம். மார்கழி மாதம் வந்தாலே, திருப்பாவையும், திருவெம்பாவையும் வைணவர்களும் சிவ பக்தர்களும் ஓதுவதைத் தமிழ் நாட்டிலும் தமிழர்கள் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் — கேட்கலாம். நாமும் ஆண்டாள் அருளிய சில பாடல்களை இந்தச் சமயத்தில் நினைவுபடுத்திக் கொள்வோம்.

# புதுவருஷ உதயத்தில்...



கல்கி

# தும்பையும் வாலையும் கைவிட்ட கதை!

இன்றோடு முடிவடையும் 1950-ம் ஆண்டில் எத்தனையோ பெரிய பெரிய சம்பவங்கள் நிகழ்ந்தன. பல இடங்களில் புரட்சிகளும் போர்களும் பீறிட்டெழுந்தன. பட்டணங்கள் பாழாகி மக்கள் மடிந்தனர். பல நாடுகளில் பசியும் பற்றாக்குறையும் மக்களைப் பிடுங்கித் தின்றன.

இந்த வருஷம் முடியும்போது மேற்படி விபரீதங்களுக்கும் முடிவு ஏற்படாதா என்று உலக மக்கள் ஏங்கியிருக்கலாம். 1951-ம் வருஷத்தில் பயங்கர இன்னல்கள் ஒழிந்து நன்மை ஏற்படக்கூடும் என்று நம்பியிருக்கலாம்.

ஆனால் இந்த ஆண்டின் இறுதியில் கிடைத்துள்ள செய்தி ஜனங்களின் நம்பிக்கையை நிறைவேற்றுவதாக இல்லை. இவ்வருஷத்தில் கிடைத்த மற்றெந்தச் செய்தியைக் காட்டிலும் இப்போது கிடைத்துள்ள செய்தி ஜனங்களின் கலக்கத்தைப் பன்மடங்கு அதிகப்படுத்துவதாக இருக்கிறது.

“ஜெனரல் ஐஸன்ஹோவர் மேற்கு ஐரோப்பிய இராணுவத்தின் மகோன்னத தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்” என்பதுதான் அந்தச் செய்தி.

ஜெனரல் ஐஸன்ஹோவர் சென்ற மகா யுத்தத்தில் வெற்றி மேல் வெற்றி பெற்றுப் பிரக்யாதி அடைந்தார். ஹிட்லரின் ஆதிக்கத்தில் இருந்த ஐரோப்பா மீது படையெடுக்கும் மகத்தான திட்டத்தை வகுத்து வெற்றிகரமாக நிறைவேற்றிய பெருமை ஐஸன்ஹோவருக்கு உரியது. ஆப்பிரிக்காவில் ஜெர்மன் படைகள் படுதோல்வி அடைந்ததற்கும், ஜெர்மனி தோல்வியடைவதற்குப் பல மாதங்களுக்கு முன்பே இத்தாலி சரண் அடைந்ததற்கும் நேசதேச தளபதி ஐஸன்ஹோவரின் யுத்த தந்திரம்தான் முக்கிய காரணம்.

எனவே அத்தகைய தகுதி வாய்ந்த வீரரை எந்தப் படைகளுக்கு வேண்டுமானாலும் மகோன்னத தளபதியாக நியமிக்கலாம்.

எனினும் சமாதான காலத்தில், பன்னிரண்டு ஐரோப்பிய நாடுகளின் இராணுவத்துக்கு ஏக சக்ராதிபதியாக ஐஸன்ஹோவரை நியமிக்க வேண்டிய அவசரமும் அவசியமும் என்ன என்பதுதான் இப்போது கேள்வி.

* * * *

கொரியாவில் அமெரிக்காவின் நிலைமை, ஐக்கிய நாடுகள் சபையின் நிலைமை, தும்பை விட்டு விட்டு வாலைப் பிடித்த கதையாக முடியவில்லை; தும்பையும் வாலையும் விட்டு விட்டு வாயைப் பிளந்து கொண்டு நிற்கும் கதையாக முடிந்திருக்கிறது! இன்று கொரியாவில் ஏற்பட்டுள்ள குளறுபடியான நிலைமைக்கு அமெரிக்காவின் பெருந் தவறுகளே காரணம்.

இந்தியா முதலிய நாடுகள் எவ்வளவோ வற்புறுத்தியும் அதை லட்சியம் செய்யாமல் அமெரிக்கா ஐ. நா. சபையிலே சீன சர்க்கார் பிரதிநிதிக்கு இடமில்லை என்று மறுத்தது. — இது முதல் தவறு.

கொரியாவில் வெற்றி பெற்று முன்னேறிய அமெரிக்கத் துருப்புகள் முப்பத்தெட்டாவது அக்ஷரேகையைக் கடந்து செல்லாமல் இருந்தால் அமெரிக்காவின் வெற்றி நிலைத்திருக்கும். உலக சமாதானத்துக்கு இன்றியமையாத சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கும். — எனவே அமெரிக்கத் துருப்புகள் மேற்படி எல்லையைக் கடந்து சென்றது இரண்டாவது தவறு.

பார்மோஸாப் பிரச்னை உள்படச் சீனாவுடன் ஏற்பட்டிருக்கும் தகராறுகளையெல்லாம் சமரசமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று பிரிட்டிஷ்

பிரதம மந்திரி ஆட்லி அமெரிக்காவுக்கு ஓடோடியும் சென்று வற்புறுத்தினர். —அவரது கோரிக்கைக்கு இணங்க அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் அடியோடு மறுத்து விட்டது மூன்றாவது தவறு.

இந்தத் தவறுகளினால் ஏற்பட்டுள்ள விளைவு என்ன?

1. கொரியாவில் அமெரிக்கா அடைந்த வெற்றி இப்போது பெருந் தோல்வியாக முடியும் போலிருக்கிறது. 2. கொரியா யுத்தத்தினால் அமெரிக்காவின் இராணுவ தந்திரத்துக்கே களங்கம் உண்டாகியிருக்கிறது. 3. கொரியா போர் உலக யுத்தமாக மாறலாம் என்ற படுமோசமான நிலைமை மறுபடியும் ஏற்பட்டிருக்கிறது. 4. ஐக்கிய நாடுகள் சபையில் தாங்கள் அங்கம் வகிக்காததால், அந்தச் சபையின் தீர்மானம் எதுவும் தங்களைக் கட்டுப்படுத்தாது என்று சீன சர்க்கார் கூறி, வெகு சுலபமாகத் தங்கள் பொறுப்பைக் கழித்துக் கொள்ளும்படியான நிலைமைக்கு இடம் கொடுத்திருக்கிறது. 5. கீழ்த்திசையிலே அமெரிக்கா போரில் மாட்டிக் கொண்டுள்ள இந்தச் சமயத்தில், ஐரோப்பாவில் ருஷ்யா மகத்தான படையெடுப்பில் ஈடுபட்டு விட்டால் என்ன செய்வது என்ற பெருந் திகிலுக்குக் காரணமாகி யிருக்கிறது.

அதாவது ஜெனரல் ஐஸன்ஹோவரின் நியமனம், ஐரோப்பாவில் யுத்த பீதி உச்ச நிலையை அடைந்து விட்டது என்பதையே காட்டுகிறது.

* * * *

சில தினங்களுக்கு முன் ஜனாதிபதி ட்ருமன் அமெரிக்க ஜனங்களுக்கு ஒரு பிரகடனம் விடுத்தார்:

"நமது நாட்டையும் நமது வீடு வாசல்களையும் பேராபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் மானிட நாகரிகம் நிலைப்பதோ அல்லது அழிவதோ நாம் இப்போது கைக்கொள்ளும் முறைகளையே பொறுத்திருக்கிறது. கீழ்த் திசையில் மகத்தான போர் நடந்து வருகிறது. அதே ஆபத்து ஐரோப்பாவையும் உலகத்தையும் சூழ்ந்து கொள்ளலாம். எனவே ஐரோப்பாவையும் ஆசியாவையும் உலகத்தையும் அத்தகைய ஆபத்திலிருந்து பாதுகாக்கும் பொறுப்பில் அமெரிக்கா பங்கு எடுத்துக் கொண்டு தீரவேண்டும்."

இவ்வாறு ட்ருமன் தமது பிரகடனத்தில் குறிப்பிட்டிருந்தார்.

நாற்பத்தைந்து கோடி ஜனங்கள் வாழும் சீனாவை விரோதித்துக் கொள்ள பிரிட்டன் விரும்பவில்லை. அதனால் தான், எப்படியாவது சீனாவுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆட்லி ட்ருமனிடம் வற்புறுத்தினர்.

ருஷ்யாவின் படைப்பலத்துடன் ஒப்பிடும் போது மேற்கு ஐரோப்பிய நாடுகளின் படைப்பலம் மிகக் குறைவு என்பதை இராணுவ நிபுணர்கள் புள்ளி விவரங்களுடன் வெளியிட்டு வருகிறார்கள்.

எந்த நிமிஷத்திலும் மேற்கு ஐரோப்பிய தேசங்களின் மீது படையெடுக்கக் கூடிய பலத்துடன் 100 டிவிஷன்களுக்கு மேற்பட்ட ருஷ்யாவின் சைன்யங்கள் தயாராகக் காத்திருக்கின்றன.

ஒரு டிவிஷன் என்பது சுமார் 20,000 வீரர்களும், டாங்கிகளும், பீரங்கிகளும், பின் தொடர்ந்து செல்வதற்குரிய லாரிகளும், ஆகாச விமானங்களும் சேர்ந்த ஒரு தனிச் சைன்யமாகும்.

இப்படிப்பட்ட ருஷ்யாவின் 100 டிவிஷன்களை எதிர்ப்பதற்கு மேற்கு ஐரோப்பாவின் மொத்தம் இருபது டிவிஷன்கள் கூடத் தற்சமயம் இல்லை!

பெல்ஜியம், ஹாலந்து, ஸ்விட்ஜர்லந்து, டென்மார்க், நார்வே நாடுகளின் உள்ள படைப் பலம் மிகச் சொற்பம்.

பிரான்ஸ் தேசம் சென்ற இரு யுத்தங்களில் சொப்பவும் ஆள் பலத்தை இழந்துவிட்டது. பிரஞ்சு சைன்யங்களில் பெரும் பகுதி இப்போது இந்தோ—சைனாவில் அகப்பட்டுக் கொண்டு விழிக்கின்றது.

இந்நிலையில் மகத்தான படைப்பலம்பொருந்திய ருஷ்யா மேற்கு ஐரோப்பா மீது படையெடுக்க முற்படுமோ என்று பிரிட்டன் கலங்குவது இயற்கையே.

அதனால் தான் கொரியாவிலும் சீனாவிலும் ஆழந் தெரியாமல் அமெரிக்கா காலை விட்டுக்கொண்டு விடக்கூடாது என்று பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள் இடைவிடாது சொல்லி வருகிறார்கள். அத்துடன், அமெரிக்க - பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் உள்ள மேற்கு ஜெர்மனியில் மீண்டும் ஜெர்மன் சைன்யங்களை அமைக்க வேண்டும் என்றும் மேற்படி இராஜ தந்திரிகள் சொல்லுகிறார்கள்.

ஆனால் வெகு காலமாக ஜெர்மனியின் சைன்ய பலத்துக்கு இலக்காகி வந்துள்ள பிரான்ஸ் இந்த யோசனையைக் கண்டு மிரளுவது இயல்பே யாகும்.

இவ்வளவு தர்ம சங்கடமான, நெருக்கடியான நிலைமையில் தளபதி ஐஸன்ஹோவர் மேற்கு ஐரோப்பிய சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதிலிருந்து, அமெரிக்கா தன்னுடைய பூரண படைப்பலத்தை மேற்கு ஐரோப்பாவுக்கு அனுப்பத் தீர்மானித்திருக்கிறது என்றே ஏற்படுகிறது.

அமெரிக்கப் படைகள், பிரிட்டிஷ் படைகள், பிரஞ்சுப் படைகள், பெல்ஜிய - ஹாலந்துப் படைகள், புதிதாக அமைக்கப்போகும் ஜெர்மன் படைகள் எல்லாவற்றுக்கும் ஜெனரல் ஐஸன்ஹோவர் மகோன்னத சேனாதிபதியா யிருப்பார். இவ்வளவு வெவ்வேறு தேசப் படைகளையும் ஒன்றாகத் திரட்டி அமைத்து யுத்த சந்நத்தமாக்குவார். அதாவது ருஷ்யாவின் ராட்சத சைன்யத்தை எதிர்த்து நிற்பதற்குத் தகுதியாகச் செய்வார்.

சுருங்கச் சொன்னால், குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் இரண்டு மாபெரும் சைன்யங்கள் வந்து திரண்டுகொண்டிருந்த கட்டத்துக்கு இன்றைய தினம் உலகம் வந்து சேர்ந்திருக்கிறது. இதிலிருந்து உலகத்துக்கு மேலும் பயங்கரப் பேரபாயம் ஏற்படாமல் எல்லாம் வல்ல இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்.

# மழையும் தூவானமும்

இந்த வருஷத்தில் மழை அபாயமாக ஏமாற்றி விட்டது. மழையே எப்போது பெய்யவில்லையோ, அப்போது தூவானத்தைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை.

ஏதோ, சுவாமி ஐயப்பன் சபரி மலையிலிருந்து கீழிறங்கி வந்து தமிழ் நாட்டில் பல இடங்களிலும் காட்சி தந்த புண்ணியத்தினால், ஆங்காங்கு கொஞ்சம் மழை பெய்து, வாடிய பயிர்கள் பிழைத்தன என்பது பக்தர்களின் நம்பிக்கை.

இது எப்படியானாலும், சென்னையில் இந்த வருஷம் கான மழைக்குக் குறைவில்லை. கான மழைக்குப் பின்னால் தூவானம் தொடர்வது வழக்கம். கான மழைக்கு முன்னாலேயே தூவானமாகிய சங்கீதப் பிரசங்கங்கள் சக்கைப் போடாகப் பொழிந்து விடும்.

ஒரு வருஷம் சங்கீத வித்வத் சபையில் தலைமை வகித்த சங்கீத வித்வானை மற்றும் சில சங்கீத வித்வான்கள் பிரேரணை, ஆமோதனை, ஆதரணை முதலியவை செய்து பாராட்டினார்கள். அவர்களுடைய பேச்சுக்கள் பின்வரும் ரகத்தில் இருந்தன :—

**பிரேரணை செய்த பிடில் வித்வான் :—** நமது பிரம்மஸ்ரீ............பாகவதர் அவர்கள் இந்தச் சங்கீத வித்வத் சபைக்கு அக்கிராசனம் வகிக்க ரொம்பவும் லாயக்கானவர்கள். ஏனெனில், இவர் பத்து வருஷத்துக்கு முன்னால், நிறைய சங்கீதக் கச்சேரி செய்திருக்கிறார். இவர் செய்த சில கச்சேரிகளுக்கு நானே பக்கவாத்தியம் வாசித்திருக்கிறேன். ஆகையால் நிஷ்கர்ஷையாக இவர் இப்பதவிக்கு லாயக்கானவர்தான் என்பது என் ஏகோபித்த அபிப்பிராயம்.

**ஆமோதித்த வாய்ப்பாட்டு வித்வான் :—** எனக்கு முன்னால் பிரேரணை செய்த பிடில் வித்வான் சொல்ல வேண்டியதை யெல்லாம் சவிஸ்தாரமாகச் சொல்லி விட்டார். வேறு புதிதாக நான் என்ன சொல்லப் போகிறேன்! ஆகையால் இவர் கட்டாயம் இந்தச் சபைக்கு அக்கிராசனம் வகிக்க லாயக்கானவர் என்று ஆமோதிக்கிறேன்.

**ஆதரித்த இன்னொரு வித்வான்:—** இன்றைய அக்கிராசனம் வகிக்கப் பிரேரேபணை செய்யப்பட்டிருப்பவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் சங்கீத வித்வானா யிருப்பதோடுகூட ஆயுர்வேத வைத்தியம் நன்றாய் அறிந்தவர். ஆகையால் இவர்தான் இந்தப் பதவிக்கு லாயக்கானவர் என்று வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

**மேலும் ஆதரித்த ஒரு ரசிகர்:—** எனக்கு முன்னால் பேசிய வித்வான் இவருக்கு வைத்தியம் தெரியும் என்று சொன்னார். வைத்தியம் மட்டுமன்றி இவருக்கு ஜோஸியத்திலும்கூடப் பரிச்சயம் உண்டு என்று நான் நிச்சயமாக அறிவேன். ஆகையால் மனப்பூர்வமாக இவரை இப்பதவிக்கு நான் ஆதரிக்கிறேன்.

**இன்னொரு ரசிகர் :—** இந்தச் சங்கீத வித்வானுக்குக் காது நன்றாகக் கேட்டுக்கொண்டிருந்த காலத்தில் சுருதியோடு சேர்ந்து பாடிக் கொண்டிருந்தார். இதனால் தற்போது இவர் சுருதியோடு சேர்ந்து பாடுகிறதில்லை என்று நான் சொல்லவில்லை. இவர் தற்போது பாடுகிறதே இல்லை என்றுதான் சொல்லுகிறேன். ஆகையால் இந்த வித்வத் சபைக்குத் தலைமை வகிக்க இவரே லாயக்கானவர்!

இம்மாதிரி தலைமை தாங்கப் போகும் வித்வானைப் பற்றி மற்றச் சங்கீத வித்வான்களும் ரஸிகர்களும் மனதாரப் புகழ்ந்து பாராட்டிப் பேசுவார்கள்.

பிறகு அக்கிராசன பீடத்தில் அமரும் சங்கீத வித்வான் நாதப்பிரம்மத்தில் ஆரம்பித்து, குண்டலினி சக்தியை எழுப்பி விட்டு, தியாகப் பிரம்மத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, அபிநவ தியாகப் பிரம்மம் என்ற பட்டத்தை

யார் தலையிலாவது சூட்டி விட்டு, என்ன சொன்னார் என்பது யாருக்கும் தெரிய முடியாதபடி பேசிவிட்டு உட்காருவது வழக்கம். அவர் பேசுகிறது என்ன என்பதைப் பற்றிச் சபையில் கூடியுள்ள ரஸிகர்களும் அதிகமாகக் கவலைப்படாமல் தங்களுக்குள் சள சள வென்று பேசிக் கொண்டிருப்பார்கள். அன்றைய தினம் பாடவேண்டிய இளம் வித்வான் கச்சேரி ஆரம்பித்ததும் மள மள வென்று எழுந்து போவார்கள்.

அந்த வழக்கத்துக்கு மாறாக, இந்த ஆண்டில் சங்கீத சபைகளுக்குத் தலைமை வகித்தவர்களின் பிரசங்கங்கள் பெரும்பாலும் பொருள் பொதிந்தனவாயும் எல்லோருக்கும் எளிதில் விளங்குவனவாயுமிருந்தன.

சங்கீத வித்வத் சபைக்குத் தலைமை வகித்த பிடில் வித்வான் கரூர் சின்னசாமி ஐயர் அவர்கள் வயலின் வாத்தியத்தை எப்படிக் கையாள வேண்டும், எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பது பற்றி விரிவாகப் பேசியிருக்கிறார்.

பின்னர், கர்நாடக சங்கீதத்தை அதன் தூய்மை கெடாமல் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தைப் பற்றி வற்புறுத்தியிருக்கிறார். கர்நாடக சங்கீத பாணியையும் ஹிந்துஸ்தானி பாணியையும் கலந்து குட்டை குழப்புவது சரியல்ல என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்.

“தற்காலக் கச்சேரிகளில் இராக ஆலாபனை கற்பனை ஸ்வரங்கள் இவைகளைப் பற்றிப் பேசும்பொழுது நான் கொஞ்சம் கண்டிப்பாகத்தான் பேச வேண்டியிருக்கிறது” என்று ஸ்ரீ சின்னசாமி ஐயர் பயமுறுத்தியிருந்தாலும், பிறகு பார்க்கும்போது அவ்வளவாக யாருடைய மனதும் புண்படும்படி அவர் கண்டிப்பாகப் பேசிவிடவில்லை யென்பதைக் கவனித்து ஆறுதல் அடைகிறோம்.

கர்நாடக சங்கீதத்துக்குப் பொருத்தமில்லாத கோஷ்டிகான முறையை அகில இந்திய ரேடியோ கையாளுவதைப் பற்றி ஸ்ரீ சின்னசாமி ஐயர் வருத்தப்பட்டிருப்பது நமக்கும் வருத்தமளிக்கிறது. இது விஷயத்தில் நாமும் மிகக் கண்டிப்பாகவே இருக்க வேண்டுமென்று தோன்றினாலும், “நமது சுதந்திர பாரத சர்க்கார் நடத்தும் அகில இந்திய ரேடியோவாயிற்றே! அதிகமாகக் கண்டித்தால் மேலும் மோசமாய்ப் போய்த் தொலைந்துவிடுமே!” என்று எண்ணித்தான் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டி வருகிறது.

ஸ்ரீ சின்னசாமி ஐயர் சங்கீத வித்வான்களுக்கென்று இரண்டு யோசனைகளைச் சொல்லியிருக்கிறார். ஒன்று சங்கீதக் கலையை வர்த்தகப் பொருளாக மதிக்கக் கூடாது என்பது. இரண்டாவது, மியூஸிக் அகாடமி சர்ச்சைகளில் நிறைவேறிய முடிவுகளைப் பின் பற்றி வித்வான்கள் பாடவேண்டும் என்பது. இரண்டு யோசனைகளையும் சங்கீத வித்வான்கள் பரிபூரணமாக ஆதரிப்பார்கள்; ஆனால் ஒருவரும் காரியத்தில் நிறைவேற்ற மாட்டார்கள்.

• • •

கோகலே மண்டபத்தில் நடந்த 18-வது தென்னிந்திய சங்கீத மகாநாட்டுக்குப் பாபநாசம் சிவன் தலைமை வகித்து உணர்ச்சி ததும்பிய காரசாரமான பிரசங்கம் ஒன்றைச் செய்தார். தயவு தாட்சண்யமின்றிச் சில உண்மைகளை எடுத்துச் சொன்னார். ரேடியோவையும் சினிமாவையும் எதிரில் நிறுத்திக் கொண்டு தமது தளர்ச்சியடைந்த கரங்களினால் இந்தக் கன்னத்தில் நாலு அறை, அந்தக் கன்னத்தில் நாலு அறை கொடுத்தார். “இனிமேல் கர்நாடக சங்கீதத்தைக் கொலை செய்யாதீர்கள்!” என்று எச்சரித்தார்.

முற்கால சங்கீத சபைகளுக்கும் தற்கால சங்கீத சபைகளுக்கும் உள்ள வேற்றுமையைப் பாபநாசம் சிவன் எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார், பாருங்கள் :—

**“ஏற்கெனவே சங்கீதத்தின் தரம் காந்தாரி கர்ப்பம்போல் சிதைந்து ஒரு ரூபாயைத் தம்பிடிகளாய் மாற்றி 192 பேர் பிரபுக்களானால் போலக் கீழ்த்தரமாய் விட்டது. இப்படிப் போலி சங்கீதம் அதிகமாய்ப் பரவியதால் லட்சண சங்கீத வித்துவான்களுடைய கச்சேரிகளும் குறைந்து விட்டன. பழைய நாளில் சங்கீதம் கேட்ட முறை, கச்சேரிக்குச் செல்லும் ஜனங்கள் ஆலயத்திற்குப் போவது போல சிரத்தை, பக்தி ஆவல்களுடன் கூடுவார்கள். முன் வரிசையில் ரஸிகர்களும் வித்துவான்களும் அமர்வார்கள். வித்துவான்கள் நாதத்துடன் லயிக்கும் பொழுதும் மனதிற்கெட்டாத கற்பனைகளை வர்ஷிக்கும் பொழுதும் ஜனங்களும் பரவசமாய் அநுபவிப்பார்கள். ஏதாவது விசேஷமாய் ஒரு பாட்டை அவர்களிடம் கேட்க விரும்பினால் கச்சேரி முடியும் சமயத்தில் வித்வானுடைய சௌகரியத்தை உணர்ந்து இரகசியமாய் விநயத்துடன் கேட்பார்கள். இப்பொழுது தலைகீழாக மாறிவிட்டது. வித்துவான்கள் அப்ளாஸிற்கு ஆசைப்பட்டு புதுக் கற்பனைகளில் மனம் செலுத்தாமல் பெரும்பாலும் பாடினதையே பாடுவதும் ஒவ்வொரு வித்வான்களிடமும் பக்ஷபாதமான பிரியமுள்ளவர்களே கூடுவதும் பல பெரியோர்கள் கூட பாடகர் ரஸமாய்ப் பாடினாலும் பக்கத்திலுள்ளவரோடு பேசுவதும் ரஸிக ஜனங்களுக்கு இதுபோல் மனதை ஆயாஸப்படுத்தும் நிகழ்ச்சிகள் நடப்பதுமாயிருக்கிறது. சில கனவான்கள் சபாக் கச்சேரிகளுக்கு வரும் பொழுது ஒரு நியூஸ் பேப்பரைக் கொண்டு வருவதும் உண்டு. வித்துவான்கள் பக்தியோடு நாதப்பிரம்ம த்யானத்துடன் ஈச்வர சிந்தனையுடன் கச்சேரி செய்தால் சபையோர்களும் பக்தி சிரத்தையுடன் கேட்பார்கள்.”**

பாபநாசம் சிவன் பரம பக்திமான். அவருடைய பக்தி மயமான உள்ளத்திலிருந்து உயர்ந்த சங்கீதப் பண்புடனே கூடிய அருமையான சாஹித்யங்கள் தமிழ் நாட்டுக்குக் கிடைத்திருக்கின்றன. எனவே, சிவன் அவர்கள் சங்கீதக் கலையைப் பக்தி சிரத்தையுடன் போற்றி வளர்க்க வேண்டும் என்று வற்புறுத்தியிருப்பது இயல்புதான்.

• • •

சித்திரை விழாவுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ சுத்தானந்த அடிகளின் தலைமை உரை, இசைக் கலைப் பற்றிய சொற்பொழிவுகளுக்கே ஓர் இலக்கியமாக அமைந்திருக்கிறது. அந்தச் சொற்பொழிவையே உணர்ச்சி மயமான ஓர் இனிய இசைப் பாடல் என்று சொல்லலாம்.

சுவாமிகள் தலைமை உரையை ஆரம்பித்திருக்கும் பாணியே பிரமாதமாயிருக்கிறது:

**தமிழ் நாட்டு மாணிக்கங்களே,**

**வணக்கம்! எல்லாரும் வாழ்க! எந்தாய் வாழ்க! ஒரு காலம் வங்காளத்தில் இந்திப் பாடல்களே முழங்கின. ராஜா ஸர் சுரேந்திர நாத டாகுர் எழுந்தார். புலவர் மணிகளை அழைத்தார். ஆதரித்தார். வங்கத்தில் பாடச் சொன்னார். எழுந்தது வங்க சாகித்ய சபை. அதன் ஆண்டுவிழாவுக்கு ஒருநாம் பங்கிம் சந்திர சட்டர்ஜி தலைமை வகித்தார். அப்போது ஓர் இளங் கவி உருக்கமாக வங்க மாதாவுக்குப் பாமாலை சூட்டினான். பங்கிம் சந்திரர் தமக்குச் சூட்டிய மாலையை அந்த இளங் கவிக்கு அன்புடன் சூட்டித் தட்டிக்கொடுத்தார். சபை வியந்தது. "அன்பர்களே, நான் இந்தச் சிறுவனுக்கு மாலை சூட்டவில்லை, வங்கமாதாவுக்கே ஜயமாலை சூட்டினேன்" என்றார் பங்கிம் சந்திரர். அந்த இளைஞனே கவியரசு ரவீந்திர நாத டாகுர்......**

சங்கீதமானது பூமியையும் வானத்தையும் அளக்க வல்லது என்பார்கள். அவ்விதமே சுவாமிகளின் சொற்பொழிவும் வானையும் பூமியையும் அளாவி நிற்கிறது. உலக சரித்திரத்தை ஊடுருவி அலசி ஆராய்கிறது. ஜெர்மானியர் ஜெர்மன் பாஷையிலும், பிரஞ்சுக்காரர் பிரஞ்சு பாஷையிலும் பாட நேர்ந்த வரலாற்றைச் சொல்லுகிறது. தமிழிசை முற்காலத்தில் அடைந்திருந்த வளர்ச்சியையும் கூறுகிறது.

"வான் மழையை யார் தடுப்பார்?
மாகடலை யார் அடைப்பார்?"

அதுபோல் தமிழர் தமிழிசை வளர்ப்பதைத் தடுப்பவர் யார்!—என்று கேட்கிறார் அடிகள்.

"இன்று தமிழ் புது மலர்ச்சி பெற்றது. நமது கலைச் சோலையில் ஏராளமான கிளிகள் இளந் தமிழ் பேசுகின்றன. புதுக் குயில்கள் வசந்த கீதம் பாடிப் பழைய சோர்வை மாற்றுகின்றன. உல்லாச மயில்கள் ஆடுகின்றன. தமிழகம் எந்த நாட்டுக்கும் தாழ்வில்லை. இங்கே மக்கட் பண்பு உண்டு; கலைப் பண்பு உண்டு" என்று பெருமிதத்துடன் அறையும் அடிகள், "நமக்கு இன்னும் பெரிய கடமைகள் உள்ளன. இசை யரங்குகள் இனிய சத்தச் சந்தை யாகாமல் நாட்டுக்குப் பயனுள்ள கலா நிலையங்களாக வேண்டும்!" என்று சுட்டிக் காட்டி யிருக்கிறார்.

அடிகளின் பிரார்த்தனை நிறைவேற வேண்டும் என்று மனமார விரும்புகிறோம்.

துரதிர்ஷ்டவசமாக, இந்த வருஷத்துச் சங்கீத விழாக்கள் பெரும்பாலும் இனிய சத்தச் சந்தைகளாகக்கூட நடைபெறவில்லை. இனிமையில்லாத சத்தச் சந்தைகளாகவே பெரிதும் நடைபெற்றன!

இனிமையற்ற சத்தச் சந்தைகள் இனிமையான சத்தச் சந்தைகளாக மாறி, பின்னர் உணர்ச்சி நிறைந்த இசைக் கலை அரங்குகளாகவும் மாறவேண்டும் என்று சங்கீத தேவதையைப் பிரார்த்திக்கிறோம்.

சுவாமி சுத்தானந்தரின் யோக தபோ சக்திகள் நமக்குத் துணை புரியுமாக.

# அங்கப் போர்

"தாங்கள் மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்க வேண்டுமா! நாங்கள் வழிசொல்லித் தருகிறோம். எழுதப்படிக்கத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை. கடிதங்களை ஆங்கிலத்தில் எழுதவும். ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கும் மார்க்கம் அடங்கிய புஸ்தகம் விலை ரூபாய் ஐந்துதான்."

—ஒரு விளம்பரம்.

எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்கும் போது ஆங்கிலத்தில் மட்டும் கடிதம் எழுதுவது எப்படி!

★

"ஆகாகான் தென்கிழக்கு ஆசியாவில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறாராம்." —செய்தி.

ஆகா! பேஷாகச் செய்யட்டுமே. யார் வேண்டாம் என்பது!

★

"மக் ஆர்தருக்கும், ட்ரூமனுக்கும் யுத்த வெறி." —ஒரு செய்தித் தலைப்பு.

கொரியா போரில் வெற்றிதான் அடையவில்லையே, பாவம் வெறியாவது அடைந்து விட்டுப் போகட்டும்.

★

"குழந்தை புஸ்தகத்தைக் கிழிக்கிறதா! நீங்கள் திகைக்க வேண்டாம். குழந்தையை நல்வழிப் படுத்தும் முறைகளை இந்தப் புத்தகம் சொல்லுகிறது." —ஒரு விளம்பரம்.

இந்தப் புத்தகத்தை வாங்கும் நேயர்கள் தங்கள் தங்கள் பிரதிகளை குழந்தைகள் கைக்கு எட்டாத உயரத்தில் வைப்பார்கள் என நம்புகிறோம்!

★

"பிரபல அமெரிக்க நீச்சல் அழகி எஸ்தர் வில்லியம்ஸ் மிகவும் விலையுயர்ந்த தனது மேலாடையை அஸ்ஸாம் பூகம்ப நிவாரண நிதிக்குக் கொடுத்து விட்டாராம்."

—ஒரு செய்தி.

நம் நாட்டு நடிகைகளும் எஸ்தர் வில்லியம்ஸைப் பின்பற்றினால் என்ன என்கிறார் ஒரு சினிமா விசிறி.

★

சென்னை சர்க்கார் இனி தங்கள் தஸ்தாவேஜுகளிலும் கடிதங்களிலும் கல்யாணமாகாத ஸ்திரீகளை "குமாரி..." என்றும் கல்யாணமானவர்களை "ஸ்ரீமதி..." என்றும் குறிப்பிடப் போகிறார்களாம்.

சர்க்காருடைய இந்த அறிக்கையைப் பற்றி பலத்த விவாதம் பத்திரிகைகளில் நடந்து வருகிறது. கல்யாணம் ஆகாவிட்டால் ஸ்ரீமதி என்று ஏன் சொல்லக் கூடாது! முப்பது வயது வரை ஒரு ஸ்திரீக்குக் கல்யாணம் நடக்காவிட்டால் அவளை குமாரி என்று அழைக்கலாமா! என்றெல்லாம் கேள்விகள் கேட்கப்படுகின்றன. சௌபாக்கியவதி என்ற அடைமொழியை எல்லா ஸ்திரீகளுக்கும் சேர்க்கலாம் என்கிறார்

ஒருவா. தேவி, பராசக்தி, பரதேவதை, பவதி என்றெல்லாம் புதுப்புது அடைமொழிகள் உருவாகின்றன!

கல்யாணமாகாத புருஷனை குமாரன் என்று ஏன் அழைக்கக் கூடாது என்கிறார் ஒருவர். கல்யாணமான புருஷன் எப்படி ஸ்ரீமான் ஆவான் என்று அவர் கேட்கவில்லை. அந்த மட்டில் நல்ல காலம்தான்.

இந்தக் குழப்பங்களை எல்லாம் தீர்ப்பதற்கு நமது தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் வழியைப் பின்பற்ற வேண்டுமென்பது என்னுடைய யோசனை. பல நூறு வருஷங்களுக்கு முன்பே அவர்கள் ஸ்திரீகளை ஏழு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவர்களுடைய வயதை ஒட்டி எழுந்த பிரிவினைதான். அந்த முறையைப் பின்பற்றினால் நமது தமிழ் வழக்கத்தைக் கடைபிடித்த பெருமை நமது சர்க்காருக்கு ஏற்படும். சுமார் ஐந்து வயதுவரை பெண்களைப் பேதை என்றும், பிறகு பன்னிரண்டு வயது வரை பெதும்பை என்றும், பிறகு பதினைந்து பதினாறு வயது வரை மங்கை என்றும், இருபது வயது வரை மடந்தை என்றும், இருபத்தைந்து வரை அரிவை என்றும், முப்பத்தைந்து வயது வரை தெரிவை என்றும் பிறகு பேரிளம் பெண் என்றும் நமது பிரபந்தங்களிலிருந்து அறிகிறோம். இதே முறைப்படி சர்க்கார் உத்தியோகங்களுக்கு 'மடந்தைப் பருவமும், அரிவைப் பருவமும் உள்ளவர்களை விண்ணப்பித்துக் கொள்ளவும். ஷெட்யூல்ட் வகுப்பினருக்கு மாத்திரம் தெரிவைப் பருவம் எட்டி இருந்தாலும் பாதகமில்லை என்று விளம்பரங்கள் செய்யலாம் அல்லவா!

இதெல்லாம் சரிதான் பூனைக்கு மணி யார் கட்டுவது என்பது போல ஸ்திரீகளின் வயதை யார் தெரிந்து கொள்வது என்று கேட்கிறீர்களா! அந்தக் கவலையை சர்க்காரே பட்டுக் கொள்ளட்டும்!

★

"ஓடும் ரயிலில் பிரசவம்."

—ஒரு செய்தித் தலைப்பு

ஓடும் ரயிலில் பிறந்த இந்தக் குழந்தை பெரியவனானபின்பு, உத்தியோக மனுவில் 'பிறந்த ஊர்' என்பதற்கு எதிரில் என்ன எழுதுவானோ என்பது இப்பொழுது நமக்குக் கவலையாக இருக்கிறது!

★

"கைக் குட்டை உற்பத்தியாளர் சங்கக் கூட்டம் ஒன்று நடந்ததாம்." —ஒரு செய்தி

சோகரஸமான கட்டங்கள் பல உள்ள படங்கள் எடுக்கவேண்டுமென சினிமா முதலாளிகளைக் கேட்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருப்பார்கள் என நாம் நினைக்கிறோம்!

★

"செயற்கை அரிசி செய்ய ஐக்ய கேரள ராஜ்யம் பரீக்ஷார்த்தமாக ஒரு திட்டம் போட்டிருக்கிறதாம்." —செய்தி.

இந்தச் செயற்கை அரிசியைக் கொண்டு சமைக்கப்படும் அன்னத்தைப் புசிக்க செயற்கை மனிதனையும்கூட அவர்கள் சிருஷ்டிக்கத் திட்டம் போட்டால் தேவலை.

"திருத்தணி திருப்புகழ் திருப்படி திருப்பணி"

—ஒரு செய்தித் தலைப்பு.

மூன்று மோனை மோகம் முற்றி முதிர்ந்து விட்டது!

★

"ஜீவகோடியில் மனிதனே அதிக அறிவு படைத்தவனென்று சொல்லமுடியாது என்று நோபல் பரிசுபெற்ற அணுகுண்டு விஞ்ஞானியான ஹரால்டு கிளெய்டன் யூரே என்பவர் கூறினார்." —மியாமி செய்தி.

மனிதன் எப்பொழுது அணு குண்டைக் கண்டுபிடித்தானோ அப்போதே அவனது அறிவைப்பற்றிச் சந்தேகிக்க வேண்டியது தானே!

★

"வைகை திட்டத்தில் சென்னை சர்க்கார் மிகவும் சிரத்தை கொண்டுள்ளார்கள்."

—ஒரு செய்தி.

ஒரு திட்டத்தில் கைவைத்து அதைச் செய்யத் தொடங்கும்போது சிரத்தை கொள்ளாவிட்டால் முடியுமா!

★

"இன்று அஸெம்பிளியில் ஒரு மெம்பர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் உணவு மந்திரி வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்."

—அஸெம்பிளிச் செய்தி.

உணவு மந்திரியின் வாயில் கொழுக்கட்டையா இருக்கிறது என்று அந்த மெம்பர் நினைத்து ஆச்சரியப்பட்டிருக்கலாம்!

★

"இரண்டு கைக்குண்டுகளையும், பன்னிரண்டு துப்பாக்கி ரவைகளையும் வைத்திருந்த பர்மா போலீஸ் அதிகாரி ஒருவரை மணிப்பூர் போலீஸார் கைது செய்தார்களாம்."

—மணிப்பூர் செய்தி

மணிப்பூர் போலீஸாரின் மணியான இந்த நடவடிக்கையை மனப் பூர்வமாக நாம் பாராட்டுகிறோம்.

★

"இந்தியாவில் கரிபஞ்சம் இல்லை. இன்னும் 150 வருஷங்களுக்கு வேண்டிய கரி இருக்கிறது என்று பார்லிமென்டில் சுரங்க இலாகா உதவி மந்திரி கூறினார்." —புதுடில்லிச் செய்தி.

காசைக் கரியாக்குகிறவர்கள் நம் நாட்டில் இருக்கிறவரையில் கரிக்கு என்றுமே பஞ்சம் இல்லை என்கிறார் ஒருவர்.

★

"பிளாஸ்டிக் உருப்புகளைக் கொண்டு செயற்கை மூக்கு, காதுபோன்ற அவயவங்களை பிரிட்டிஷ் ஸர்ஜன் ஒருவர் அமைத்து வருகிறாராம். குரூபிகள் அழகாக மாறுகிறார்களாம்."

—லண்டன் செய்தி

இருதய மில்லாதவர்களுக்கு இருதயம் கொடுக்க இவரால் முடியுமா என்று கேட்கிறார் ஒரு அப்பாவி!

# அமர சிருஷ்டி

**வ. சா. நாகராஜன்**

இரவு எட்டரை மணி இருக்கும். மயிலாப்பூர் கடற்கரையில் அந்த வேளையில் என்னைத் தவிர வேறு யாருமே இல்லை. வானத்து மீன்கள் பூவுலகை நோக்கிக் கண் சிமிட்டின. பக்கத்தில் பொங்கும் கடல் கம்பீரமாகக் கர்ஜனை புரிந்து கொண்டிருந்தது.

நான் ஒரு கதாசிரியன் ஆனபடியால் ஏதாவது ஒரு புதுக் கதை புனையலாம் என்று எண்ணிக் கற்பனை வலையை விரித்து வீசிக்கொண்டிருந்தேன். ஆனால் என்னுடைய எண்ணங்களையெல்லாம் கவர்ந்து, என்னைத் தன் வசமாய் இழுத்த ஒரு பாடல் தூரத்தில் யாரோ ஒருவர் வாயிலிருந்து வெளிவந்தது. அதைக் கேட்டது தான் தாமதம், நான் அப்படியே சில நிமிஷம் சமைந்து போனேன். திரும்பவும் என் காதில் அப்பாட்டின் ஒலி கேட்ட போது என் பார்வையில் பைத்தியக்காரர் போல் ஒருவர் தென்பட்டார். என்னை அவர் அணுகி வந்து கொண்டிருந்தார். பாட்டை மறுபடியும் பாடினார். கேட்டுக் கிறுகிறுத்தது என் மனம்.

மனிதன் எத்தனையோ பாட்டுக்கள் பாடலாம். ஆனால் அவ்வளவு பாட்டுக்களிலும் ஒரே ஒரு பாட்டுத்தான் அமர சிருஷ்டி என்று சொல்லக் கூடியதாக அமையும். பரதகலை கைவந்த பெண் ஒருத்தி பல பாடல்களுக்கு அபிநயம் பிடிக்கலாம். ஆனால் ஒரு பாட்டுக்குத் தான் அவளுடைய அபிநயம் அமர சிருஷ்டியாகச் சோபிக்க முடியும்! அமர சிருஷ்டி என்று சொல்லும்படியாக ஒரே ஒரு கதையைத்தான் ஒரு எழுத்தாளனால் தன் வாழ்நாளில் எழுத முடியும். தலை சிறந்த பாடகர்கள் கூட ஏதாவது ஒரே ஒரு ராகத்தில்தான் அவர்களுடைய திறமை அத்தனையும் கொட்ட முடியும். அமரசிருஷ்டி என்றால் ஒன்றே ஒன்றுதான்.

அவருடன் பேசவேண்டும் என்று இருந்த ஆவல் அதிகரித்தது. மெதுவாக எழுந்து அவரைப் பார்த்து, "நமஸ்காரம்" என்று கைகுவித்தேன். பிறகு, "மன்னிக்க வேண்டும்; தங்கள் தனிமையைக் கலைக்கிறேன். அந்தப் பாடலை இன்னொரு முறை பாடுவீர்களா?" என்று கேட்டேன்.

"ஏன், ஐயா, நீரும் என்னைப் போல் பைத்தியமாகிவிடவா பார்க்கிறீர்!" என்று நிதானமாகக் கேட்டார் அவர். அவரை நான் கூர்ந்து நோக்கினேன்.

அவருடைய இந்தக் குரலை எங்கே கேட்டிருக்கிறேன்? அவருடைய முகம் கூட நன்றாகத் தெரிந்த முகமாக இருந்தது. முதலில் சரியாக ஞாபகம் வரவில்லை. தலையைப் பிடித்துக் கொண்டு யோசனை செய்தேன்.

"நீங்கள்......நீங்கள் திருமழிச்சன்னம் தங்கப்பன் அல்லவா?" என்று கேட்டேன் ஆவலுடன்.

அவருடைய முகம் சற்றுக் கறுத்தது அந்த இருளிலும் கூடத் தெரிந்தது.

"நீவகள்......" என்று ஆரம்பித்தார்.

"என்னைத் தெரியவில்லையா? பண்ணையார் அமராவதியின் பிள்ளை தியாகு......! தெரியவில்லையா?" என்றேன்.

அவ்வளவு தான்; தங்கப்பன் அப்படியே என் இரண்டு தோள்களையும் பிடித்துக் கொண்டு விட்டான்.

*

தங்கப்பனும் நானும் ஒரே பள்ளிக்கூடத்தில், ஒரே வகுப்பில், ஒரே பெஞ்சியில் சேர்ந்து உட்கார்ந்து படித்தவர்கள். கும்பகோணத்துக்குக் கிழக்கே காவேரிக் கரையில் அமைந்தது திருமழிச்சன்னம் என்ற எங்கள் கிராமம். உள்ளூர்ப் பள்ளிக்கூட வாழ்க்கை ஒருவாறு முடிந்ததும் மேற்கொண்டு படிப்பைத் தொடர, இருவரும் கும்பகோணத்துக்குச் சென்றோம்.

தங்கப்பன் எங்கள் ஊர் மிராசுதார் நடேச பிள்ளையின் மகன். கண்டிப்பும், கண்காணிப்பும் நிறைந்த பிள்ளை மகனை நல்ல வழியில் கொண்டுவர மிகவும் பாடுபட்டார். அவனை இங்கிலீஷ் படிப்புப் படிக்க வைத்து உயர்ந்த உத்தியோகத்தில் அமர்த்தவும் தீர்மானித்தார். தங்கப்பன் படிப்பில் சற்றுச் சூடிகையாக இருக்கவே அவனை மேல் படிப்புப் படிக்கத் தகுந்தவன் என்றும் கருதினார்.

கும்பகோணம் காலேஜில் நானும் தங்கப்பனும் மறுபடியும் ஒரே பெஞ்சுக்கு வந்து விட்டோம். முதல் இரண்டு வருஷங்கள் திருமழிச் சன்னத்திலிருந்தபடியே தினம் வண்டியில் கும்பகோணம் போய் வந்தோம். ஆனால் அடுத்து வந்த இரண்டு வருஷப் படிப்பும் மிகவும் முக்கியமானதால் கும்பகோணத்திலேயே தங்கிப் படிப்பதாக உத்தேசித்து, ஊருக்கு ஒரு கோடியில் இருந்த வீட்டை அமர்த்திக் கொண்டு படிக்க ஆரம்பித்தோம்.

இரண்டு பேருக்குமே சங்கீதத்தில் மிகப் பிரேமை. எங்கள் ஊரிலும் சரி, அல்லது பக்கத்துச் சுற்று வட்டாரத்தில்

நடக்கும் பெரிய கல்யாணங்களிலும் சரி, யாராவது பெரிய வித்வான் கச்சேரி செய்வதாகக் கேள்விப்பட்டால் நானும் தங்கப்பனும் அங்கே போகத் தவறியதே இல்லை. அதுவும் கும்பகோணத்துக்கு வந்த பிறகு எங்களுடைய சங்கீதப் பைத்தியம் அதிகமாகிவிட்டதென்றே சொல்ல வேண்டும். அந்தக் காலத்தில் தெருவுக்குத் தெரு ஹோட்டலும், ஹோட்டலுக்கு ஹோட்டல் ரேடியோவும் இல்லை. சங்கீதக் கச்சேரிகளை ரசிக்க வேண்டும் என்றால் கச்சேரி ஆரம்பிப்பதற்கு அரை மணி முன்பாகவே கச்சேரி நடக்கும் கோயில் மண்டபத்திலோ, பந்தலிலோ, கல்யாண வீட்டுக் கூடத்திலோ வந்து உட்கார்ந்து கொண்டு விடவேண்டும்.

இப்படியாக எங்களுடைய சங்கீத மோகத்துக்கிடையில் எங்களுடைய படிப்பும் வளர்ந்து வந்தது. சங்கீதத்தில் அப்படியே மூழ்கி எங்களுடைய படிப்பை நாங்கள் புறக்கணித்து விடவில்லை.

ஒரு நாள் எங்கள் சமையல்காரன் வந்து சக்கரபாணி கோயிலில் அங்கத்தின் மகள் நாட்டியமாடப் போவதாகத் தெரிவித்தான். அந்தக் காலத்தில் நாட்டியக் கச்சேரிகள் மிகவும் குறைவு. இந்தக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் 'நடனம்', 'டான்ஸ்' போன்ற அழகான பெயர் அந்தக் காலத்தில் இல்லை.

அன்று சாயந்திரம் காலேஜ் விட்டு வீட்டுக்கு வந்ததும், தங்கப்பனும் நானும் சக்ரபாணி கோயிலுக்குச் சென்றோம்.

மண்டபத்தில் கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டிருந்தது. நானும் தங்கப்பனும் கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு மேடைக்கு அருகில் சென்று உட்கார்ந்தோம்.

நாட்டியம் ஆடப் போகும் பெண் மேடைக்கு வந்ததும் கைகுவித்து நமஸ்கரித்தாள். அவள் தன்னை நோக்கித்தான் நமஸ்கரிக்கிறாள் என்று தங்கப்பன் எண்ணினான். அவன் மேடையை விட்டுத் தன் கண்களை எடுக்கவே இல்லை. பதினாறு வயது நிரம்பாத அந்தப் பெண் அன்று மிகவும் அபாரமாக ஆடினாள்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு தங்கப்பன் துள்ளிக் குதித்துக் கொண்டு என்னிடம் ஓடி வந்து "இன்று சாரங்கபாணி கோயிலில் 'அது' நாட்டியம் ஆடப் போகுதாம்" என்றான்.

"எது? அஞ்சுகமா?" என்று கேட்டேன் சிரித்தபடியே. தங்கப்பனுடைய முகம் இலேசாகக் கறுத்தது.

"அவள் மகள் கஞ்சனாவின் நாட்டியம்" என்றான் அவன்.

அன்று சக்கரபாணி கோயிலில் பித்துப் பிடித்தவன் மாதிரி உட்கார்ந்திருந்தே அவன்மீது எனக்குச் சந்தேகம் தட்டியது. இப்போது அவன் காட்டிய உற்சாகமும் அவன் பேசிய வார்த்தைகளின் வேகமும் என்னைப் பிரமிக்கச் செய்தன.

"பி. ஏ. பரீட்சைக்கு இன்னும் இரண்டு மாதம்கூட இல்லை. நீயும் நானும் நாட்டியக் கச்சேரிகளுக்குப் போய்க் கொண்டிருந்தால் அப்புறம் பரீட்சையில் என்ன ஆவது?" என்றேன்.



தங்கப்பன் விடவில்லை. "நேற்று ராத்திரி இரண்டு மணி நேரம் நான் வாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தபோது 'இன்னும் பாடு, இன்னும் பாடு!' என்று நீ என் நேரத்தை வீணடித்தது குற்றமல்லை; கோயிலுக்குப் போய் அரை மணி நேரம் உட்கார்ந்து விட்டு வருவது குற்றம்; அப்படித்தானே?" என்று என்னைத் திருப்பிக் கேட்டான்.

கடைசியில் அரை மனத்துடன் இணங்கினேன். அன்றைய தினம் சாரங்கபாணி கோயில் கூட்டம் சக்கரபாணி கோயிலில் இருந்த கூட்டத்தை விட அதிகமாக இருந்தது. தங்கப்பனை நகர்ந்து நகர்ந்து முன்

வரிசைக்கே போய்த் தாளம் போட ஆரம்பித்து விட்டான்.

"பாறு தாங்கிய காடரோ
    படுதலையரோ மலைப் பாவையர்
கூறு தாங்கிய குழகரோ
    குழைக் காதரோ குறுங்கோட்டிள
ஏறு தாங்கிய கொடியரோ
    சுடு பொடியரோ விளங்கும் பிறை
ஆறு தாங்கிய சடையரோ
    நமக்கு அடிகளாகிய அடிகளே!"

என்ற சுந்தரமூர்த்தி நாயனாரின் பாடலைப் பாடி அதற்குப் பாவம் பிடித்துக் காண்பித்தபோது அதுவரை கொஞ்சம் கேலியாகப் பேசி வந்த என் மனம்கூட உருகியது. ஆகா! கணத்துக்குக் கணம் பாவம் மாறும் அந்த முகம், முழங்கால்களுக்குக் கீழே சிற்சில சமயம் பாதங்கள் இருப்பதே தெரியாமல் மேடையின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குக் கண் இமைக்கும் நேரத்தில் ஓடும் அந்த விசித்திரம், காதுவரை நீண்டு விட்டிருந்த மை உடைய அந்தக் கண்கள்; அதிலே ஆயிரம் விளக்குகளின் ஒளி முழுவதையும் ஒன்றுகத் திரட்டி வைத்திருப்பது போன்ற வேகம்...... இவைகளை யெல்லாம் பார்த்தபடியே நான் பிரமித்து நின்றேன். தங்கப்பனே தன் நிலையையே மறந்துவிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். இரண்டு மூன்று தடவைகள் அவனை நான் கூப்பிட்டும் அவன் என் பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை.



✶

அன்று ஒருநாள் சாயங்திரம் நாங்கள் இருவரும் மொட்டை மாடியில் உட்கார்ந்திருந்தோம். வெகு நேரம் எங்களிடையே மௌனம் நிலவியது. காவிரியின் ஓட்டத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த தங்கப்பன் திடீரென்று என்னைப் பார்த்து, "தியாகு! என்னைப் பரிகாசம் செய்யாதே. கதைகளில் வருவது போலப் பேசுகிறேன் என்று கேலி செய்யாதே; என் மனம் முழுவதும் காஞ்சனாவின் மீதே லயித்து விட்டது. படிப்பும் வேறு விஷயங்களும் என் மனத்தைத் திருப்ப முடியவில்லை" என்றான்.

இதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட வில்லை. அதனால் கேலியாக, "ஆகா! அதற்கென்ன? இப்பொழுதே வேண்டுமானாலும் காஞ்சனாவை இங்கே கூப்பிட்டுக் கொண்டு வர ஆள் அனுப்பட்டுமா?" என்றேன்.

"தியாகு, நீ நினைப்பது போல அவ்வளவு கேவல புத்தியுடன் காஞ்சனாவை நான் நெருங்கவில்லை" என்றான் தங்கப்பன் கனகோபமாக. நான் ஒன்றுமே சொல்லாமல் இருந்தேன்.

"தியாகு, நீ எனக்கு இந்த உதவி செய்துதான் ஆகவேண்டும். இன்று நீ என்னுடன் சாக்கோட்டைக்கு வரவேண்டும்" என்றான்.

"ஏன், தங்கப்பா! எதற்கு இப்படி விளையாடுகிறாய்? பூரணத்தைக் கைப்பிடித்த நீ அவளுக்கு மனசாலும் துரோகம் செய்யலாமா? அதுதான் போகட்டும் என்றால், நீ இந்தமாதிரி நடவடிக்கைகளில் இறங்கி விட்டாய் என்பது உன் அப்பாவுக்குத் தெரிந்து விட்டால் அப்புறம் நீயும் நானும் கும்பகோணத்தில் இருக்க முடியுமா?" என்றேன்.

"இல்லை. தியாகு! மறுபடியும் நீ என்னைக் கேவலநோக்குடனேயே பார்க்கிறாய்.

நிச்சயமாக நான் காஞ்சனாவை எந்த விதமான கேவல எண்ணத்துடனும் நினைக்கவில்லை. அவளிடம் தஞ்சமடைந்திருக்கும் அந்த அருமையான கலைக்காகவே அவளைப்பற்றி நினைக்கிறேன். நீ நேற்று பார்க்கவில்லையா? சுந்தரமூர்த்தி நாயனாரின் 'பாறு தாங்கிய காடரோ' என்ற பாட்டுக்குக் காஞ்சனா அபிநயம் பிடிப்பதை மறுபடியும் ஒரு தடவை பார்ப்பதற்காகவே, அவளை நான் பார்க்க விரும்புகிறேன்" என்றான் தங்கப்பன்.

நான் அவனுடன் வெகு நேரம் வாதாடினேன். அவனை நம்பியிருக்கும் அவன் மனைவி பூரணத்திற்கு அவன் துரோகம் செய்வது தகாது என்று எடுத்துக் கூறினேன். என் வார்த்தைகளால் அவன் மனத்தை மாற்ற முடியவில்லை. நான் பேசப்பேச அவனுடைய பிடிவாதம்தான் அதிகமாகியது.

கடைசியில் மறுநாள் சாயங்காலம் நானும் தங்கப்பனுமாகச் சாக்கோட்டையில் காஞ்சனாவின் வீட்டைத் தேடிக்கொண்டு புறப்பட்டோம். அவளுடைய வீட்டைக் கண்டு பிடிப்பதில் அதிக சிரமம் ஏற்படவில்லை. ஏனெனில் சின்னக்குளம் ஜமீன்தாரின் ஆதரவில் இருந்த அஞ்சுகத்தின் வீடு, ஜமீன்தாரின் மதிப்புக் கேற்றவாறே இருந்தது.



வாத்தியார்:—இந்த வீட்டுக் கணக்கு உங்கள் அப்பா போட்டுக் கொடுத்திருக்கிறார். கையெழுத்தும் அவருடையது தான்.

பையன்:—இல்லவே இல்லை; எங்கள் அப்பா போடவில்லை, ஸார்!

வாத்தியார்:—நீ போட்டாய் என்றா சொல்லுகிறாய்?

பையன்:—என் அம்மா போட்டாள், ஸார்!

வாத்தியார்:—ஒரே தப்பாக இருக்கிறதே!

பையன்:—என் அம்மாவுக்கும் கணக்கு தப்பாகப் போடத் தெரியும்!

விதி! வேறு என்னவென்று சொல்வது? தங்கப்பன், தான் காஞ்சனாவைப் பற்றித் தவறாக ஏதும் நினைக்கவில்லை என்றும், தன் சகோதரி போலப் பாவிப்பதாகவும் என்னிடம் சொன்னான். உண்மையில் அஞ்சுகத்தின் வீட்டு வாசற்படி ஏறும்போதுகூட அவனுக்கு அந்த மாதிரி எண்ணம்தான் இருந்தது. ஆனால் வெளியில் வரும்போதுதான் அந்த மாதிரி எண்ணம் கொஞ்சம் தளர ஆரம்பித்தது.

அப்புறம் என்ன? தங்கப்பன் சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் சாக்கோட்டைக்குப் போவதாக ஆரம்பித்தவன், நாளடைவில் கிழமைக் கணக்கைக் கூட விட்டு விட்டான். எங்களுக்குச் சமையற்காரனாக இருந்த வேலைக்காரன் ஒரு நாள் 'ஐந்தாம்படை'யாக மாறி ஒரு நாள் எங்களிடம் சொல்லாமல் திருமழிக் கன்னத்துக்குப்போய் நடேச பிள்ளையிடம் தங்கப்பன்—காஞ்சனா உறவைப்பற்றிச் சவிஸ்தாரமாக வர்ணித்து விட்டான். அவ்வளவுதான்; நடேச பிள்ளை அலறிப் புடைத்துக் கொண்டு கும்பகோணத்துக்கு ஓடி வந்தார். வயது வந்த பிள்ளை என்று கூடப் பார்க்காமல் தங்கப்பனைத் திட்ட ஆரம்பித்தார். "இங்கிலீஷ் படிப்புப் படித்துக் குப்பை கொட்டியது போதும்; இருக்கிற சொத்தில் உன் பங்கை எடுத்துக்கொண்டு பூரணத்துடன் பிழைக்கிற வழியைப் பாரு" என்றெல்லாம் அவர் ஆரம்பித்துவிட்டார். கடைசியில், தங்கப்பன் பி ஏ.யைப் படித்துவிடட்டும் என்றும், பரீக்ஷை முடியும்வரை தானும் கும்பகோணத்திலேயே இருந்து அவனைக் கண்காணிப்பது என்றும் தீர்மானித்து விட்டார்.

தங்கப்பன்பாடு மிகவும் திண்டாட்டமாகப் போய்விட்டது. தினம் காலேஜுக்குப் போகும்போது, "தியாகு? நீ என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள். என் மனம் தவிக்கும் தவிப்பைப் பற்றி என்னவென்று சொல்வது? எனக்காவது மனத்திலிருப்பதைச் சொல்லி ஆற்றிக் கொள்ளுவதற்கு நீ இருக்கிறாய். பாவம், காஞ்சனா!......" என்று புலம்புவான்.

பி. ஏ. பரீக்ஷை வந்தது. தங்கப்பனும் ஏதோ எழுதினான். அது முடியும் வரையில் நடேச பிள்ளை மிகவும் கண்டிப்புடன் அவனைக் கண்காணித்தார். "தியாகு! நீங்கள் இங்கேயே இருந்து புத்தகம், அது இது எல்லாவற்றையும் கட்டிக்கொண்டு வந்து சேருங்கள்! நான் முதலிலே ஊருக்குப் போய்ப் பூரணத்தை அழைத்துக் கொண்டு வந்து 'இவனை ஏதாவது வழிக்குக் கொண்டு வரப் பார்க்கிறேன்' என்று தங்கப்பன் இல்லாத சமயம் பார்த்து

என்னிடம் சொல்லிவிட்டுப் பரீட்சை முடிந்த அன்று சாயந்திரமே தங்கப்பனை அழைத்துக் கொண்டு ஊருக்குக் கிளம்பி விட்டார் நடேச பிள்ளை.

இரண்டு நாட்கள் கழித்து நானும் திருமழிச் சுன்னத்துக்கு வந்து சேர்ந்தேன். இரண்டு நாட்களாகக் காஞ்சனையைப் பற்றிப் பேச முடியாதிருந்த தங்கப்பன் நான் வந்தவுடன் மறுபடியும் என்னிடம் தனிமையில் கொட்ட ஆரம்பித்து விட்டான். "தியாகு! என்னைத் தைரியமில்லாத கோழை என்று எண்ணாதே! அப்பாவுக்குப் பயந்து நடப்பதற்காக நான் இந்த மாதிரி இருக்கவில்லை. என் யோசனை எல்லாம் மேற்கொண்டு என்ன செய்வது என்பதுதான். பூரணத்தைப் பற்றியும் என்னால் நினைக்காமலிருக்க முடியவில்லை" என்று சொல்லித் தவித்தான்.

நான் வந்த மறுநாளே நடேச பிள்ளை மாயவரத்திலிருந்து பூரணத்தை அழைத்துக் கொண்டு வந்து விட்டார். அதைவிட விசித்திரம் என்னவென்றால் பூரணம் திருமழிச்சுன்னத்துக்கு வந்த இரவே தங்கப்பன் இரவோடு இரவாக எங்கேயோ போய் விட்டான்.

★

மறுநாட் காலை நடேச பிள்ளையின் வீட்டுக்கு நான் போனபோது அவர் பொரிந்து கொட்டிக் கொண்டிருந்தார். என்னால்தான் இப்படியெல்லாம் ஆகி விட்டது என்று அவருக்கு என்மேல் அசாத்திய கோபம். என்னையும் வெகுவாகக் கடிந்து கொண்டார். நான் என்னால் ஆனவரை அவரைச் சமாதானப் படுத்தினேன்.

நாட்கள் சென்றன தங்கப்பனைப் பற்றித் திட்டமான ஒரு விவரமும் தெரியவில்லை. அந்தகத்தினிடமிருந்த ஏராளமான பணத்துடன் தங்கப்பனும் காஞ்சனையுமாகச் சிங்கப்பூருக்குப் போய் விட்டதாகச் சிலர் சொன்னார்கள். 'இல்லவே இல்லை' என்றும் தங்கப்பனும் காஞ்சனையும் இலங்கைக்குக் கப்பல் ஏறிவதைத் தங்கள் கண்ணாலேயே பார்த்ததாகவும் சிலர் சொன்னார்கள் இன்னும் சிலர் தங்கப்பன் சென்னைக்கோ, பம்பாய்க்கோ, அல்லது கல்கத்தாவுக்கோ தான் நிச்சயமாகப் போயிருக்க முடியும் என்று தீர்மானமாகச் சொன்னார்கள்.

தங்கப்பன் சமாசாரம் இப்படி ஊரார் வாயில் புகுந்து புறப்படுவதைக் கண்டு கண்ணியத்தை உயிராக மதிக்கும் நடேச பிள்ளை அப்படியே மனம் வெதும்பி விட்டார். அந்த நாட்களில் எல்லாம் நான்



குழந்தை :- என்னுடைய நிலைமை ரொம்ப 'எக்கச்சக்கமாக' இருக்கிறது. விஷமம் செய்தால் அடிக்க வருகிறார்கள். விஷமம் பண்ணாமல் சும்மா உட்கார்ந்திருந்தால் எனக்கு உடம்பு ஏதோ வந்து விட்டது என்று டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போகிறார்கள்!

தான் அவருக்கு மிகவும் ஆறுதலாக இருந்தேன். முதலில் தங்கப்பனைச் சரியான வழிக்குக் கொண்டு வராததற்கு என் மீது கோபித்துக் கொண்ட அவர், நாளடைவில் என் மீது தவறு எதுவும் இல்லை என்பதை உணர்ந்து என்னிடம் மிகவும் அன்புடன் பழகினார். தன் பிள்ளையைப் பற்றிக் கண்ட கனவெல்லாம் நிறைவேறாமல் இப்படி ஆகி விட்டதைப் பற்றி நினைத்து நினைத்து, குமுறிக் குமுறிப் படுத்த படுக்கையாகி விட்டார். ஒரு நாள் அவருடைய வாழ்க்கையும் முடிந்து விட்டது.

அவர் காலமான சில நாட்களுக்கெல்லாம் பூரணம் தன் தாய் வீட்டுக்குப் போய்விட்டாள்.

மாதங்கள் ஓடின. தங்கப்பன் சமாசாரம் திருமழிச் சுன்னத்துக்கு 'ஆறின கஞ்சியாகி' விட்டது. ஜில்லா முழுவதும் அடிபட்ட சமாசாரம் அநேகமாக எல்லோருக்கும் மறந்தே போய்விட்டது. ஆனால் என்னால் அந்த மாதிரி மறக்க முடியுமா?

பூரணத்தின் பரிதாப நிலைமையை எண்ணி மனம் புழுங்கினேன். ஆகவே ஒரு நாள் அவளைப் பார்த்து ஆறுதல் சொல்ல வேண்டும் என்று மாயவரத்துக்குப் போனேன்.

தங்கப்பன் என்றைக்காவது ஒரு நாள் நிச்சயம் திரும்பி வருவான் என்றும் அதுவரையில் எப்படியாவது அவள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்றும் சொன்னேன். ஆனால் என் ஆறுதல் மொழிகளால் அந்தப்

பேதைப் பெண்ணையும் அவள் தாயாரையும் சமாதானப் படுத்த முடியவில்லை.

அடுத்தடுத்து வந்த மாதங்களில் அடிக்கடி மாயவரம் போய்ப் பூரணத்துக்கும் அவளுடைய தாய்க்கும் ஆறுதல் கூறினேன். பட்டுப்போயிருந்த பூரணத்தின் மனத்தில் என் ஆறுதல் வார்த்தைகள் பசுமையைக் கொண்டு வர முடியாவிட்டாலும் சிறிதளவுக்காவது தேறுதலைக் கொடுத்தன. தங்கப்பனைப் பற்றி நான் கூறிய புகழ் மொழிகள் அவள் உள்ளத்தில் தங்கப்பனை இன்னும் உயர்ந்த பீடத்தில் ஏற்றியது. "அவர் என்னிக்குமே திரும்பி வர மாட்டாருங்களா?" என்று ஹிருதயத்தின் அடித்தலத்திலிருந்து அவள் கேட்கும் கேள்விக்கு விடையளிக்க முடியாமல் நான் தவிப்பேன்.

ஐந்தாறு மாதங்களுக்குப் பிறகு தங்கப்பன் கல்கத்தாவுக்குப் பக்கத்தில் எங்கேயோ இருக்கிறான் என்று பராபரியாகக் காதில் விழுந்தது. அதிலிருந்து அவனைப் பற்றி இன்னும் விசாரித்து என் மனத்தில் தோன்றியபடி என்னென்னவோ வழிகளை எல்லாம் கையாண்டு பார்த்தேன். ஆயினும் தங்கப்பன் திரும்பி வரவில்லை. இதற்கிடையில் நானும் ஊரிலேயே இருந்து கொண்டு காலம் கழிக்க முடியாமல் சென்னைக்கு வந்துவிட்டேன்.

அதற்குப் பிறகு மாதங்கள் பல ஆயின. பல வருஷங்களும் நகர்ந்தன. தங்கப்பனைப் பற்றி ஒரு செய்தியும் இல்லை. இதற்கு மேல் நம்மால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்று கருதிப் பூரணத்தையும் நாளடைவில் மறந்து விட்டேன்.

கடைசியில் இருபத்திரண்டு வருஷங்களுக்குப் பிறகு தங்கப்பனை இந்தக் கோலத்தில், கடற்கரையில் அந்தப் பாட்டின் ஓசை என்னிடம் சேர்த்து வைக்கப் போகிறது என்று நான் கனவிலும் கருதவில்லை. நம் வாழ்க்கையில்தான், நாம் காணும் கனவும் நனவாவதில்லை; நனவைப் பற்றிய கனவும் எழுவதில்லையே!

★

கடலிலிருந்து குளிர் காற்று அடித்தது. கரையிலிருந்து இருநூறு அடிவரை கடலில் அலைகள் கொந்தளித்துக் குமுறிக் கொண்டிருந்தது . போலவே எங்கள் உள்ளங்களிலும் பழைய காலச் சம்பவங்கள் குமுறிக் கொண்டிருந்தன.

"தியாகு, இருபத்திரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன! என்றைக்குமே உன்னை விட்டுப் பிரியாத நான் அன்று இருந்த நிலையில் உன்னை மறந்து விட்டேன். அதற்குப் பிறகு உனக்குக் கடிதம் எழுத எவ்வளவோ தடவைகள் நினைத்தேன் ஆனால் ...... அது கிடக்கட்டும்!

அன்று நான் ஓடிப்போனேனே அதற்குப் பிறகு என்ன நடந்தது, நான் என்ன செய்தேன் என்றெல்லாம் அறிய உனக்கு ஆவலிருக்கும். உனக்கு இருக்கும் ஆவலை விட என் மனத்தில் இருப்பதைக் கொட்ட வேண்டும் என்று எனக்கு இருக்கும் வேகம்தான் அதிகமாக இருக்கிறது.

அன்று ராத்திரி பத்து மணிக்குமேல் கிளம்பிக் கும்பகோணத்துக்குப் பன்னிரண்டு மணிக்கு வந்தேன். காஞ்சனையிடம் போனவுடன் அவள் துடியாய்த் துடித்தாள்! என் தந்தையின் கண்டிப்பையும், எனக்கு இருந்த கண்காணிப்பையும் அவள் எப்படியோ தெரிந்து கொண்டிருந்தாள். இரண்டு மாதங்களாக நான் அவளைப் பார்க்காமலிருந்ததற்காக நான் அவளிடம் மன்னிப்புக் கோர ஆரம்பிப்பதற்கு முன்பாகவே அவள் என் வாயைத் தன் இரண்டு கைகளாலும் பொத்தி விட்டாள்.

அப்பொழுதே அவளிடம் என் நிலைமையைச் சொன்னேன் அவள் ஒன்றுமே சொல்லவில்லை. அவளைத் துருவித் துருவிக் கேட்டேன். "நான் சொல்ல வேண்டியது என்று ஒன்றுமே இல்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்களோ, அப்படியே கேட்கிறேன்" என்றாள். தியாகு! உண்மையில் சொல்கிறேன். நான் கொட்டுத் தாலி கட்டிய பூரணம்கூட அந்த மாதிரி சொல்லியிருக்க மாட்டாள். ஹாம் ...... அந்தக் கொலை பாதகி ...... அது கிடக்கட்டும்!

அன்று காலை நான்கு மணிக்கு நானும் காஞ்சனையும் கும்பகோணத்திலிருந்து திருச்சிப் பக்கம் போகும் 'போட் மெயி'லில் திருச்சிராப்பள்ளிக்குப் போனோம். அப்புறம் அங்கிருந்து சென்னைக்கு வந்தோம். என் கண்களுக்கு எந்தத் தமிழரைப் பார்த்தாலும் அவர் என் தந்தையின் உளவாளி மாதிரி தோன்றிற்று. ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் அவர் சென்னைக்கு வந்து எங்களைக் கொலை செய்யக்கூடத் தயங்கமாட்டார் என்று எனக்குத் தோன்றிற்று. அதனால் சென்னையிலும் அதிக நாட்கள் தங்கவில்லை. காஞ்சனையுடன் கல்கத்தாவுக்கு வந்தேன்.

கல்கத்தாவின் ஜன நெருக்கமும் அந்த அவசர வாழ்க்கையும் எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் வெகு சீக்கிரம் கல்கத்தாவுக்குக் கிழக்கே நூறு மைல்களுக்கப்பால் இருந்த மிதுனாப்பூர் என்ற ஊரில் ஒரு பாங்கியில் குமாஸ்தாவாகிக் காஞ்சனையுடன் மிதுனா நதிக்கரையில் உள்ள ஒரு அழகிய வீட்டில் குடித்தனம் வைத்தேன். (அடுத்த இதழில் முடியும்)


Rexona
Rexona
நாளுக்கு
நாள் அதிக
தெளிவுள்ள, எழி
லோங்கும் சருமத்திற்கு
ரெக்ஸோனா சோப்பை தினமும்
இரண்டு அல்லது மூன்று
தடவைகள் உபயோகித்து உங்கள்
சருமம் அதிக தெளிவோடும் பட்டுப்
போன்ற மென்மையோடும் விளங்கு
வதைக்கா ணுங்கள்.
ரெக்ஸோனா
கேடில் கலந்த சோப் இது ஒன்றே
RP. 70-172-55 TM

# வட்ட மேஜை

## நிலைமை மாறவேண்டும்

ஈழத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையோராக வாழ்வது வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய இரு மாகாணங்களிலுமே என்பது தெளிவான விஷயம். மற்ற மாகாணங்களிலெல்லாம் இவர்கள் சிறுபான்மையினரே. வடக்கு மாகாணத்தில் வாழ்பவர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள் என்றும் கிழக்கு மாகாணத்தில் வாழ்பவர்கள் மட்டுக்களத் தமிழர்கள் என்றும் காலப்போக்கில் அழைக்கப்படுகிறார்கள். இவர்களுக் கிடையில் விவாக சம்பந்தமாகவும், வியாபார மூலமாகவும் குறிக்கப்பட்ட சிலருக்குள் மிகவும் நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இரு சாராருக்கிடையே சிலவும் பழக்க வழக்கங்கள் எல்லாம் மிகவும் நெருங்கிய ஒற்றுமையுடையனவாயும் இருக்கின்றன. அப்படியிருந்தும் இரு சாராருக்கும் இடையே ஒருவகையான பேத மனப்போக்கு எப்படியோ ஏற்பட்டு விட்டது. சந்தர்ப்பம் வரும்போது ஒருவரை மற்றவர் குறைத்துப் பேசுவது வழக்கமாய் விட்டது. இப்பேத உணர்ச்சி எப்போது, எங்கிருந்து, எவரால் ஏற்பட்டதோ, தெரியாது. நான் ஒரு மட்டுக்களத் தமிழன்தான் என்று வாசகர்களுக்குத் தெரிவிக்கிறேன். இதற்காக நான் மட்டுக்கள வாசிகளை உயர்த்தியோ, நம் சகோதரர்களைத் தாழ்த்தியோ எழுதத் துணியவில்லை. உண்மையைக் கூறுகிறேன். மட்டுக்கள வாசிகளில் அநேகமான பேர் இந்தப் பேத உணர்ச்சி காட்டவில்லை. நம் சகோதரர்களைத் தாழ்வாகக் கருதவில்லை என்று திண்ணமாய்க் கூறுகிறேன். குறுகிய மனப்பான்மையுள்ள ஒரு சில மட்டுக்கள வாசிகள், இந்த நோக்கோடு நம் சகோதரர்களைப் பற்றிப் பேசுகிறார்கள். அது அவர்களின் பகுத்தறிவில்லாத் தனம் என்பது தெள்ளென விளங்குகின்றது. இதற்கு நேர்மாறாய் இருக்கிறார்கள் யாழ்ப்பாணத்தில் வாழும் சகோதரர்கள்.

யாழ்ப்பாணச் சகோதரர்களில் அநேகமான பேர் மட்டுக்கள வாசிகளை மிகவும் மட்டமாக மதித்து இழிவாகப் பேசுவது கண்ணியமான முறையல்ல. இனத்தை இனம் இழிவாகக் கருதுவது இயல்புடைய செயல் என்பது அவர்கள் நினைவுபோலும். மட்டுக்கள வாசிகளை விட அவர்கள் ஆங்கிலக் கல்வி, அரசியல் முதலிய துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பது பெருமை தரக்கூடிய விஷயம். இந்தப் பெருமை வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால் இதற்காக நம் சகோதரர்கள் தம் இனத்தைத் தாழ்வாகக் கருதுவதா! யாழ்ப்பாணத்தில் கல்விச் சாலைகள், கல்வி பயில்வதற்கு ஏதுவாயுள்ள சாதனங்கள் பல வருஷங்களுக்கு முன் பிறநாட்டு 'மிஷனரி'களால் அதிகமாக ஏற்படுத்தப்பட்டு இருந்ததால் அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள். அதே சமயம் மட்டுக்களில் போதிய கல்விச் சாலைகளோ, கல்வி பயில்வதற்கு ஏதுவாயுள்ள சாதனங்களோ போதிய அளவு இல்லாதிருந்ததால் குறிக்கப்படும் அளவிற்கு முன்னேற்றம் அடையவில்லை. இதற்காகத் தம் சகோதரரைத் தாழ்த்திக் கணிப்பதா! படித்து அரசாங்கத்தில் உயர் பதவி வகிப்பவர்களிடம் கூட இப்பேத உணர்ச்சி அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. ஏன், சுருங்கக் கூறினால் மாணவர்களிடம் கூடத்தான் இருப்பதாகத் தெரிகிறது.

இவ்வுலகில் எவரும் தங்கள் நாட்டை, தங்கள் இனத்தை, தங்கள் ஊரை, தங்கள் ஊராரைப் பிறர் இழிவாகப் பேசுவதை விரும்பார்கள். இனியாகிலும் நம் சகோதரர்கள் மட்டுக்கள வாசிகளை மட்டரகமாகப் பேசாமல், தம் இனம் என்று உணர்வார்கள் என்று நினைக்கிறேன். இந்த நிலையால் இரு சாராருக்குமிடையே நிலவி வரும் வித்தியாச மனப்பான்மையும் பேதமை உணர்ச்சியும் இரு சாராரையும் ஒற்றுமையில்லாதவர்களாக்கி, அரசியலிலோ அல்லது வேறு முன்னேற்றத்துக்கு ஏதுவாயுள்ள துறைகளிலோ ஒத்துழைக்க முடியாமல் தடுக்கின்றன.

நம் இனம் ஒற்றுமையுடன் வாழ வழி வகுப்பதற்கு இந்தப் பேத நிலைமை மாற வேண்டும்.

கொழும்பு
4—12—50 நா. சச்சிதானந்த சிவம்

○ ● ○

## சட்டம் இயற்றவும்

நான் ஒரு சினிமா ரசிகன். நான் அடிக்கடி தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒரு சில சினிமாக் கொட்டகைகளில் சினிமா பார்த்திருக்கிறேன். அக்கொட்டகைகளில் சினிமா பார்க்கும் பொழுது இடையிடையே "லாகிரி வஸ்துக்கள் உபயோகிக்கக்கூடாது. இது சர்க்கார் ஆணை" என்று திரையில் காட்டப்படுகிறது. ஆனால் நடப்பதோ சட்டத்துக்கு முரணான காரியம்.

இவ்விதம் விளம்பரம் செய்து விட்டு கொட்டகைக்குள்ளேயே பீடி, சுருட்டு, சிகரெட் முதலிய லாகிரி வஸ்துக்களை வியாபாரம் செய்ய அனுமதிப்பது விந்தையிலும் விந்தை. இம்மாதிரி விற்பது பாலைக் காய்ச்சிப் பூனையைக் காவல் வைப்பதுபோல இருக்கிறது.

இன்னொரு விஷயம். நான் பெரும்பாலும் தரை டிக்கட் வாங்குவது வழக்கம். நான் ஒரு சமயம் தரை வகுப்புக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு ஒரு சினிமாக் கொட்டகையில் சினிமா பார்த்தேன்.

சினிமா ஆரம்பித்து சுமார் அரைமணி நேரம் இருக்கும். நான் அப்பொழுது ஒரு கட்டத்தை அதிகமாக ரசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் துடையில் ஜில் ஜில் லென்ற உணர்ச்சி ஏற்பட்டது. நான் அதனைக் கவ

னிக்காது கொஞ்சம் நகர்ந்து உட்கார்ந்து விட்டேன். இடைவேளையின் பொழுது விளக்கு போடப்பட்டது. நான் காலை மடக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்ததனால் என் கால் மரத்து விட்டது. வெளியே சென்று பின்புறம் தூசி இருக்குமென்று கையால் தட்டினேன். அப்பொழுதுதான் என் கையில் எச்சில் பட்டது. பின் புறத்தையும் கையையும் பார்த்தேன். வெற்றிலை பாக்கு எச்சில் செக்கச் செவேலென்று இருந்தது. சர்வம் சிவப்பு மயமாக இருந்தது.

தொத்து வியாதிகள் பரவுவது எச்சில் மூலம் அல்லவா! இதைச் சர்க்கார் கவனித்து கொட்டகைக்குள் வெற்றிலை போடுவதைத் தடை செய்யுமாறும், கொட்டகைக்குள் பெட்டிக் கடைகள் வைக்கக்கூடாது என்றும் சட்டம் இயற்றினால் நலம் அல்லவா!

பட்டுக்கோட்டை
23—11—50 இ. சந்நியாகு

○●○

## இருப்பதா? இறப்பதா?

தற்போதுள்ள உணவுப் பங்கீட்டு முறையில் ஆளவந்தார்களின் போக்கு மிகுந்த விசித்திரமாக உள்ளது. முதலில் பங்கீட்டுக் கடைகளில் எங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த தானியம் அரிசியும் கோதுமையும் ஆகும். கோதுமையைச் சாப்பிட்டுப் பழகாத நாங்கள் ரேஷன் கடைகளில் தொங்கவிடப்பட்டிருக்கும் "நம் நாட்டு உணவுகளை நாம் ஏன் உட்கொள்ளக் கூடாது!" என்ற போர்டுகளைப் பார்த்து மிகவும் கஷ்டப்பட்டு ரேஷனில் அளிக்கப்படும் தானியங்களைச் சாப்பிடப் பழக்கத்துக்குக் கொண்டு வந்தோம். நன்றாகப் பழக்கத்துக்கு வந்ததும் அதையும் நிறுத்தி விட்டார்கள். தற்போது கிடைப்பது அரிசி மட்டுமே. அதிலும் பாதி நெல், அந்தப் பாதியிலும் பாதி கல்லாயிருக்கிறது. கடையில் பங்கீட்டு முறைப்படி கொடுக்கும் அரிசியோ பாதி நாள் கூடக் காணாமல் போய்விடுகிறது. வழக்கமாகக் கொடுக்கும் தானியங்களையும் இப்பொழுது நிறுத்தி விட்டதால் நாங்கள் 'இருப்பதா, இறப்பதா?' என்ற நிலை ஏற்பட்டு விட்டது. இதைப் பார்த்த பிறகு ரேஷன் இல்லாமலிருந்தாலே பரவாயில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

மதுரை
14—12—50 ஜி. ராமச்சந்திரன்

○●○

## ஒரு வேண்டுகோள்

சில தினங்களுக்கு முன்பு, நான் ஒரு அலுவலின் நிமித்தம், இங்குள்ள தாலுகா சப்ளை ஆபீஸரைப் பார்க்கச் சென்றேன். அவர் வீட்டு வாசல் திண்ணையில் சுமார் அரைமணி நேரம் காத்திருந்தேன். மேற்படி அதிகாரி ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அவருடைய வேலைக்காரர் "அதிகாரி வேலையாக இருப்பதனால் நீங்கள் கொஞ்சம் காத்திருங்கள்" என்று சொன்னார். சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த அதிகாரி கோட்டை மாட்டிக் கொண்டு




மனைவி:—இராத்திரி திருடன் வந்த மாதிரி சத்தம் கேட்டதாகச் சொன்னீர்களாமே! ஏன் என்னை எழுப்பிச் சொல்லவில்லை?

கணவன்:—நீ பயப்படப் போகிறாயே என்றுதான் சொல்லவில்லை!

வெளியே புறப்பட ஆயத்தமானார். நான் சப்த நாடியையும் ஒடுக்கிக் கொண்டு அவருக்கு வணக்கத்தைச் செலுத்தினேன். என்னைப் பாராமலே, சைக்கிளில் புறப்பட்டு விட்டார். பிறகு அவரைப் பார்க்க இரண்டு தடவைகள் அவர் வீட்டுக்குச் சென்றேன். ஆனால் அவரைப் பார்க்க முடியவில்லை.

பொது ஜனங்கள் உணவுப் பொருள் அதிகாரிகளைக் கண்டு பேசுவதற்கும் தங்களுடைய குறைகளை நேரில் அவர்களிடம் தெரிவிப்பதற்கும் "ஒரு வாரத்தில் இன்ன கிழமைகளில் இன்ன நேரத்திலிருந்து இன்ன நேரம் வரைத் தங்களை வீட்டில் கண்டு பேசலாம்" என்று அறிவித்தால், பொது ஜனங்களுக்கு வீண் அலைச்சலும் ஏமாற்றமும் ஏற்படாதல்லவா!

இராமநாதபுரம்
12—12—50 ரா. திருமலை.

○●○

## கால்நடைகளின் நிலைமை

விவசாயத்தில் பெருமை கொண்ட நாடு இப்பழம் பெரும் பாரதநாடு. எண்பது சதவிகிதம் விவசாயிகளைத் தன்பால் கொண்டு விளங்குகின்றது இந்நாடு. ஆகவே இதுபோன்ற விசாலமான விவசாய பூமிக்கு ஆடுமாடுகள்

போன்ற கால் நடைகள் மிகமிக அவசியம் என்று கூறத் தேவையில்லை.

20 ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட மிருகங்களின் சங்கியை (Quinquennial Census of Livestock) யின்படி நாம் சில உண்மைகளை அறிய முடிகிறது. அதாவது நாம் நமக்குத் தேவையான அளவு மாடுகளைப் பெற்றிருக்கின்றோம் என்பது தான். அந்தச் சங்கியையின் படி இந்நாட்டின் கால்நடைகளின் தொகை சுமார் 19 கோடி என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. அத்தொகை தற்போது அதிகரித்துத் தான் இருக்குமே தவிரக் குறைந்திராது; எனவே நம் தேசத்தில் மாடுகளின் தொகை போதிய அளவில் உள்ளது.

தொகையில் இவ்வாறு அதிகரித்திருக்கும் இந்நாட்டிலுள்ள மாடுகள் வலிமை குன்றி, வேலை செய்யச் செயலற்றிருக்கின்றன. காரணம், அதற்குச் சத்துள்ள ஆகாரம் கொடுக்கப்படுவதில்லை. நம் நாட்டினர் அதனிடமிருந்து வேலையைத்தான் எதிர்பார்க்கின்றனரேயன்றி அதன் நல்வாழ்விற்கான முறைகளை வகுப்பதில்லை. அதனால்தான் நம் நாட்டுக் கால் நடைகள் பெரும்பாலும் வியாதியால் மடிகின்றன. ஆகவே உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடும் இந்தக் காலத்திலாவது அரசாங்கம் கால் நடைகளின் வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்.

கும்பகோணம்
4—12—50

அ. வள்ளி

○●○

## சர்க்கரைத் திட்டம்

நான் ஒரு சிறுமி. தினமும் காலையில் எழுந்ததும் காப்பி சாப்பிடும்பொழுது என் மனதில் ஒரு பிரச்னை எழும்புகிறது. அதுதான் சர்க்கரையைப் பற்றிய விஷயம். எல்லா விஷயங்களிலும் வித்தியாசத்தை அறவே ஒழிக்க விரும்பும் நம் அறிவுள்ள சர்க்கார் இவ்விஷயத்தில் மட்டும் ஏன் அக்கொள்கையைப் பின்பற்றவில்லை! நான் சிறுமியாதலால் இதைப்பற்றிக் கூறினால் யாரும் மதிப்பதில்லை.



"என்ன ஸார் நீங்கள் சமைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் மனைவி எங்கே?"

"ரேடியோ நிலையத்திற்குப் போயிருக்கிறாள்."

"பாடுவதற்கா?"

"இல்லை, சமையல் செய்வது எப்படி என்பதைப் பற்றிப் பேசப் போயிருக்கிறாள்!"

நம் சென்னை மாகாணத்தில் ரூ. 100க்கு மேல் வருவாய் உள்ளவர்களின் குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் ஒரு வாரத்திற்கு 9 பலம் சர்க்கரையும், இதரர்களுக்கு ஆளுக்கு 5 பலம் சர்க்கரையும் கொடுக்கிறார்கள். இதன் கருத்தென்ன! வருவாய் அதிகமுள்ளவர்கள் அதிகச் சர்க்கரை போட்டும், வருவாய் குறைவாயுள்ளவர்கள் போதுமான சர்க்கரை யில்லாமலும் காப்பி சாப்பிட வேண்டும் என்று அர்த்தமா!

இன்னும் சிறிது காலத்தில் சர்க்கார் திட்டத்தைப் பின்பற்றும் உண்மை ரசிகர்கள் ஹோட்டல் வைத்தால், அங்கு "ரூ. 100க்கு மேற்பட்டவர்களுக்கே இனிப்புப் பண்டம் கொடுக்கப்படும்" என்று போர்டு தொங்கினால் ஆச்சரியப் படுவதற்கில்லை. பணக்காரர்களுக்குத்தான் சர்க்கரைப் பண்டம் பிடிக்குமா! ஏழைகளுக்குப் பிடிக்காதா! பாரபட்சமற்ற கடவுள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான நாக்கைத்தானே கொடுத்திருக்கிறார்! ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசத்தை அறவே ஒழிக்க விரும்பும் அரசாங்கத்தினர் இது விஷயத்தில் ஏன் பாரபட்சம் காட்டுகிறார்கள்!

சென்னை
19—12—50

ரா. லட்சுமி.

○●○

## கண்மாய்

நான் ஒரு இலங்கை இந்தியன். எனக்கு இந்தியாவில் ராமநாதபுரம் ஜில்லா, திருவாடானைத் தாலுகா, புக்குடி கிராமத்தில் சொற்ப நஞ்சை நிலம் இருக்கிறது. அந்த நஞ்சையில் கிடைக்கக்கூடிய சொற்பவருமானத்தையும் தற்சமயம் இலங்கையில் கிடைக்கக் கூடிய ஊதியத்தையும் கொண்டு, எனது குடும்பம் நடந்து வருகிறது. ஆனால் இலங்கையிலுள்ள செலவாணிக் கட்டுப்பாட்டினால் ஏழைத் தொழிலாளிகள் மாதந்தோறும் சரிவரக் குடும்பங்களுக்குப் பணம் அனுப்ப முடிவதில்லை. இந்தக் கஷ்டத்தோடு, இன்னொரு கஷ்டமும் சேர்ந்திருக்கிறது. வெள்ளப் பெருக்கின் காரணமாக எங்கள் கிராமத்தின் கண்மாயில் உடைப்பு ஏற்பட்டு ஏறக்குறைய இரண்டு வருஷமாகிறது. ஆனால் மேற்படி கண்மாய் உடைப்பை இதுவரை யாரும் கவனிக்கவில்லை. அதைச் செப்பனிட யாருக்கும் ஆர்வம் இருப்பதாகவும் தெரியவில்லை. அதிகாரிகளுக்கும், அரசாங்கத்துக்கும் பல கடிதங்கள் எழுதியும் பயனில்லை.

ராமநாதபுரம் ஜில்லா வறண்ட பூமி. ஆடு மாடுகள் குடிப்பதற்குக் கூடச் சில வருஷங்களில் அங்கே தண்ணீர் கிடைப்பதில்லை. ஆனால் கடந்த வருஷம் சிறிதளவு வருண பகவான் கருணைபுரிந்து மழை வருஷித்தும் உடைந்த கண்மாய் அடைப்பைச் சென்னை அரசாங்கம் கவனியாது விட்டுவிட்டதால் பயிரான நிலங்களெல்லாம் வெள்ளத்தில் மூழ்கி அழிந்து விட்டன. 'நிலங்களைத் தரிசு போடாதே!' என்று சொல்லும் அதிகாரிகள் கண்மாயைச் சீர்படுத்திக் கொடுத்தால் அல்லவா, விளைச்சலை அதிகரிப்பதற்குச் சௌகரியமாயிருக்கும்!

சிலோன்
8—12—50

மு. மலையாண்டி



# பொன்னியின் செல்வன்

## கல்கி

### இருபதாம் அத்தியாயம்

### "முதற் பகைவன்"

தக்க சமயத்தில் ஆந்தை செய்த உதவியை ஆழ்வார்க்கடியான் மனதிற்குள் பெரிதும் பாராட்டினான். ஏனெனில், காட்டின் மத்தியில் கூடியிருந்த சதிகாரர்கள், சிறகடித்துக் கொண்டு உறுமிய ஆந்தையைப் பார்த்து அதனால் ஏற்பட்ட சத்தந்தான் என்று எண்ணிக் கொண்டார்கள். "அடே! இந்தக் கோட்டான் நம்மைப் பயப்படுத்தி விட்டது! வெட்டுடா அதை!" என்றான் ஒருவன். "வேண்டாம்! உங்கள் கத்திகளை வேறு முக்கியமான காரியங்களுக்குப் பத்திரப் படுத்தி வையுங்கள். நம் பகைவர்களைப் பூண்டோடு ஒழிப்பதற்குக் கூராக்கி வையுங்கள்! ஆந்தையும் கோட்டானும் நம் பகைவர்கள் அல்ல; அவை நம் சிநேகிதர்கள்! மனிதர்கள் சாதாரணமாய் உறங்கும் சமயங்களில் நாம் கண் விழித்திருக்கிறோம். நம்மோடு ஆந்தைகளும் கூகைகளும் கண் விழித்திருக்கின்றன!" என்றான் ரவிதாஸன் என்பவன். அவனுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டே மெள்ள மெள்ள அடிமேல் அடியெடுத்து வைத்து நடந்து திருமலையப்பன் ஒரு பெரிய மருத மரத்தின் சமீபத்தை அடைந்தான். நூறு வயதான அந்த மரத்தின் பெரிய வேர்கள் நாலா புறத்திலும் ஓடியிருந்தன. ஒரு ஆணி வேருக்கும் இன்னொரு ஆணி வேருக்கும் மத்தியில் தரையிலும் இடைவெளியிருந்தது; மரத்தின் அடிப் பக்கத்திலும் நல்ல குழிவு இருந்தது. அத்தகைய குழிவு ஒன்றில் மரத்தோடு மரமாகச் சாய்ந்து கொண்டு ஆழ்வார்க்கடியான் நின்றான்.

"தஞ்சாவூர் இராஜ்யத்தின் பொக்கிஷம் இருக்கும் வரையில் நமக்கு வேண்டிய பொருளுக்குக் குறைவு இல்லை. எடுத்த காரியத்தை முடிக்க வேண்டிய நெஞ்சுத் துணிவு வேண்டும். காரியம் முடிகிற வரையில் வெளியில் தெரியாதபடி இரகசியத்தைப் பேணும் சக்தி வேண்டும்! நமக்குள் இரண்டு பிரிவாகப் பிரிந்து கொள்ள வேண்டும். ஒரு பிரிவினர் உடனே இலங்கைக்குப் போகவேண்டும். இன்னொரு பிரிவினர் தொண்டைமண்டலம் சென்று காரிய சித்திக்குத் தக்க சமயத்தை எதிர் பார்த்திருக்க வேண்டும். ஏறக்குறைய இரண்டு காரியங்களும் ஒரே சமயத்தில் முடியவேண்டும். ஒரு பகைவனை முடித்த பிறகு அவகாசம் கொடுத்தால் இன்னொரு பகைவன் ஜாக்கிரதையாகி விடுவான்! அதற்கு இடமே கொடுக்கக் கூடாது. தெரிகிறதா? உங்களில் இலங்கைக்குப் போக யார் யார் ஆயத்தமாயிருக்கிறீர்கள்?" என்றான் ரவிதாஸன்.

"நான் போகிறேன்!" "நான்தான் போவேன்!" என்று பல குரல்கள் ஒரே சமயத்தில் கேட்டன.

"யார் போகிறது என்பதை அடுத்த முறை பாண்டிய நாட்டில் கூடித் தீர்மானிக்கலாம்! அது வரைக்கும் இங்கே செய்யவேண்டிய ஏற்பாடுகள் இன்னும் சில இருக்கின்றன!" என்றான் ரவிதாஸன்.

"ஈழத்துக்கு எந்த வழி போவது நல்லது?" என்று ஒருவன் கேட்டான்.

"கோடிக்கரை வழியாகப் போகலாம். கடலைக் கடப்பதற்கு அது நல்ல வழி. ஆனால் இங்கிருந்து கோடிக்கரை வரையில் செல்வது கடினம். நெடுகிலும் பகைவர்கள். ஆங்காங்கே ஒற்றர்கள். ஆகையால், சேதுவுக்குச் சென்று அங்கே கடலைத் தாண்டி மாதோட்டத்துக்கருகில் இறங்குவதுதான் நல்லது. இலங்கை போகிறவர்கள் சமயத்தில் படகு வலிக்கவும், கட்டுமரம் தள்ளவும், கடலில் நீந்தவும் தெரிந்தவர்களாயிருக்க வேண்டும். இங்கே யாருக்கு நீந்தத் தெரியும்?"

"எனக்குத் தெரியும்" "எனக்கும் தெரியும்" என்ற குரல்கள் எழுந்தன.

"முதலில், இலங்கை மன்னன் மகிந்தனைக் கண்டு பேசிவிட்டுப் பிறகு காரியத்தில் இறங்கவேண்டும். ஆகையால் ஈழத்துக்குப் போகிறவர்களில் ஒருவருக்காவது சிங்கள மொழி தெரிந்திருக்க வேண்டும். ஆ! நமது சோமன் சாம்பவன் இன்னும் வந்து சேரவில்லையே? யாராவது அவனை இன்றைக்குப் பார்த்தீர்களா?"

"இதோ வந்து கொண்டிருக்கிறேன்!" என்று ஆழ்வார்க்கடியானுக்கு மிக்க சமீபத்திலிருந்து ஒரு குரல் கேட்டது. அடியான் மேலும் மரத்தோடு மரமாக ஒட்டிக் கொண்டான். அடாடா! இந்தப் பாழும் உடம்பு இப்படிப் பெருத்து விட்டது எவ்வளவு சங்கடமாயிருக்கிறது!

புதிதாக இரண்டு பேர் அக்கூட்டத்தில் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

ஆழ்வார்க்கடியான் தன் முகத்தில் ஒரு சிறு பகுதியை மட்டும் மரத்துக்கு வெளியே நீட்டி எட்டிப் பார்த்தான். புதிதாக வந்தவர்கள் இருவரும் கொள்ளிடக் கரையில் அரச மரத்தடியில் சந்தித்துப் பேசியவர்கள் தான் என்று தெரிந்து கொண்டான்.

**பு**து மனிதர்களைக் கண்டதும் ரவிதாசன் "வாருங்கள்! வாருங்கள்! ஒருவேளை ஏதாவது உங்களுக்கு ஆபத்து வந்து விட்டதோ, வராமலே இருந்து விடுவீர்களோ என்று பயந்தேன். எங்கிருந்து எந்த வழியாக வந்தீர்கள்?" என்றான்.


"கொள்ளிடக் கரையோடு வந்தோம். வழியில் ஒரு கூட்டம் நரிகள் வளைத்துக் கொண்டன. நரிகளிடம் சிக்காமல் தப்பித்து வருவதற்கு நேரம் ஆகி விட்டது!" என்றான் சோமன் சாம்பவன்.

"புலிக்கும், சிங்கத்துக்கும் பயப்பட்டால் பொருள் உண்டு. நரிக்குப் பயப்படுகிறவர்களால் என்ன காரியத்தைச் சாதித்துவிட முடியும்?" என்றான் அந்தக் கூட்டத்துக்கு முன்னமே வந்திருந்தவர்களில் ஒருவன்.

"அப்படிச் சொல்லாதே, அப்பனே! சிங்கம், புலியைக் காட்டிலும் நரி பொல்லாதது! ஏனெனில், சிங்கமும் புலியும் தனித்தனியே பாய்ந்து வரும் விரோதிகள். அவற்றோடு சண்டையிட்டுச் சமாளிக்கலாம். ஆனால் நரிகளோ கூட்டங் கூட்டமாக வருகின்றன. ஆகையால், அவற்றுக்குப் பலம் அதிகம். சோழநாட்டு நரிகள் பெருங் கூட்டமாக வந்ததினால்தானே நம் ஒப்பற்ற மன்னாதி மன்னன் தோற்கவும் உயிர் துறக்கவும் நேர்ந்தது. இல்லாவிட்டால், அவ்விதம் நேர்ந்திருக்குமா?"

"அந்த நரிக் குலத்தை அடியோடு அழிப்போம்! பூண்டோடு நாசம் செய்வோம்!" என்று ஆங்காரத்துடன் கூவினான் சோமன் சாம்பவன்.

"இதோ அதற்கு வேண்டிய உபகரணங்கள்!" என்று ரவிதாஸன் பொன் நாணயங்களின் குவியலைக் காட்டினான்.



சோமன் சாம்பவன் நாணயங்கள் சிலவற்றைக் கையில் எடுத்துப் பார்த்துவிட்டு, "ஆ! ஒரு பக்கம் புலி; இன்னொரு பக்

"கம்பனே!" என்று சொன்னான்.

"சோழனுடைய பொன்; பழுவேட்டரையனுடைய முத்திரை. நான் சொன்னது சொன்னபடி நிறைவேற்றி விட்டேன். உங்களுடைய செய்தி



என்ன? நமது இடும்பன்காரி ஏதாவது செய்தி கொண்டு வந்திருக்க வேண்டுமே?" என்றான் ரவிதாஸன்.

"ஆம்; கொண்டு வந்திருக்கிறார். கேளுங்கள்! அவரே சொல்லுவார்!"

இடும்பன்காரி சொல்லத் தொடங்கினான்:—"தங்கள் கட்டளைப்படியே சம்புவரையர் மாளிகையில் பணியாளாக நான் அமர்ந்து வேலை பார்த்து வருகிறேன். அதனுடைய பலன் நேற்றிரவு தான் சித்தித்தது. நேற்று சம்புவரையர் மாளிகையில் ஒரு பெரிய விருந்து நடந்தது. பெரிய பழுவேட்டரையர், வணங்காமுடி முனையரையர், மழபாடி மழவரையர் முதலிய பலர் வந்திருந்தார்கள். குரவைக் கூத்தும் வேலனாட்டமும் நடைபெற்றன. வேலனாட்டம் ஆடிய தேவராளனுக்குச் சன்னதம் வந்து குறி சொன்னான். அவன் சொன்னது நம்முடைய நோக்கத்துக்கு அனுசரணையாகவே இருந்தது. பழுவேட்டரையருடன் வந்த மூடு பல்லக்கில் அவருடைய இளைய ராணி வந்திருப்பதாக எல்லாரும் எண்ணியிருந்தார்கள். சுந்தர சோழ மகாராஜாவுக்கு உடல் நலம் சரியாயில்லையென்றும் அதிக நாள் உயிரோடிருக்கமாட்டாரென்றும் பழுவேட்டரையர் தெரிவித்தார். எல்லாருமாகச் சேர்ந்து அடுத்தபடி பட்டத்துக்கு வரவேண்டியவர் ஆதித்த கரிகாலர் அல்ல, மதுராந்தக தேவர் என்று முடிவு செய்தார்கள். ஆனால் மதுராந்தகதேவர் இதற்குச் சம்மதிப்பாரா என்று சிலர் கேட்டார்கள். 'அவர் வாயினாலேயே அதற்கு மறுமொழி கூறச் செய்கிறேன்' என்று சொல்லிப் பழுவேட்டரையர் மூடு பல்லக்கின் திரையைத் திறந்தார். அதற்குள்ளிருந்து மதுராந்தக தேவர் வெளி வந்தார்! பட்டம் கட்டிக் கொள்ளத் தமக்குச் சம்மதம் என்று அவர் தெரிவித்தார்......"

"இப்படிப் பெண் வேஷம் போடும் பராக்கிரமசாலிக்கு முடி சூட்டப் போகிறார்களாம்! நன்றாய்ச் சூட்டட்டும்! எல்லாம் நாம் எதிர்பார்த்தபடியேதான் நடந்து வருகிறது. இம்மாதிரி சோழ நாட்டிலேயே ஒரு குழப்பம் ஏற்படுவது நம்முடைய நோக்கத்துக்கு மிக உகந்தது. எது நேர்ந்தாலும், என்ன நடந்தாலும், நம்மை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள் அல்லவா? இடும்பன்காரி! மிக முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறீர். ஆனால் இதெல்லாம் எப்படித் தெரிந்து கொண்டீர்? இதற்குச் சந்தர்ப்பம் எப்படி வாய்த்தது?" என்று கேட்டான் ரவிதாஸன்.

"நடு ராத்திரியில் அவர்கள் சபை கூடியபோது வேறு யாரும் அருகில் வராதபடி பார்த்துக் கொள்ள என்னைக் காவலுக்கு அமர்த்தியிருந்தார்கள். காவல் புரிந்து கொண்டே என் காதுகளையும் கண்களையும் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தேன்."

"அப்படி உபயோகப் படுத்தியதில் வேறு ஏதாவது தெரிந்ததா?"

"தெரிந்தது. அந்த நள்ளிரவுக் கூட்டத்தில் நடந்ததையெல்லாம் இன்னொரு வேற்று மனிதன் கோட்டை மதிள்சுவர் மேலிருந்து கவனித்துக் கொண்டிருந்தான்!"

"ஆஹா! அவன் யார்?"

"முன் குடுமி வைத்திருந்த ஒரு வைஷ்ணவன்......"

"ஆகா! அவன்தானா? அப்படி நான் நினைத்தேன். அவனை நீர் என்ன செய்தீர்? சம்புவரையரிடம் பிடித்துக் கொடுக்க வில்லையா?"

"இல்லை. ஒருவேளை அவன் நம்மவனாயிருக்கலாம் என்று நினைத்து விட்டேன். நீங்களே அனுப்பி வைத்தீர்களோ என்றும் எண்ணினேன்."

"பெரிய பிசகு செய்து விட்டீர். அவன் நம்மவன் அல்ல. கட்டையாய்க்

குட்டையாய் இருப்பான். சண்டைக்காரன். பெயர் திருமலையப்பன்; 'ஆழ்வார்க்கடியான்' என்று சொல்லிக் கொள்வான்."

"அவனேதான். நான் செய்த பிசகை இன்று மத்தியானம் நானே உணர்ந்து கொண்டேன். அவன் நம் ஆள் அல்லவென்று தெரிந்தது."

"அதை எப்படி அறிந்தீர்?"

"நேற்று இரவு கந்தமாறனின் வாலிப நண்பன் ஒருவனும் கடம்பூர் மாளிகைக்கு வந்திருந்தான். அவனுக்கும் பழுவேட்டரையர் கூட்டத்துக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லையென்று தெரிந்தது. அவன் எங்கேயோ மூலையில் படுத்து நிம்மதியாகத் தூங்கினான். இன்று காலையில் சின்ன எஜமானர் தம் சிநேகிதனைக் கொண்டு விடக் கொள்ளிடக் கரை வரையில் வந்தார். அவர் வரப்போவதை அறிந்து அவர் முன்னால் அடிக்கடி நான் போய் நின்றேன். என்னையும் வரச் சொன்னார். அவர் கொள்ளிடத்தின் வட கரையோடு திரும்பிவிட்டார். என்னைத் தென் கரைக்கு வந்து அவ் வாலிபனுக்கு ஒரு குதிரை சம்பாதித்துக் கொடுத்துவிட்டுத் திரும்பும்படி சொன்னார். அங்கிருந்து குடந்தைக்குப் போய் என் அத்தையைப் பார்த்து விட்டு வருவதாகச் சொல்லி விட்டு வந்தேன். அதனால்தான் சந்தேகத்துக்கு இடமின்றி இங்கே வர முடிந்தது."

"சரிதான், சரிதான்! அந்த வீர வைஷ்ணவனைப் பற்றி எவ்விதம் தெரிந்து கொண்டீர்?"

"கொள்ளிடத்தில் படகு புறப்படும் சமயத்துக்கு அந்த வீர வைஷ்ணவன் வந்து படகில் ஏறிக் கொண்டான். அவன் கந்தமாறனின் சிநேகிதனோடு பேசிய சில காரமான வார்த்தைகளிலிருந்து எனக்குச் சிறிது சந்தேகம் உதித்தது; அவனும் நம்மைச் சேர்ந்தவனோ என்று. மேலும் கொள்ளிடத்தின் தென்கரையில் அவன் எனக்காகக் காத்துக் கொண்டிருந்ததாகத் தோன்றியது. நம்முடைய அந்தரங்க சமிக்ஞையைச் செய்து காட்டினேன். ஆனால் அவன் புரிந்து கொள்ளவில்லை. அதன் பேரில் அவன் நம்மவன் அல்லவென்று தீர்மானித்தேன்..."

"நீர் செய்தது பெரும் பிசகு! முன் பின் தெரியாதவர்களிடம் நம் சமிக்ஞையைச் செய்து காட்டக் கூடாது. நண்பர்களே! இதைக் கேளுங்கள். நம்முடைய காரியம் காஞ்சிபுரத்தில் இருக்கிறது! இலங்கையிலும் இருக்கிறது. இந்த இரண்டு இடங்களிலும் நம்முடைய பரம விரோதிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இரண்டு பேரையும் காட்டிலும் நம்முடைய கொடிய விரோதி, முதன்மையான விரோதி, ஆழ்வார்க்கடியான் என்று பொய்ப் பெயர் பூண்டு திரியும் திருமலையப்பன்தான். அவன் நம்மையும் நம் நோக்கத்தையும் அடியோடு நாசம் செய்யக் கூடியவன். நமக்கெல்லாம் இணையில்லாத் தலைவியாக உள்ள தேவியை அவன் கொண்டுபோகப் பார்க்கிறவன். அடுத்தபடியாக அவனை உங்களில் யாராவது எங்கே கண்டாலும், எந்த நிலைமையில் சந்தித்தாலும், கையில் உள்ள ஆயுதத்தை உடனே அவன் மார்பில் பாய்ச்சிக் கொன்று விடுங்கள். ஆயுதம் ஒன்றுமில்லாவிட்டால் கையினால் அவனுடைய மென்னியைத் திருகிக் கொல்லுங்கள். அல்லது சூழ்ச்சியால் விஷத்தைக் கொடுத்துக் கொல்லுங்கள்; அல்லது வெள்ளத்தில் தள்ளி முதலைப் பசிக்கு இரையாக்குங்கள். அல்லது ஏதாவது சாக்குச் சொல்லிப் பாறை உச்சிக்கு அழைத்துப் போய் அங்கிருந்து பிடித்துத் தள்ளிக் கொன்று விடுங்கள். தேள், கட்டுவாக்களி, பாம்பு முதலியவற்றைக் கண்டால் எப்படி இரக்கம் காட்டாமல் கொல்லுவீர்களோ, அப்படிக் கொன்று விடுங்கள்! துர்க்கா தேவிக்கோ, கன்னியம்மனுக்கோ பலி கொடுத்துவிட்டால், இன்னும் விசேஷம். எப்படியும் அவன் உயிரோடிருக்கும் வரையில் நம்முடைய நோக்கத்துக்கு இடையூறாகவே இருப்பான்!..."

"ரவிதாஸரே! நீங்கள் இவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்வதற்கு அவன் பெரிய கைகாரனாயிருக்க வேண்டும். அப்படிப்பட்டவன் யார்?"

"யாரா? அவன் பயங்கர ஆற்றல் படைத்த ஒற்றன்!"

"யாருடைய ஒற்றன்?"

"எனக்கே அது வெகு காலம் சந்தேகமாகத் தானிருந்தது. சுந்தர

சோழரின் ஒற்றனோ, ஆதித்த கரிகாலனின் ஒற்றனோ என்று சந்தேகப் பட்டேன். இல்லையென்று கண்டேன். பழையாறையில் இருக்கிறாளே, ஒரு கிழப் பாதகி,— அந்த பெரிய பிராட்டியின் ஒற்றனா யிருக்கலாம் என்று இப்போது சந்தேகிக்கிறேன்."



"ஆகா! அப்படியா? சிவபக்தியில் மூழ்கி, ஆலயத் திருப்பணி செய்துவரும் அந்தச் செம்பியன் தேவிக்கு ஒற்றன் எதற்கு?"

"அதெல்லாம் பொய். இந்த முன் குடுமிக்காரனின் வீர வைஷ்ணவம் எப்படி வெளி வேஷமோ, அப்படித்தான் அந்த மூதிய ராணியின் சிவ பக்தியும். பெற்ற பிள்ளைக்கே பெரும் சத்துருவா யிருக்கும் பிசாசு அல்லவா? அதனால்தானே, அவளுடைய சொந்தச் சகோதரனாகிய மழவரையன் கூட அவளுடன் சண்டை பிடித்துக் கொண்டு, பழுவேட்டரையன் கட்சியில் சேர்ந்திருக்கிறான்?"

"ரவிதாஸரே! அந்த முன் குடுமி வைஷ்ணவனைப் போல் இன்னும் யாராவது உண்டோ?"

"குடந்தையில் ஒரு ஜோசியன் இருக்கிறான். அவன் பேரிலும் எனக்குச் சந்தேகம் இருக்கிறது. வருகிறவர் போகிறவர்களுக்கு ஜோசியம் சொல்லுவதுபோல் சொல்லி வாயைப் பிடுங்கிப் பல விஷயங்களைத் தெரிந்து கொள்கிறான். அவனிடம் நீங்கள் யாரும் போகவே கூடாது. போனால் எப்படியும் நிச்சயமாக ஏமாந்துபோவீர்கள்."

"அவன் யாருடைய ஒற்றன் என்று நினைக்கிறீர்கள்?"

"இன்னும் அதை நான் கண்டு பிடிக்க முடியவில்லை. ஒருவேளை தற்போது இலங்கையில் இருக்கும் போலி இளவரசனுடைய ஒற்றனாக இருக்கலாம். ஆனால் ஜோசியனைப் பற்றி அவ்வளவு கவலை எனக்குக் கிடையாது. அவனால் பெரிய தீங்கு எதுவும் நேர்ந்து விடாது. வைஷ்ணவன் விஷயத்திலே தான் எனக்குப் பயம்! அவனைக் கண்ட இடத்திலே தேள், நட்டுவாக்களி, பாம்பை அடித்துக் கொல்வது போல் இரக்கமின்றிக் கொன்றுவிட வேண்டும்!"

இதை யெல்லாம் மருத மரத்தின் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானுக்கு மெய் நடுங்கியது; உடம்பெல்லாம் வியர்த்தது. அந்தமரத்தடியிலிருந்து உயிரோடு தப்பித்துப் போகப் போகிறோமா என்றே அவனுக்குச் சந்தேகம் உண்டாகி விட்டது.

போதும் போதாததற்கு அந்தச் சமயம் பார்த்து அவனுக்குத் தும்மல் வந்தது. எவ்வளவோ அடக்கிக் கொள்ளப் பார்த்தும் முடியவில்லை. துணியை வாயில் வைத்து அடைத்துக் கொண்டு நச்சென்று தும்மினான்.

அந்தச் சமயம் மேலக் காற்று நின்றிருந்தது. காட்டு மரங்களின் மர்மர சத்தமும் நின்று போயிருந்தது.

ஆகையால் திருமலையப்பனின் அடக்கிய துர்மல் சத்தம் பக்கத்தில் பேசிக் கொண்டிருந்த சதிகாரர்களுக்குச் சிறிது கேட்டு விட்டது.

"அந்த மருத மரத்துக்குப் பின்னால் ஏதோ சத்தம் கேட்கிறது. சுளுந்தைக் கொண்டு போய் என்னவென்று பார்!" என்றான் ரவிதாஸன்.

சுளுந்து பிடித்தவன் மரத்தை நாடி வந்தான். அவன் அருகில் வர வர, வெளிச்சம் அதிகமாகி வந்தது. ஆச்சு! இதோ மரத்தின் முடுக்கில் அவன் திரும்பப் போகிறான். திரும்பிய உடனே சுளுந்து வெளிச்சம் தன்மேல் நன்றாய் விழப் போகிறது. அப்புறம் என்ன நடக்கும்? தப்பிப் பிழைத்தால் புனர் ஜன்மந்தான்!

திருமலையப்பனின் மார்பு படபட வென்று அடித்துக் கொண்டது. தப்புவதற்கு வழி உண்டா என்று சுற்று முற்றும் பார்த்தார். வழி காணவில்லை. அண்ணாந்து பார்த்தான். அங்கே

மரத்திலிருந்து பிரிந்து சென்ற மரக் கிளையில் ஒரு ராட்சத வௌவால் தலைகீழாகத் தொங்கித் தவம் செய்து கொண்டிருந்தது! உடனே ஒரு யோசனை தோன்றியது. சட்டென்று கைகளை உயர நீட்டி அந்த வௌவாலைப் பிடித்துக் கையில் ஆயத்தமாக வைத்துக் கொண்டான்.

சுளுந்துக்காரன் மரத்தைத் தாண்டி வந்ததும், வௌவாலை அவன் முகத்தின் மீது எறிந்தான்.

சுளுந்து கீழே விழுந்து வெளிச்சம் மங்கியது. வௌவாலின் இறக்கையால் முகத்தில் அடிபட்டவன், "ஆ! ஆ! என்ன! என்ன?" என்று உளறினான். பலர் ஓடி வரும் சத்தம் கேட்டது. ஆழ்வார்க்கடியானும் ஓட்டம் பிடித்தான். அடுத்த கணம் அடர்ந்த காட்டுக்குள் புகுந்து மறைந்தான்.

பலர் சேர்ந்து "என்ன? என்ன?" என்று கூச்சலிட்டார்கள். சுளுந்து ஏந்திய ஆள் வௌவால் தன்னைத் தாக்கியது பற்றி விவரம் கூறத் தொடங்கினான். இதெல்லாம் திருமலையப்பனின் காதில் கொஞ்ச தூரம் வரையில் கேட்டுக் கொண்டிருந்தது.

## இருபத்தோராம் அத்தியாயம்

# திரை சலசலத்தது!

ஒரே சமயத்தில் ஒருவனுக்குள்ளே இரண்டு மனங்கள் இயங்க முடியுமா? முடியும் என்று அன்றைக்கு வந்தியத்தேவனுடைய அனுபவத்திலிருந்து தெரிய வந்தது.

சோழ வள நாட்டிற் குன்றாத வளம் மிகுந்த பிரதேசத்தின் வழியாக அவன் போய்க் கொண்டிருந்தான். நதிகளில் புதுப்புனல் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்த காலம். கலைவாய்




கள், மதகுகள், மடைகளின் வழி யாக வாய்க்கால்களிலும் வயல்களி லும் குபு குபு வென்று ஜலம் பாய்ந்து கொண்டிருந்தது. எங்கே பார்த்தா லும் தண்ணீர் மயமா யிருந்தது. சோழ தேசத்தை வளநாடு என்றும், சோழ மன்னனை வளவன் என்றும் கூறுவது எவ்வளவு பொருத்த மானது?—இப்படி எண்ணியவுடனே சோழ நாட்டுக்கும் சோழ மன்னனுக் கும் ஏற்பட்டிருந்த அபாயங்கள் அவன் நினைவுக்கு வந்தன. இந்த நிலை மையில் தன்னுடைய கடமை என்ன? இளவரசர் கரிகாலர் கொடுத்த ஓலையை மட்டும் சக்கரவர்த்தியிடம் சேர்ப்பித்து விட்டுத் தன் கடமை தீர்ந் தது என்று இருந்து விடுவதா? இந்த இராஜகுலத் தாயாதிக் காய்ச்சலிலும் பூசலிலும் நாம் எதற்காகத் தலையிட் டுக் கொள்ள வேண்டும்? சோழநாட் டுச் சிம்மாசனத்துக்கு யார் வந்தால் தான் நமக்கு என்ன? பார்க்கப் போனால், நம்முடைய குலத்தின் பூர் வீகப் பகைவர்கள் தானே இவர்கள்? சோழர்களும் கங்கர்களும் வைதும்பர்களும் சேர்ந்து கொண்டு தானே வாணகோப் பாடி ராஜ்யமே இல்லாதபடி செய்து விட்டார்கள்? இன் றைக்கு ஆதித்த கரிகாலர் நம் மிடம் அன்பாக இருந்ததினால் அந்த அநீதியெல்லாம் மறைந்து போய் விடுமா?—சேச்சே!

அந்தப் பழைய சம்பவங்களை அநீதி யென்றுதான் எப்படிச் சொல்ல முடி யும்? அரசர்கள் என்றால், ஒருவருக் கொருவர் சண்டையிடுவது இயற்கை. அதுபோலவே வெற்றியும் தோல்வி யும் மாறி மாறி வருவதும் இயற்கை. வென்றவர்கள் மீது தோற்றவர்கள் கோபங்கொள்வதில் என்ன பயன்? நம்முடைய மூதாதைகள் நல்ல நிலைமை யில் இருந்தபோது அவர்களும் மற்ற அரசர்களைக் கதிகலங்கத்தானே அடித் தார்கள்? அடியோடு அழித்துவிடத் தானே பார்த்தார்கள்? ஆ! அது என்ன பாடல்?—இதோ ஞாபகம் வந்து விட்டது!

"சேனை தழையாக்கிச் செங்குருதி நீர் தேக்கி
ஆனை மிதித்த அருஞ்சேற்றில்-மானபரன்
பாவேந்தர் தம்வேந்தன் வாணன் பறித்து நட்
மூவேந்தர் தங்கள் முடி!" [டான்

இப்படியெல்லாம் போர்க்களத்தில் கொடூரமான காரியங்களை நம் முன் னோர்களும் செய்திருக்கிறார்கள். போர்க்களத்தில் தோற்றவர்களின்



கதி எப்போதும் அதோ கதிதான். இராமரைப் போலவும் தர்மபுத்திரரைப் போலவும் எல்லா அரசர்களும் கருணை வள்ளல்களாக இருந்து விட முடியுமா? அப்படி அவர்கள் இருந்த படியினால்தான் காட்டுக்குப் போய்த் திண்டாடினார்கள்! அவர்கள் வீர புருஷர்களாயிருந்தும், வீரர்களின்



துணையிருந்தும், வெகுவாகக் கஷ்டப்பட்டார்கள். இராஜரீகத்தில் கருணை என்பதே கூடாது. பார்க்கப் போனால் சோழ குலத்தவர்கள் சிறிது கருணையுள்ளவர்கள் என்றே சொல்ல வேண்டும். எதிரிகளையும் முடியுமானால் நண்பர்களாக்கிக் கொள்ளவே பார்க்கிறார்கள். அதற்காகக் குலம் விட்டுக் குலம் கலியாண சம்பந்தமும் செய்து கொள்கிறார்கள்! சுந்தர சோழரின் தந்தை அரிஞ்சய சோழர் வைதும்பராயன் மகளைத் திருமணம் செய்து கொள்ளவில்லையா? அழகுக்குப் பெயர்போன அந்தக் கலியாணியின் மகனாயிருப்பதினால்தானே சுந்தர சோழரும் அவருடைய மக்களும் கூட சௌந்தரியத்தில் சிறந்து விளங்குகிறார்கள்?......ஆ! அழகி என்றதும், அந்தக் குடந்தை நகரத்து மங்கை—அரசலாற்றங்கரைப் பெண்மணியின் நினைவு வருகிறது. நினைவு புதிதாக எங்கிருந்தோ வந்து விடவில்லை. அவனுடைய உள்ளத்துக் குள்ளேயே கனிந்து கொண்டிருந்த நினைவுதான்.

**வ**ந்தியத்தேவனுடைய வெளிமனம் சோழ நாட்டின் இயற்கை வளங்களைப் பற்றியும் இராஜரீகக் குழப்பங்களைப் பற்றியும் எண்ணிக் கொண்டிருக்கையில் அவனுடைய உள் மனம் அந்த மங்கையினிடத்திலேயே ஈடுபட்டிருந்தது. இப்போது உள் மனம், வெளி மனம் இரண்டும் ஒத்து அம்மங்கையைக் குறித்துப் பட்டவர்த்தனமாகச் சிந்திக்கத் தொடங்கின. பிறகு, வெளியில் எந்த அழகான இயற்கைப் பொருளைப் பார்த்தாலும் அந்த மங்கையின் அவயவங்களுடன் ஒப்பிடத் தோன்றின. வழுவழுப்பான மூங்கிலைப் பார்த்ததும் அவளுடைய தோள்கள் நினைவு வந்தன. ஓடைகளில் மண்டிக் கிடந்த குவளை மலர்கள் அவளுடைய கண்களுக்கு உவமையாயின. பங்கஜ மலர்கள் அவளுடைய தங்க முகத்துக்கு இணையாகுமா என்ற ஐயம் தோன்றியது. நதியோர மரங்களில் குலுங்கிக் கொண்டிருந்த மலர்களில் வண்டுகள் செய்த ரீங்காரத்தை அவள் குரலின் ஒலிக்கு உவமை சொல்வது சரியாகுமா? இப்படியெல்லாம் கவிகள் கற்பித்திருக்கிறார்களே தவிர, உண்மையில் இவையெல்லாம் எங்கே? அந்த மங்கையின் சௌந்தரியம் எங்கே? அவளுடைய திரு முகத்தைப் பார்த்த போது மெய் சிலிர்த்ததே! இப்போது நினைத்துப் பார்க்கும் போதுங்கூட நெஞ்சு விம்முகிறதே! இந்தப் பூக்களையும் வண்டுகளையும் பார்த்தால் அத்தகைய மெய் சிலிர்ப்பு உண்டாகவில்லையே?...... சேச்சே! முதியோர்கள் நமக்குச் செய்த உபதேசத்தையெல்லாம் மறந்து விட்டோம்! பெண்களின் மோகத்தைப் போல் உலக வாழ்க்கையில் பொல்லாத மாயை வேறொன்றுமில்லை. வாழ்க்கையில் வெற்றிபெற விரும்புவோன் பெண்களின் மோக வலையில் விழவே கூடாது. விழுந்தால் அவன் ஒழிந்தான்! கோவலன் கதைதான் அந்த விஷயத்தை அபூர்வமாய் எடுத்துச் சொல்கிறதே!— கோவலன் மட்டும் என்ன? இந்த நாளில் வீராதி வீரரும் சோழ நாட்டிலே இணையற்ற செல்வாக்கு உள்ளவருமான பெரிய பழுவேட்டரையரைப் பற்றி மக்கள் பரிகாசம் பேசுங் காரணமும் அதுதானே? — ஆனால் மக்கள் உண்மை அறியாதவர்கள். மூடு பல்லக்கிலே வைத்துப் பழுவேட்டரையர் யாரைக் கொண்டு வருகிறார் என்று மக்களுக்குத் தெரியாது! ஆகையால் மூடத்தனமாகப் பேசுகிறார்கள். ஆனாலும், அந்த மதுராந்தகத் தேவர் தம்மை அவ்வளவு கேவலப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. சீச்சீ!

மூடு பல்லக்கில் உட்கார்ந்து கொண்டு, பழுவேட்டரையரின் ராணியின் ஸ்தானத்தில் மறைந்து கொண்டு, ஊர் ஊராய்ப் போவதா? இதுதான் ஆண்மைக்கு அழகா? இப்படியாவது இராஜ்யம் சம்பாதிக்க வேண்டுமா? இப்படிச் சம்பாதித்த இராஜ்யத்தைத்



தான் அவரால் காப்பாற்றிக் கொள்ள முடியுமா? பழுவேட்டரையர் முதலியோரை நம்பி அவர்களுக்கு உட்பட்டுத்தானே இராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டும்? இந்த விஷயத்தில் சுந்தர சோழ சக்கரவர்த்தி செய்து வருவதே அவ்வளவு சிலாக்கியமில்லைதான்! பழுவேட்டரையர் போன்றவர்களுக்கு இவ்வளவு அதிகாரமும் செல்வாக்கும் அவர் அளித்திருக்கக் கூடாது. அதிலும் மணி மணியாக இரண்டு அருமைப் புதல்வர்கள் இருக்கும்போது?—நாடெல்லாம் அதிசயிக்கும் அறிவும் திறனும் உடைய புதல்வி ஒருத்தியும் இருக்கும்போது?... அந்த மங்கை, ஜோதிடர் வீட்டில் பார்த்தவள், ஆற்றங் கரையில் பேசியவள், — அவள் முகம் யாருடைய ஜாடையாயிருக்கிறது?...... அப்படியும் இருக்கலாமோ?—பைத்தியக்காரத்தனம்! ஒருநாளும் அப்படி யிருக்க முடியாது!—ஏன் இருக்க முடியாது? ஒரு வேளை அவ்விதம் இருந்தால், நம்மைப் போன்ற அறிவீனன் வேறு யாரும் இல்லை! நம்மைப் போன்ற துரதிர்ஷ்டசாலியும் இல்லை! இலங்கை முதல் விந்தியபர்வதம் வரையில் எந்தப் பெண்ணரசியின் புகழ் பரந்து விரிந்து பரவியிருக்கிறதோ, அவளிடம் நாம் எப்பேர்ப்பட்ட காட்டுமிராண்டியைப்போல் நடந்து கொண்டோம்!—அப்படி இருக்கவே இருக்காது! நாளைக்கு அவளிடம் எப்படி இளவரசரின் ஓலையுடனே சென்று முகத்தைக் காட்ட முடியும்?

இப்படியாக என்னவெல்லாமோ வானத்தையும் பூமியையும் சேர்த்து எண்ணமிட்டுக் கொண்டு வந்தியத்தேவன் காவேரிக் கரையோடு வந்து திருவையாற்றை அடைந்தான். இவன் காவேரியின் தென் கரையில் நிற்க, திருவையாறு வடகரையில் இருந்தது. அந்தஊரின் வளமும் அழகும் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அது திருவையாறுதானா என்று கேட்டுத் தெரிந்துகொண்டான்.

அந்த அற்புத க்ஷேத்திரத்தின் மகிமையைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருந்ததெல்லாம் உண்மைக்குக் கொஞ்சம் குறைவாகவே தோன்றியது. ஞானசம்பந்தர் தேவாரத்தில் உள்ள வர்ணனை இங்கே அப்படியே தத்ரூபமாய்க் காண்கிறது. முந்நூறு ஆண்டு காலத்தில் மாறுதல் ஒன்றுமே யில்லை. அதோ காவேரியின் கரையில் உள்ள மரங்கள் என்ன செழிப்பாய் வளர்ந்திருக்கின்றன! பலா மரங்களில் எவ்வளவு பெரிய பெரிய பலாக் காய்கள் தொங்குகின்றன! இந்த மாதிரி தொண்டை மண்டலத்தில் எங்கும் பார்க்கவே முடியாதுதான்! ஆகா! வளமான இடங்களுக்கென்று குரங்குகள் எங்கிருந்தோ வந்துவிடுகின்றன. அவை கிளைக்குக் கிளை தாவுவது எவ்வளவு அழகாயிருக்கிறது? சம்பந்தப் பெருமான் என்ன சொல்லியிருக்கிறார்? இதோ ஞாபகம் வருகிறது! திருவையாற்று வீதி மூலை அரங்கங்களில் பெண்கள் நடனம் ஆடுகிறார்கள். அந்த ஆடலுக்கேற்ற பாடலோடு மத்தளச் சத்தமும் முழங்குகிறது. அந்த முழக்கத்தைக் கேட்ட குரங்குகள் மேகங்களின் கர்ஜனை என்று எண்ணி உயர்ந்த மரங்களின் உச்சாணிக் கிளைகளில் ஏறி மழை வருமா என்று வானத்தைப் பார்க்கின்றன! அடாடா! இன்றைக்கும் எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது! உயர்ந்த மரங்களில் உச்சாணிக் கிளைகளில் குரங்குகள் ஏறுகின்றன! அது மட்டுமா? ஆடல் பாடல்களுக்குரிய இனிய சத்தங்களும் ஊருக்குள்ளிருந்து வருகின்றன. யாழ், குழல், முழவு, தண்ணுமை முதலிய கருவிகளின் ஒலியுடன் சதங்கைச் சத்தமும் சேர்ந்து


ஒலிக்கின்றன. இங்கே ஆடுகிறவர்கள் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் ஆடியவர்களைப் போல் குரவைக் கூத்தர்கள் அல்ல. ஆகா! இங்கே கேட்பது பண்பட்ட இனிய கானம். கலைச் சிறப்பு வாய்ந்த பரத நாட்டியம் ஆடுவோரின் சதங்கை ஒலி. அதோ, ஆட்டி வைக்கும் நடன ஆசிரியர்கள் கையில் பிடித்த கோலின் சத்தம் கூடச் சேர்ந்து வருகிறதே!

"கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலை யாடச் சேயிழை
யார் நடமாடுந் திருவையாறே!"

ஆகா! சம்பந்த ஸ்வாமிகள் சிறந்த சிவ பக்தர்; அதைக் காட்டிலும் சிறந்த ரஸிகர்! அவர் அன்றைக்கு வர்ணனை செய்தபடியே இன்றைக்கும் இந்தத் திருவையாறு விளங்குகிறதே! இப்படிப்பட்ட ஊரில் ஒரு நாள் தங்கி ஆடல் பாடல் விநோதங்களைப் பார்த்துவிட்டு, ஐயாறப்பரையும் அறம் வளர்த்த நாயகி அம்மனையும் தரிசித்து விட்டுத்தான் போக வேண்டும்! அடாடா! காவேரியின் கரையில் எத்தனை பக்தர்கள் உட்கார்ந்து அனுஷ்டானம் செய்கிறார்கள்? பட்டை பட்டையாக அவர்கள் திருநீறு அணிந்திருப்பது எவ்வளவு களையாயிருக்கிறது? சில சமயம் ஆடல்பாடல் ஒலிகளை அமுக்கிக் கொண்டு 'நமசிவாய' மந்திரத்தின் ஒலி கேட்கிறதே! ஏன்? அதோ சம்பந்தரின் தேவாரத்தையே யாரோ இனிய குரலில் அருமையாகப் பாடுகிறார்களே? இசைக்கும் கலைக்கும் என்றே இறைவன் பணித்த ஊர் இந்தத் திருவையாறு போலும்! இந்த ஊரில் கட்டாயம் ஒரு நாள் தங்கிப் பார்த்து விட்டுத்தான் போக வேண்டும்! தஞ்சாவூருக்கு அவசரமாகப் போய்த்தான் என்ன பயன்? கோட்டைக்குள் பிரவேசிக்க முடிகிறதோ, என்னமோ? அப்படிப் பிரவேசித்தாலும் மகாராஜாவின் பேட்டி கிடைக்குமா? மகாராஜாவைத்தான் இரண்டு பழுவேட்டரையர்களுமாகச் சேர்ந்து சிறையில் வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்களாமே?......காவேரியின் வடகரைக்குப் போக வேண்டியதுதான்!

இந்த முடிவுக்கு வந்தியத்தேவன் வந்துவிட்ட தருணத்தில் ஒரு சம்பவம் நடந்தது. மேற்குத் திசையிலிருந்து காவேரிக் கரையோடு ஒரு பல்லக்கு வந்தது. பல்லக்குக்கு முன்னாலும் பின்னாலும் சில காவல் வீரர்களும் வந்தார்கள். வந்தியத்தேவனுக்கு ஏதோ ஒரு சந்தேகம் தோன்றியது. பல்லக்கு அருகில் வருகிற வரையில் அங்கேயே நின்று காத்துக் கொண்டிருந்தான். அவன் நினைத்தபடியே இருந்தது. பல்லக்கை மூடியிருந்த வெளித்திரையில் பனைமரத்தின் இலச்சினைச் சித்திரம் காணப்பட்டது! ஆஹா! கடம்பூரிலிருந்து வருகிற பல்லக்குத்தான் இது! நாம் குடந்தை வழியாக வர, இவர்கள் வேறொரு வழியில் வந்திருக்கிறார்கள்! ஆனால் பழுவேட்டரையரைக் காணோம்! அவர் வேறு எங்கேயாவது வழியில் தங்கிவிட்டார் போலும்!

பல்லக்கு தஞ்சாவூர் இருந்த தென் திசை நோக்கித் திரும்பியது. அவ்வளவுதான். வந்தியத்தேவன் திருவையாற்றில் தங்கும் எண்ணத்தை விட்டுவிட்டான். அந்தப் பல்லக்கைப் பின் தொடர்ந்து செல்லத் தீர்மானித்தான். என்ன நோக்கத்துடன் அப்படித் தீர்மானித்தான் என்றால், அது அச்சமயம் அவனுக்கே தெரிந்திருக்கவில்லை. பல்லக்கில் வீற்றிருப்பது மதுராந்தகத் தேவர் என்று மட்டும் அவனுக்கு நிச்சயமாய்த் தெரிந்தது. அவர்மேல் ஏற்பட்டிருந்த அருவருப்பு மேலும் சிறிது வளர்ந்தது. ஆனாலும் பல்லக்கைத் தொடர்ந்து கொஞ்சம் போனால், ஏதாவது ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்படலாம். பல்லக்கைச் சுமப்பவர்கள் அதைக் கீழே வைக்கலாம். ஏதேனும் ஒரு காரணத்துக்காக இளவரசர் மதுராந்தகர் வெளிப்பட்டு வரலாம். அச்சமயம் அவருடன் பழக்கம் செய்துகொள்ளலாம். அது தஞ்சாவூர்க் கோட்டைக்குள் பிரவேசிக்கவும், சக்கரவர்த்தியைப் பார்க்க



வும் பயன்படலாம். அதற்குத் தகுந்தபடி ஏதாவது கொஞ்சம் பேசி வேஷம் போட்டால் போகிறது. தந்திர மந்திரங்களைக் கையாளாவிட்டால் எடுத்த காரியம் கைகூடாது அல்லவா? அதிலும் இராஜாங்க காரியங்களில்?



எனவே, பல்லக்கையும் பரிவாரங்களையும் முன்னால் போகவிட்டுச் சற்றுப் பின்னாலேயே வந்தியத்தேவன் போய்க்கொண்டிருந்தான். ஆனால் அவன் எதிர்பார்த்த சந்தர்ப்பம் ஒன்றும் கிட்டவில்லை. காவேரிக்கும் தஞ்சாவூருக்கும் மத்தியிலிருந்த மற்றும் நாலு நதிகளைக் கடந்தாகி விட்டது. அப்படியும் பல்லக்கு கீழே வைக்கப்படவில்லை. ஒரே மூச்சாகப் போய்க் கொண்டிருந்தது. அதோ சற்றுத் தூரத்தில் தஞ்சாவூர்க் கோட்டை மதிளும் வாசலும் தெரியத் தொடங்கி விட்டன. கோட்டைக்குள் பல்லக்குப் போய் விட்டால், அப்புறம் அவன் எண்ணம் கைகூடப் போவதில்லை. அதற்குள் தைரியமாகவும் துணிச்சலாகவும் ஏதேனும் ஒன்று செய்தாக வேண்டும். என்னதான் வந்து விடும்? தலையா போய் விடும்? அப்படிப் போனால்தான் போகிறதே? — எடுத்த காரியத்தை முடிக்காமல் உயிரோடு திரும்பிப்போவதில் என்ன லாபம்? இதற்கெல்லாம் அடிப்படையில் மதுராந்தகத்தேவர் பேரில் வந்தியத் தேவனுக்குக் கோபம் வேறு இருந்தது. பல்லக்கின் மூடு திரையைக் கிழித்தெறிந்து உள்ளே யிருப்பது பெண்ணல்ல, மீசை முளைத்த ஆண் பிள்ளை என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று அவன் கை ஊறியது; அவன் உள்ளம் துடிதுடித்தது.

இதற்கு என்ன வழி என்று அவன் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கையில் பல்லக்கோடு சென்ற பரிவாரங்களில் ஒருவன், சற்றுப் பின் தங்கி வந்தியத்தேவனை உற்று நோக்கினான்.

"நீ யார் அப்பா! திருவையாற்றிலிருந்து எங்களை ஏன் தொடர்ந்து வருகிறாய்?" என்று கேட்டான்.

"நான் உங்களைத் தொடர்ந்து வரவில்லை ஐயா! தஞ்சாவூருக்குப் போகிறேன்! இந்தச் சாலைதானே தஞ்சாவூர் போகிறது!" என்றான் வந்தியத்தேவன்.

"இந்தச் சாலை தஞ்சாவூருக்குத்தான் போகிறது. ஆனால் இதில் முக்கியமானவர்கள் மட்டுமே போகலாம். மற்றவர்களுக்கு வேறு சாலை இருக்கிறது!" என்றான் வீரன்.

"அப்படியா? ஆனால் நானும் ரொம்ப ரொம்ப முக்கியமான மனுஷன்தான்!" என்றான் வந்தியத்தேவன்.

அதைக் கேட்ட அவ் வீரன் புன்னகை செய்து விட்டு, "தஞ்சைக்கு எதற்காகப் போகிறாய்!" என்றான்.

"என் சித்தப்பா தஞ்சையில் இருக்கிறார். அவருக்கு நோய் என்றறிந்து பார்க்கப் போகிறேன்" என்று கூறினான் வந்தியத்தேவன்.

"உன் சித்தப்பா தஞ்சையில் என்ன செய்கிறார்? அரண்மனையில் உத்தியோகம் பார்க்கிறாரா?"

"இல்லை, இல்லை; சத்திரத்தில் மணியக்காரராயிருக்கிறார்!"

"ஓகோ! அப்படியா! சரி, எங்களுக்கு முன்னால் நீ போவதுதானே? ஏன் பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறாய்?"

"குதிரை களைத்துப் போயிருக்கிறது, ஐயா! அதனாலேதான்! இல்லாவிடில் உங்கள் முதுகைப் பார்த்துக் கொண்டே வருவதில் எனக்கு என்ன திருப்தி?"

இப்படிப் பேசிக் கொண்டே வந்தியத்தேவன் பல்லக்கின் அருகில் வந்து விட்டான். உடனே, அவன் மூளையை வரட்டிக் கண்டு பிடிக்க முயற்சித்த உபாயமும் புலப்பட்டு விட்டது. குதிரையைக் கால்களால் அமுக்கி, முகக்கயிற்றை இழுத்து, பல்லக்கின் பின் தண்டைத் தூக்கியவர்களின் பேரில் விட்டடித்தான். அவர்கள் பயத்துடன் திரும்பிப் பார்த்தார்கள். வந்தியத்தேவன் உடனே, "மகாராஜா! மகாராஜா! பல்லக்குத் தூக்கும் ஆள்கள் என் குதிரையை இடிக்கிறார்கள்! ஐயோ! ஐயோ!" என்று கத்தினான். பல்லக்கை மூடியிருந்த திரை சலசலத்தது. (தொடரும்)

# பங்களூர் நாகரத்தினம்மாள்

**ஸ்ரீ துரையப்ப பாகவதர்**

நாதோபாஸனையின் மூலம் தம் இஷ்ட தெய்வமான ராமபிரானை வழிபட்டு பகவானை நேரில் கண்டு தரிசிக்கும் பாக்கியம் பெற்ற சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், சங்கீத மகான்களில் முன்னணியில் இருந்து வருகிறார். எல்லா சங்கீத வித்வான்களும் அவருடைய சிஷ்ய கோடிகள்தான்.

சில வித்வான்கள் ஸ்வாமிகளின் கீர்த்தனங்களின் அர்த்தம், பாவம் இவைகளை நன்குணர்ந்து அவைகளின் சாஹித்யங்கள் கெடாமல் கானம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். சிலர் அவைகளைச் சம்பிரதாய முறை வழுவாது சொல்லி வைக்கும் பணியில் சிறந்து விளங்கினார்கள். சில வித்வத் கோஷ்டிகள் ஸ்வாமிகளின் ஆராதனை உற்சவத்தைத் திருவையாற்றிலும் மற்ற இடங்களிலும் நடத்தும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

திருவையாற்றில் ஒரு கோஷ்டியின் தலைவராயிருந்து உற்சவம் நடத்திவந்த பிடில் கோவிந்தசாமிப்பிள்ளை வருஷா வருஷம் வசூலாகும் தொகைகளை அவ்வப்போது செலவழித்து வந்ததுடன், வசூலுக்கு மீறின செலவுகள் ஏற்படும்போது அதைத் தாமே ஏற்றுக் கொண்டு சற்குருவின் கைங்கர்யத்தில் தியாக சீலராய் விளங்கி வந்தார். ஆனால் சற்குருவின் அதிஷ்டானத்தை ஆலயமாக்கிய கைங்கர்யமும் சுற்றிலும் உள்ள விஸ்தாரமான இடங்களை வாங்கி அதை ஸ்ரீ தியாகராஜ ஆசிரமமாக மாற்றிய பெருமையும் பங்களூர் ஸ்ரீமதி நாகரத்தினம்மாளைச் சேர்ந்ததாகும்.

*   *   *

இப்பேர்ப்பட்ட பக்த ரத்னமாகிய பங்களூர் நாகரத்தினம்மாள் 1878-ம் வருஷம் மைசூரில் பிறந்தார். இவர் மூன்று வயதுக் குழந்தையாயிருக்கும் போதே தகப்பனார் காலஞ்சென்று விட்டார். இந்த எதிர்பாராத சம்பவத்தால் பல கஷ்டங்களுக்கு ஆளாகிய நாகரத்னத்தின் தாயார் புட்டலட்சுமி அம்மாள் தமது பெண்ணை முன்னுக்குக் கொண்டு வரும் விஷயத்தில் மிகுந்த சிரத்தை கொண்டார். மைசூரில் பிரசித்தமாய் விளங்கி வந்த ஸமஸ்கிருத பண்டிதர் கிரிபட்ட தம்மையா சாஸ்திரியாரிடம் சென்று தம் குழந்தைக்குச் சங்கீதமும் ஸமஸ்கிருதமும் சொல்லிக் கொடுக்க வேணுமாய்க் கேட்டுக் கொண்டார். தாயாரின் சிரத்தையைக் கவனித்த சாஸ்திரியார் உற்சாகத்துடன் ஏற்றுக் கொண்டார். அந்த மகானிடம் பெற்ற பாஷா ஞானமே எதிர்காலத்தில் நாகரத்னம்மாள் பெற்ற பாண்டித்யத்திற்கும் வாக்கு வன்மைக்கும் அஸ்திவாரமாக அமைந்தது.

ஒரு சிலரின் பொறாமையினால் சாஸ்திரியார் நாகரத்தினத்துக்குச் சிட்சை சொல்லிக் கொடுப்பதை நிறுத்தி விட்டார். உடனே புட்டலட்சுமி அம்மாள் சாஸ்திரிகளிடம் சென்று “சாஸ்திரியார் அவர்களே! என் பெண்ணுக்குச் சங்கீதத்தில் பூரண பாண்டித்யம் ஏற்பட்டு அவள் வித்துவான்களால் கொண்டாடப்படும் நிலைமையை அடையும் வரையில் இந்த மைசூருக்குள் கால்கள் புகுவதில்லை” என்ற சபதம் செய்துவிட்டுத் தம் பெண்ணுடன் மைசூரை விட்டுக் கிளம்பி விட்டார்.

ஏழை பங்காளனாகிய இறைவன் திக்கற்றவர்களாகிய தாயையும் பெண்ணையும் கைவிடவில்லை. சங்கீத ரஸிகரும், தனவானும், பரோபகாரியுமான தேசிகாச்சாரியார் அவர்களைக் காப்பாற்ற முன் வந்தார். அவர்களைக் காஞ்சீபுரம் தனகோடியம்மாளுக்கு அறிமுகப் படுத்தி வைத்ததுடன் சிறுமிக்கு வித்தியாதானம் செய்து முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

புட்டலட்சுமியம்மாள் தன் பெண்ணுடன் காஞ்சீபுரம் தனகோடியம்மாள் வீடு போய்ச் சேர்ந்தார். ஒன்பது வயதுள்ள சிறுமி நாகரத்தினத்தை அன்புடன் அணைத்துக் கொண்ட தனகோடியம்மாள் “நீ வித்யா சுந்தரியாய் விளங்குவாய். அதில் சந்தேகமேயில்லை. ஆனால் எனக்கு இப்பொழுது சிட்சை சொல்லிக் கொடுக்க அவகாசமில்லை. வேணுமானால் ஸ்ரீரங்கத்தில் உள்ள ஒரு பெரிய வித்வானிடம் சிபாரிசு செய்கிறேன்” என்றார்.

இது சுமார் அறுபத்துநாலு வருஷங்களுக்கு முன் நடந்தது. அந்தக் காலத்தில் சுலபமாய் நினைத்தவிடம் போக ரயில் மார்க்கமோ, சாலை மார்க்கமோ கிடையாது. இவர்களோ அபலைகள்; பொருள் வசதி யில்லாதவர்கள். ஸ்ரீரங்கத்துக்கு எப்படிப் போவார்கள்! ஆகவே மீண்டும் பங்களூருக்கே வந்து தேசிகாச்சாரியாரின் ஆதரவில் இருந்து வந்தார்கள். தேசிகாச்சாரியார் பிடில் வித்வான் முனுசாமி அப்பாவிடம் சிறுமி நாகரத்தினத்தை ஒப்புவித்தார். நாகரத்தினமும் அவரிடம் நிம்மதியுடன் அப்பியாசம் செய்து வந்தார்.

பங்களூர் முனுசாமி அப்பா தன் சகோதரி பெண்ணாகிய சந்திரவதனி என்பவளுடன் நாகரத்தினத்தையும் சேர்த்துச் சிட்சை சொல்லிக் கொடுத்து வந்தார். இருவரும் சங்கீதம், நாட்டியம் ஆகிய கலைகளில் தேர்ச்சியடைந்து வருகையில் நாகரத்தினத்தின் புத்தி கூர்மையையும் இயற்கையில் அவளுக்கு அந்தக் கலைகளில் ஏற்பட்டுவரும் லாகவத்தையும் கண்ட குரு மிகவும் வியந்து அவளிடம் விசேஷ பிரியம் காட்டினார். இதையறிந்த சந்திரவதனிக்கும் அவள் தாயாருக்கும் நாகரத்தினத்திடம் பொறாமை ஏற்பட்டு விட்டது. குருவின் மனதையும் கலைக்க ஆரம்பித்தார்கள். ஆனால் உத்தம குணம் வாய்ந்த முனுசாமி அப்பா அதையெல்லாம் பொருட்படுத்தாது, அன்புடனும் ஆர்வத்துடனும் நாகரத்தினத்துக்குப் பாடம் கற்பித்தார். சிறுமி நாகரத்தினமும் மிகுந்த ஊக்கத்துடன் அநேக கீர்த்தனங்களைப்

பாடம் செய்து கொண்டதுடன் பங்களூரில் இருந்து வந்த சென்னை திருவேங்கடாச்சாரியார் என்ற பெரியாரிடம் பரத சாஸ்திர நுணுக்கங்களையும், பங்களூர் கிட்டண்ணா என்பவரிடம் நாட்டியக் கலையையும் பயின்று வந்தாள். இப்படியாக சுமார் பதிமூன்று வயதுக்குள் கான, அபிநய, நாட்டியக் கலைகளில் தேர்ச்சியடைந்து பிரகாசித்தாள். தாய் பாஷையாகிய கன்னடத்தை யன்றி, தாயின் முயற்சியால் சமஸ்கிருதத்தில் அமரம் மூன்று காண்டமும் பாடமாகி யிருந்தது. ஆனால் அக்காலத்தில் சங்கீத சாஸ்திர சம்பந்தமான புத்தகங்கள் தெலுங்கில் அச்சிடப்பட்டுப் பிரசுரமாகியிருந்தபடியால் தாயார் லக்ஷ்மியம்மாளின் ஏற்பாட்டின்படி, சாங்கோபாங்கமாய்த் தெலுங்கு பாஷையைக் கற்றுப் பண்டிதையானாள். பிறகு தமிழ் மொழியும் கற்றுத் தேர்ந்தாள். இப்படியாக சுக்கில பக்ஷத்துச் சந்திரனைப் போல் தன் குமாரி அபிவிருத்தியடைந்து வந்ததையறிந்த தாயார் அவளுடைய வித்தை, சீலம், ஞானம், அழகு இவைகளைக் கண்டு மகிழ்ந்தாள்.

இந்தச் சமயத்தில் தாயார் புட்டலக்ஷ்மிக்கு இருந்த நீண்ட நாள் நோய் முற்றி அவள் பாயும் படுக்கையுமாகி விட்டார். தமக்கு இறுதிகாலம் சமீபித்து விட்டதை யறிந்தார். தமது மகள் நாகரத்தினத்தைக் குருவாகிய முனுசாமி அப்பாவிடம் அடைக்கலமாக ஒப்புவித்து, மைசூர் சாஸ்திரியாரிடம் தாம் ஏற்கெனவே கூறிய சபதத்தை எப்படியாவது நிறைவேற்றி வைக்க வேண்டியது அவருடைய கடமை என்பதை ஞாபக மூட்டினார். மறுபடியும் தம் மகளை மார்புறத் தழுவிக் கண்ணீர் சொரிந்து நாத் தழு தழுக்க, "மகளே! நான் உனக்கு எவ்விதச் செல்வத்தையும் வைக்காமல் போய் விட்டேனே என்று நீ ஏங்காதே! அவைகள் எல்லாம் அழியும் செல்வங்கள். ஆனால் கடவுள் அருளால் அழியாப் பொருளாகிய கலைகளை, உனக்குப் பயிற்சி செய்விக்கும் விஷயத்தில் நான் என் ஜீவிய காலம் முழுதும் பாடுபட்டிருக்கிறேன். அவைகள்தான் உனக்கு உண்மையான செல்வம். நீயும் வெகுகாலம் பெயரும் புகழும் பெற்றுத் தீர்க்காயுளுடன் வாழ்ந்திருப்பாய" என்று மனப்பூர்வமாய் வாழ்த்தினர். சிறிது நேரத்திற் கெல்லாம் புட்டலக்ஷ்மியின் தேகத்தை விட்டு ஆத்மா பிரிந்தது.

* * *

நாகரத்தினம் பதினைந்தாவது வயதில் சங்கீதம், அபிநயம், நாட்டியம் ஆகிய மூன்று கலைகளிலும் வித்துவான்களால் புகழப்படும் நிலைமைக்குத் தேர்ச்சியைப் பெற்றாள். அவளுடைய முதல் கச்சேரி மைசூர் சமஸ்தான வித்துவான் வைணிக சிகாமணி வீணை சேஷண்ணா அவர்களின் வீட்டில் அநேக வித்துவான்களின் முன்னிலையில் அரங்கேற்றமாக நடைபெற்றது. கச்சேரியின் முடிவில் வித்துவான் சேஷண்ணா அவர்கள் அன்பும் ஆதரவும் பொங்க, கச்சேரியின் பெருமையையும் சிறுமி நாகரத்தினத்தின் ஞானபாவத்தையும் புகழ்ந்து பேசியதுடன் ஒரு ஜோடி சால்வையையும் சன்மானமாக அளித்து ஆசீர்வதித்தார்.

குமாரி நாகரத்தினத்தின் கீர்த்தி பல இடங்களிலும் பரவி மைசூர் மன்னரின் கவனத்தையும் கவர்ந்தது. மேன்மை தங்கிய சாமராஜேந்திர உடையார் பகதூர் அவர்களின் குமாரி ஜயலக்ஷ்மியின் ருதுமங்கள வைபவத்துக்கு நாகரத்தினத்தை மன்னர் அழைத்திருந்தார். அரண்மனையில் உள்ள ராஜ்மகால் என்ற சிங்கார மண்டபத்தில் நாகரத்தினத்தின் சங்கீத - நாட்டியக் கச்சேரிகள் வெகு கோலாகலமாய் நடந்தன. விசேஷ சன்மானங்களும் வழங்கப்பட்டன. ஆகவே குமாரி நாகரத்தினம்மாள் மகாராஜாவின் உள்ளன்புக்கும் பேராதரவுக்கும் உரியவளாகி அது முதல் அரண்மனையிலேயே வசித்து வந்தாள்.

மைசூரில் தசராப் பண்டிகை விசேஷமாகக் கொண்டாடப்படுவது எல்லாரும் அறிந்ததே. ஆயிரக்கணக்கான பிரமுகர்களும் கலா ரஸிகர்களும் இந்த விழாவுக்கு வருவார்கள். அந்த வருஷம் தசராப் பண்டிகையில் நாகரத்தினத்தின் சங்கீத - நாட்டியக் கச்சேரிகள் முக்கியமான அம்சங்களாய் விளங்கும் என்பதையறிந்த ரஸிகர்களும் வித்துவான்களும் ஏராளமாக வந்து கூட ஆரம்பித்தார்கள். எங்கு பார்த்தாலும் இதே பேச்சாக இருந்தது.

மைசூர் அரண்மனை தர்பார் மண்டபத்தில், அநேக வித்துவான்களும் பண்டிதர்களும் கூடியிருந்த சபையில், நமது நாகரத்தினத்தின் சங்கீதக் கச்சேரி பிரமாதமாக நடந்தது. அன்றையக் கச்சேரிக்கு நாகரத்தினத்தின் ஆதி குருவும் ஆஸ்தான வித்துவானுமாகிய கிரிபட்ட தம்மய்யா சாஸ்திரியார் வந்திருந்தார். தம்மால் திரஸ்காரம் செய்யப்பட்ட சிறுமி இந்த ஏழு வருஷகாலத்தில் சங்கீதக் கலையில் தேர்ச்சி பெற்று ஜன ரஞ்சகமாய் சங்கீதத்தைப் பொழிந்துவரும் விமரிசையை வர்ணிக்கச் சக்தியற்றவரானார். கச்சேரியின் முடிவில், நாகரத்தினத்துக்குப் பதக்கம், தோடா, கில்லாத்துகள் முதலியவை சன்மானமாய் அளிக்கப்பட்டன. அளவிலா ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் அடைந்த சாஸ்திரியார்,



"உங்களுக்கு ரொம்ப கோபம் வந்து விடுகிறதாமே?"

"நான் எவ்வளவு சாந்தப் பேர்வழி, என்னை யார் அப்படிச் சொன்னது? பல்லை உடைத்து நொறுக்கி விடுவேன், ஜாக்கிரதை!"

"தாயாரின் சபதத்தை நிறைவேற்றிய சத்புத்ரி நீதான்! இந்த வைபவத்தை அவளும் நேரில் இருந்து பார்த்திருந்தால் எவ்வளவோ ஆனந்தம் அடைந்திருப்பாள்" என்று சொல்லி நாகரத்தினத்தை மனப்பூர்வமாய் ஆசீர்வாதம் செய்து மகிழ்ந்தார்.

நாகரத்தினத்தின் மைசூர் ராஜ்ய சம்பந்தம் அதிக நாள் நீடிக்கவில்லை. இரண்டு வருஷத்திற்குள் மகாராஜா சாமராஜேந்திர உடையார் காலமாகி விட்டார். நாகரத்னமும் மைசூரை விட்டுப் பங்களூருக்கு வரவேண்டியதாயிற்று. அங்கு வந்த பல காலத்துக்கெல்லாம் அவள் குரு முனுசாமி அப்பாவும் காலமானார். குரு பக்தியல் சிறந்த நாகரத்தினம்மாள் பிரதி வருஷமும் வெகு சிரத்தையுடன் அந்தக் குருபூஜையை நடத்தி வருகிறார்.

நாகரத்தினத்தின் பெயரும் புகழும் மாகாணம் முழுவதும் பரவிற்று. வெகு இடங்களிலிருந்து கச்சேரிகளுக்கு அழைப்புகள் வந்த வண்ணமாயிருந்தன. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னெல்லாம் தற்காலத்தில் இருப்பது போல் சங்கீதம் மலிந்து அம்பலத்துக்கு வந்துவிடவில்லை! சங்கீத சாஸ்திர நுட்பங்களைப் போற்றித் தெளிந்த புண்யாத்மாக்களையே சங்கீத தேவதை அபிமானித்து வந்தாள். ஆகவே அங்குமிங்கும் அபூர்வமாய்த் தோன்றினார்கள் சங்கீத வித்வான்கள். அதிலும் ஸ்திரீகள் வெகு சிலரே. ஆகவே குமாரி நாகரத்தினத்திற்குப் பக்கவாத்தியம் அமைவதற்குச் சில அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தன. அப்பொழுது கச்சேரிக்குப் பிடில் வாசித்தவர்களில் சென்னை திருக்கோடிகாவல் ரங்காச்சாரியார், கிருஷ்ணசாமி முதலியார், கும்பகோணம் சீதாராமய்யர், ராமசாமி ஐயர் முதலியவர்களைக் குறிப்பிடலாம்.

சென்னையிலிருந்து வரதாச்சாரியார் என்ற சங்கீத வித்துவான் அடிக்கடி மைசூர் சமஸ்தானத்தாருக்குக் கச்சேரி செய்ய வருவார். நாகரத்தினத்தின் உயர்ந்த சங்கீதத்தை ரஸித்து அவரை எப்படியாவது சென்னைக்கு அழைக்க வேணுமென்று அவர் அவாக் கொண்டார். அதற்கேற்ற சந்தர்ப்பமும் கிடைத்தது. ராஜா ஸர் ஸவலை ராமசாமி முதலியார் வீட்டுக்குப் பரோடா மகாராஜா அவர்கள் விஜயம் செய்வதாய் ஏற்பாடாகியிருந்தது. அதை ஒரு விழாவாகக் கொண்டாட எண்ணிய சில பிரமுகர்கள் ஒரு சிறந்த சங்கீதக் கச்சேரியை நடத்த எண்ணினார்கள். ஸ்ரீ வரதாச்சாரியாரின் விருப்பப்படி நாகரத்தினத்திற்கு அழைப்பு அனுப்பி வைத்தார்கள். அக்காலத்தில் பிரபல சங்கீத வித்வானாய் இருந்து வந்த கோயம்புத்தூர் தாயி அவர்கள் வர இருந்த கச்சேரி நாகரத்தினத்திற்குக் கிடைத்தது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. அந்தக் கச்சேரியிலிருந்தே நாகரத்தினத்தின் சங்கீதம் சென்னை தஞ்சை போன்ற இடங்களில் பெரிதும் போற்றப்படலாயிற்று. சென்னையில் நடந்த அந்தக் கச்சேரிக்கு எல்லாச் செலவுகளும் போக ரூபாய் இருநூறு சன்மானமாக அளிக்கப்பட்டது. இப்படியாக பங்களூரில் இருந்து கொண்டே சென்னையிலும் மற்ற ஊர்களிலும் அழைக்கப்பட்ட கச்சேரிகளுக்கெல்லாம் நாகரத்தினம் போய் வந்து கொண்டிருந்தார்.

பிறகு தமது இருபத்தைந்தாவது வயதில் சென்னைக்கு வந்துவிட்டார். இப்படியாக அவர் சென்னைக்கு வந்து சுமார் நாற்பத்தைந்து வருஷங்களுக்கு மேலாகியும் 'பங்களூர் நாகரத்தினம்' என்ற பெயர் சிறிதும் மாறாமல் இருந்து வருகிறது.

சென்னைக்கு வந்ததிலிருந்து சங்கீதம், சாஹித்யம், காவிய நாடக சாஸ்திரங்களில் விசேஷமான கவனத்தைச் செலுத்தி நாகரத்தினம் எல்லோராலும் போற்றப்பட்டு வந்தார்.

சங்கீதம், சமயம், கலாசாரம் சம்பந்தமாய் நடக்கும் பொதுக் கூட்டங்களில் அடிக்கடி அழைக்கப்பட்டு அங்கு அநேக பிரசங்கங்களைச் செய்து பண்டித பாமரர்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். மூன்று பாஷைகளில் தமக்குள்ள விசேஷ பாண்டித்தியத்தினாலும், இனிமையான சாரீர சம்பத்தினாலும், சம்பிரதாய சங்கீதத்தை நன்கறிந்து மனமுருகிப் பாடும் திறமையினாலும் கேட்போர்களின் உள்ளங்களைக் கவரும்படி கச்சேரி செய்து எல்லா வித்துவான்களின் பெருமதிப்பையும் வெகு சுலபமாய்ப் பெற்றார். மகா வித்வான்கள் பலர் நிறைந்த சபையில் நாகரத்தினம்மாளுக்கு "வித்தியா சுந்தரி" என்ற பட்டம் அளித்துக் கௌரவித்தனர்.

சென்னைக்கு வந்த பிறகுதான் இந்த அம்மாளுக்கு ஏராளமான பொருளைச் சம்பாதிக்கும் வசதி கிடைத்தது. இதுவரை அவர் சுமார் மூன்று லக்ஷ ரூபாய் வரையில் சம்பாதித்தார் என்றாலும் தம் வாழ்க்கைக்கு அவசியமான தொகையையும் சொத்துக்களையும் மட்டும் வைத்துக் கொண்டு பாக்கியை அவ்வப்போது அநேக தர்ம கைங்கரியங்களுக்கு அள்ளிக் கொடுத்தார். சென்னை தாத்தா முத்தையப்பன் தெருவில் உள்ள ஸ்ரீ சீதாராம பிரஸன்ன ஆஞ்சனேய ஸ்வாமிக்கு வருஷந்தோறும் உத்ஸவம் நடந்துவர ஸ்திரமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். மைசூரில் வைரமுடி சேவை உற்சவத்தன்று, ஸ்வாமியை மேல்கோட்டில் நாகரத்தினம்மாள் கட்டியிருக்கும் மண்டபத்தில் தங்கியிருக்கச் செய்து அன்று மஹோத்ஸவமாய்க் கொண்டாடி வருகிறார்கள். திருவொற்றியூரில் உள்ள ஒரு கடைத் தெருவை வாங்கி, அந்த வாடகை வருமானத்தைக் கொண்டு நந்திகேசுவர ஸ்வாமி கோவிலின் தீப கைங்கர்யத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் உள்ள நடராஜர் கோவிலுக்கும் கரக்காப் பரதேசியின் ஆச்ரமத்திற்கும் ஏராளமான பொருளுதவி செய்திருக்கிறார்.

ஆரம்பத்தில் வித்தியார்த்தியாகவும், பிறகு 'விதுஷி' 'பண்டிதை' என்றும், பிறகு பெயரும் புகழும் பெற்ற 'தனிகை' என்றும் அதன் பிறகு 'தர்மவதி' 'தானசீலை' என்றும் உலகத்தாரால் மதிக்கப்பட்டு, ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் கீர்த்தனங்களைச் சுத்தமான மனதுடன் ஸ்வரஸ்ய சுத்தமாகப் பாடி, ஸ்ரீ ராம நாமத்தின் மகிமையை ஆங்காங்கு பிரகடனஞ் செய்து பக்த கோடிகளை மகிழ்வித்து வந்தார்.

(அடுத்த இதழில் முடியும்)


1½ அணா
நோய், ஜலதோஷம்
ஆகியவற்றை
குணமாக்குகிறது
பிரதி தினமும் தொல்லை கொடுக்கும் ஜுரம், குளிர், நோய், நொடி ஆகியவற்றிலிருந்து எல்லோருக்கும் விடுதலை. கோடிக் கணக்கான மக்களுக்கு 'ஆஸ்ப்ரோ' என்பதின் அர்த்தம் இதுதான்— 'ஆஸ்ப்ரோ' உங்களுக்கும் உதவட்டும். அது உங்களுக்கு ஆரோக்கியம் அளிக்கட்டும். அது உங்களைப் பாதுகாக்கட்டும். உங்களுக்கு அருகாமையிலுள்ள மருந்து வியாபாரியிடம் நீங்கள் 'ஆஸ்ப்ரோ'வைப் பெறலாம். 8 மாத்திரைகள் 1½ அணாதான் அல்லது 30 மாத்திரைகள் கொண்ட பெரிய பாக்கெட் அணா 15. தலைவலி, நரம்பு வலி, ஜலதோஷம் ஏதாவது வந்தால் இரண்டு 'ஆஸ்ப்ரோ' மாத்திரைகள் சாப்பிடுங்கள். சிறிது நேரத்திற்குள் வலி குறைந்து போகும்; ஜலதோஷம் மறையும்; நீங்கள் மறுபடியும் சுகமாக இருப்பீர்கள். நீங்கள் கஷ்டப்பட வேண்டியதேயில்லை ஏனெனில் 'ஆஸ்ப்ரோ' உங்களை கைவிடாது.
'ஆஸ்ப்ரோ'
உங்களை கைவிடாது
'ஆஸ்ப்ரோ' அபாயமற்றது. குழந்தை கூட சாப்பிடலாம்.
கீழ்க்கண்ட நோய்களுக்கு உபயோகிக்கவும்— தலைவலி, ஜலதோஷம், நரம்பு நோய், தொண்டைப்புண், வாதநோய், பல்வலி, தூக்கமின்மை, சூரிய வெப்பத்தால் ஏற்படும் கோளாறுகள்
குடும்ப சைஸ்
30 மாத்திரை அணா 15
ASPRO
ஒவ்வொரு 'ஆஸ்ப்ரோ' மாத்திரையும் சுகாதார முறையில் காற்றுப் புகவிடாமல் அடைத்து சீல் வைக்கப்பட்டுள்ளது. இதனால் அது எப்போதும் சுத்தமாகவும் புத்தம் புதிதாகவும் வைக்கப்பட்டுள்ளது
விரைவில் குணம் • அபாயமின்மை • பலனளிக்கும் தன்மை.

# அன்னை

எஸ். சங்கரன்

"சித்தி அகத்திலிருந்து சற்று முன்பு தான் வேலைக்காரி வந்துவிட்டுப்போனான்" என்று நீண்ட ஒரு பிரசங்கத்துக்கு ஆயத்தம் செய்பவளைப் போல் ஆரம்பித்தாள் மங்களம்.

அப்போது தான் களைத்துச் சோர்ந்து காரியாலயத்திலிருந்து திரும்பி வந்த ராமகிருஷ்ணன் கோட்டைக் கழற்றியவாறே அசுவாரஸ்யமாக "உம்" என்றான்.

"சித்திக்கு உடம்பு மிகவும் கடுமையாக இருக்கிறதாம்."

"உம்."

"இன்றையப் பொழுது தாண்டுவதே கஷ்டமென்று டாக்டர் சொல்லி விட்டாராம்."

"உம்."

"உங்களைக் கட்டாயம் உடனே வரச் சொன்னார்களாம்."

"உம்."

"ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டுமாம்!"

"உம்."

தான் சொல்லிக் கொண்டே போக ராமகிருஷ்ணன் குழந்தை கதை கேட்பது போல் 'உம்' போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு மங்களத்துக்கே எரிச்சல் வந்து விட்டது.

"நான் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன். பெருமாள் மாடு மாதிரி தலையை ஆட்டிக்கொண்டேயிருக்கிறீர்களே! சொல்வது ஏதாவது காதில் விழுகிறதா?" என்று கொஞ்சம் கோபமாகவே கேட்டாள்.

"நீதான் எட்டு ஊருக்குக் கேட்கும்படியாகக் கத்துகிறாயே! காதில் விழாமல் இருக்குமா?" என்றான் ராமகிருஷ்ணன். அவன் குரலில் எவ்வித உணர்ச்சியும் தொனிக்கவில்லை.

வேறு சமயமாக இருந்திருந்தால் ராமகிருஷ்ணன் சொன்னதைக் கேட்டு அவள் கண்ணைக் கசக்கிக் கொண்டு கண்ணீர் விட ஆரம்பித்திருப்பாள். அதற்கு அப்போது சந்தர்ப்பம் சரியாக இல்லாததால் கூடப் பிறந்த குணத்தைக் கூடத் தன்னை மீறி எழுந்து விடாமல் எப்படியோ கட்டுப் படுத்திக் கொண்டாள்.

ராமகிருஷ்ணன் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். "என்ன செய்யப் போகிறீர்கள்?" என்ற மங்களத்தின் கேள்வி இடி வந்து தாக்கியது போல் அவனுக்கு உணர்வு வரச் செய்தது.

"ஒன்றும் செய்யப் போவதில்லை" என்றான் விரக்தியுடன் ராமகிருஷ்ணன்.

"போகாமலிருந்தால் நன்றாக இருக்குமா?" என்றாள்.

"தலையா முழுகிவிடும்?"

"என்ன தான் இருந்தாலும் பதினைந்து வருஷங்கள் வளர்த்தவளல்லவா? அவள் உங்களுடைய தாயார் போலத் தானே?"

"தாயாராம், தாயார்! அவள் செய்த வஞ்சகத்துக்கு..." என்று 'நற நற' வென்று பல்லைக் கடித்தான் ராமகிருஷ்ணன்.

"ஏற்கெனவே பெண்டாட்டி வந்து தாய்க்கும் பிள்ளைக்கும் ஆகாமல் செய்து விட்டாள் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது வேறு நீங்கள் போகாவிட்டால்..." அவள் தான் சொல்ல வந்ததை முடிக்கவில்லை—முடியவில்லை. அதற்குள் அவள் குரல் கமதமத்தது. வார்த்தை நெஞ்சுடன் நின்றுவிட்டது. என்ன முயன்றும் கட்டுப்படுத்த முடியாமல் அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

அவள் சொன்ன அத்தனையும் கேட்டுக் கொண்டு அசையாமல் உட்கார்ந்திருந்தான், ராமகிருஷ்ணன். 'பதினைந்து வருஷ காலம் தன்னை வளர்த்து, ஆளாக்கி விட்டதற்காகவாவது போகவேண்டாமா?' என்ற எண்ணம் அவனுக்கும் ஏற்படத் தான் செய்தது. தீர்மானமான ஒரு முடிவுக்கும் வர முடியாமல் குழம்பியிருந்தது அவன் மனம்,

"நீங்கள் போகத் தான் வேண்டும். உடனே கிளம்புங்கள்" என்று குழந்தையை விரட்டுவது போல் அவள் சொன்னாள்.

எதுவும் பேசாமல் காப்பியைக் குடித்து விட்டு ராமகிருஷ்ணன் கிளம்பினான். வாசற் கதவைத் தாண்டி விட்டவன் எதையோ நினைத்துக் கொண்டு திரும்பி "அவசியமானால் உனக்குச் சொல்லியனுப்புகிறேன். நீயும் வந்து சேர்" என்று சொல்லிவிட்டுப் போனான். பலவிதமான நினைவுகள் அவன் மனதில் அலைமோதிக் கொண்டிருந்தன. யந்திரம் போல் அவன் சென்று கொண்டிருந்தான்.

## 2

எட்டு வயதிலேயே பெற்ற தாயைப் பறிகொடுத்து விட்டு நின்ற போதே 'சித்தி' என்றால் இரக்கமற்ற ராக்ஷஸியாக இருப்பாள் என்ற எண்ணம் ராம

கிருஷ்ணனுடைய இளம் உள்ளத்தில் படிந்து விட்டது. பெற்ற பிள்ளையை ஆண்டவன் புண்ணியத்தில் வளரவிட்டு, பத்து வருஷ இல்லற வாழ்வுடன் திருப்தியடைந்து, வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போய்விட்டாள் அவன் தாய். வளரும் குழந்தைக்கு ஆதரவு வேண்டுமேயென்பதற்காகவும் தனக்குச் சமைத்துப் போடவும் அவனுடைய தந்தை சாமிநாதய்யர் மறுவருஷமே இரண்டாந்தாரமாக ஜானகியைக் கல்யாணம் செய்து கொண்டார்.

பரம்பரையாக வசதியுள்ள குடும்பம். ஒருவனிடம் கைகட்டி வேலை பார்ப்பதா என்ற 'அசட்டுக் கௌரவம்' அவருக்கு. முன்னோர்கள் அரும்பாடு பட்டுச் சேர்த்து வைத்துப் போனவற்றை லட்சியமில்லாமல் செலவு செய்து சுகவாசியாகக் காலந் தள்ளி வந்தார் சாமிநாதய்யர். பண்ணை வைத்து நடத்துவதிலும் 'கிஸான் தகராறு' போன்ற பல தொல்லைகளிருந்ததால் நமக்கெதற்கு வம்பு என்று நிலத்தையெல்லாம் விற்று ரொக்கமாகத் தம்மிடமே வைத்துக் கொண்டார். பாங்கில் போடக் கூட அவருக்கு அவநம்பிக்கை! தம் வாழ்நாளில் ஒரு உத்தியோகத்தையும் அவர் பார்க்கவில்லை.

சித்தி வீட்டுக்கு வருவதற்கு முன்பு ஒரு வருஷ காலம் அடுத்த வீட்டுப் பாட்டியின் ஆதரவிலேயே வளர்ந்தான் ராமகிருஷ்ணன். அவள் சாமிநாதய்யருக்குச் சுற்றி வளைத்து ஏதோ உறவுங்கூட. குழந்தையை ஆதரவோடு வளர்த்ததுடன் அவனுடைய இளம் உள்ளத்தில் என்றும் அழியாத வகையில் சில போதனைகளையும் அவள் ஏற்றிவிட்டாள்.

"அவன் அப்பனுக்கென்ன? நாளைக்கே இன்னொருத்தியைக் கட்டியிழுத்துக் கொண்டு வந்துவிடுவான் ...... அப்புறம் இந்தக் குழந்தை எப்படி வளரப் போகிறதோ!" என்று இவ்விதமாக வருவோர் போவோரிடமெல்லாம் குழந்தையை வைத்துக்கொண்டே ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பாள் பாட்டி.

இவ்வார்த்தைகளின் முழுத் தன்மையை உணர்ந்து கொள்ள அக்குழந்தையுள்ளத்தினால் முடியாதிருந்த போதிலும் 'சித்தி என்றால் அவள் இரக்கமற்ற ராட்சஸியாக இருப்பாள்' என்ற எண்ணம் அசைக்க முடியாத விதத்தில் அவன் உள்ளத்தில் உறுதிப் பட்டுவிட்டது.

ஒரு நாள் சித்தியும் வந்து விட்டாள். அவன் மனதில் உருவகப்படுத்தி வைத்துக் கொண்ட சித்திக்கும் நிஜமாக அவன் வாழ்க்கையில் புகுந்த சித்திக்கும் எவ்வளவு வித்தியாசம்! தான் சிறுவர் கதைப் புத்தகங்களில் படித்திருந்த பூதத்தைப் போல் கோரமாக அவள் இருப்பாள் என்று அவன் பிஞ்சு உள்ளம் கற்பனை செய்திருந்தது. ஆனால் அதே கதையில் வரும் 'தேவதை'யைப் போலல்லவா இந்தச் சித்தி இருக்கிறாள்! பூதங்களுக்கு விரும்பியபடியெல்லாம் உருவத்தை மாற்றிக் கொள்ளும் சக்தியுண்டு என்றும் ஒரு கதையில் அவன் படித்திருந்தான். அதனால் சித்தியின் தோற்றத்தைக் கண்டு ஏமாந்து விடவில்லை.

* * *

குழந்தையின் அன்பைக் கவர ஜானகி செய்த முயற்சிகளெல்லாம் வியர்த்தமாயின. தான் பெற்றிருந்தால் கூட இவ்வளவு அன்புடன் வளர்த்திருப்பாளோ என்னவோ, கோபமாக அவள் ஒரு வார்த்தை கூடச் சொன்னதில்லை. எல்லை மீறி ராமகிருஷ்ணன் தன் பொறுமையைச் சோதித்த சமயத்திலுங் கூட, அவள் அடங்கிப் போனாளேயன்றி, தன் உணர்ச்சிகளைப் பொருட்படுத்தியதில்லை.

ராமகிருஷ்ணனிடம் பிடிவாதமும் முரட்டுக் குணமும் தான் படிந்தன. எதையாவது நினைத்துக் கொண்டு அவன் சாப்பிட முரண்டு செய்யும் போதெல்லாம், ஜானகியைப் பார்த்து "நீதான் ஏதாவது சொல்லியிருப்பாய்" என்று தாறுமாறாகப் பேசுவார் சாமிநாதய்யர். ஒவ்வொரு சமயம் அதற்காக அவர் அவளை அடித்துவிடுவதும் உண்டு. பொறுமையின் உருவாக ஜானகி எல்லாவற்றையும் சகித்து வந்தாள். அவளும் நல்ல குடும்பத்தில் பிறந்து தன் அப்பாவுக்கு ஒரே பெண்ணாக மிகவும் செல்வமாக வளர்ந்தவள்தான். ஜாதகத்தில் ஏதோ தோஷம் என்றுதான் இரண்டாந்தாரமாகக் கொடுத்தார்கள்.





இப்படியே எட்டு வருஷங்கள் கழிந்து விட்டன. ராமகிருஷ்ணன் ஹைஸ்கூல் படிப்பை முடித்துவிட்டு காலேஜில் சேர்ந்திருந்தான். தானாக சிந்தித்து முடிவு செய்யும் அளவுக்கு அறிவு முதிர்ச்சியடைந்த பருவம்தான். ஆனால் எட்டு வயதிலேயே தன் இளம் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து விட்ட எண்ணம் குறையவோ மறையவோ இல்லை.

ராமகிருஷ்ணனுடைய தந்தை திடீரென்று ஒரு நாள் கண்ணை மூடிவிட்டார். கணவனுடைய காரியமெல்லாம் முடிந்ததும் கிராமத்தில் விவகாரத்தையெல்லாம் ஒரு வழியாகத் தீர்த்துக் கொண்டு காலேஜில் படிக்கும் பிள்ளைக்கு சமைத்துப் போடுவதற்காகச் சென்னை வந்து சேர்ந்தாள் ஜானகி. தம்முடன் மதுரையில் வந்து இருக்குமாறு தன் தந்தை கேட்டுக் கொண்டதற்கு அவள் இணங்கவில்லை.

மாம்பலத்தில் சிறு வீடு ஒன்றை அமர்த்திக்கொண்டு அவர்கள் வசித்து வந்தார்கள். முன்பின் அறியாத அன்னியர்களைப்போல் அவர்களிடையே உறவு இருந்தது. தன் வயிற்றில் பிறக்காவிட்டாலும் அவனுக்கு 'அன்னை'யின் ஸ்தானத்தில் அவள் இருக்க விரும்பினாள். தனது சௌகரியங்களைக் கவனித்துக் கொள்ள இருக்கும் ஒரு வேலைக்காரியின் ஸ்தானத்தைக்கூட அவளுக்கு அளிக்க அவன் தயாராக இல்லை.

சுதந்திர மனிதனாகி விட்டான் என்றதும், அதுவும் கொஞ்சம் 'பசை'யுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதையறிந்ததும் புதிதாக யார் யாரோ தாமே வலியவந்து உறவுகொண்டாட ஆரம்பித்தனர். அவர்களெல்லாம் சேர்ந்துபோட்ட தூபம் அவன் உள்ளத்தில் பெரிய எரிமலையையே குமுறச் செய்து விட்டது.

"சித்தி சொன்னாள் என்று நம்பி ஏமாந்து விடாதே! உன் அப்பா உனக்கென்று ஏதாவது வைத்துப் போகாமலிருக்கமாட்டார் ...... பிறந்த வீட்டில் கொண்டு சேர்த்து விட்டாளோ என்னவோ?" என்று பலவிதமாகப் பலரும் சொன்னதைக் கேட்டு அவன் நம்பியே விட்டான்.

ஜானகியை இது சம்பந்தமாகக் கேட்ட போதெல்லாம் அவள் எதுவுமே சொல்லவில்லை. அதனால் ஆத்திரமடைந்து தாறுமாறாக அவன் கத்தியதை யெல்லாம் பொறுமையுடன் அவள் சகித்துக் கொண்டாள்.

கோர்ட்டிலே வழக்குத் தொடருமாறு சிலர் யோசனை சொன்னார்கள். ஆனால் அந்த அளவுக்கு அவன் நெஞ்சம் துணியவில்லை. பதினைந்து வருஷங்கள் வளர்த்தவளல்லவா? ஏமாற்றி யடைந்த சொத்தை அவளே அனுபவித்து விட்டுப் போகட்டுமே என்று பேசாமலிருந்து விட்டான்.

படிப்பை முடித்துவிட்டுத் தானே ஒரு பெண்ணைத்தேடி கல்யாணமும் செய்து கொண்டான் ராமகிருஷ்ணன். ஒரு கம்பெனியில் அவனுக்கு 'உதவி மானேஜர்' வேலை கிடைத்தது. கௌரவமாக வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமானதாக இருந்தது வருமானம். கல்யாணத்துக்குப் பின் ஒருமாதம் கூட அவன் சித்தியுடன் தங்கவில்லை. திருவல்லிக்கேணியில் தனி வீடு பார்த்துக்கொண்டு போய்விட்டான்.

உள்ளேயிருந்த புகைச்சலை அறியாதவர்கள் பெண்டாட்டி வந்து தாய்க்கும் பிள்ளைக்கும் ஆகாமல் செய்துவிட்டாள் என்று வியாக்யானம் செய்தனர். இது எப்படி யெல்லாம் உருவெடுக்கும் என்பதற்குத்தான் வரையறையே இல்லையே!

ராமகிருஷ்ணன் தனியே வந்து நான்கு வருஷங்களாகி விட்டன. இதற்கிடையில் ஒரு முறைகூட அவன் சித்தி வீட்டுக்குப் போனவனல்ல. தான் அலட்சியப்படுத்தப் படுவதையும் பொருட்படுத்தாமல் மாதமொரு முறை ஜானகி மட்டும் அவனை வந்து பார்த்துவிட்டுப் போவாள். சென்ற ஆறுமாத காலமாக ஜானகி படுத்த படுக்கையாகி விட்டதால் அதுவும் இல்லாமல் போய்விட்டது.

## 3

ராமகிருஷ்ணன் 'வருவான், வருவான்' என்று வாயிற் புறத்தையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள் ஜானகி. ஒருவேளை வராமலே யிருந்து விடுவானோ? கடைசித் தடவையாக

அவனைப் பார்க்க முடியாமலே போய் விடுமோ? என்பதை நினைத்தபோது அவள் இதயம் தாங்க முடியாத வேதனை யடைந்தது. நிச்சயம் வருவான் என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டாள்.

ஜானகிக்கு உதவியாக ஊரிலிருந்து அவளுடைய தாயார் வந்திருந்தாள். என் னென்னவோ வைத்தியம் செய்தும் வியாதி தீரவில்லை. ஆறு டாக்டர்கள் மண்டையை உடைத்துக் கொண்டு அவள் உடலைச் சோதனைச் சாலையாக வைத்துக்கொண்டு தாங்கள் கற்றதையெல்லாம் பரிசோதித்துப் பார்த்தார்கள். கடைசியாக மிகப் பெரிய உண்மை ஒன்றைக் கண்டு பிடித்தார்கள். "வியாதி என்னவென்று பிடிபட வில்லை" என்பதுதான் அது!

"நான்பட்ட மனோ வியாதி என்று தோன்றுகிறது. எதற்கும் மனோதத்துவ நிபுணர்களைக் கலந்தாலோசிப்பது நல்லது" என்று யோசனையும் சொல்லி விட்டுப் போனார்கள். ஆனால் ஜானகி வேண்டாமென்று சொல்லி விட்டாள். அவளுக்குத் தெரியாதா தன் வியாதி தீராத வியாதி என்று!

அடிமேலடிவைத்துப் புது இடத்தில் நுழைவதுபோல் ராமகிருஷ்ணன் தயங் கியவாறே வந்தான்.

ஜானகியின் சோர்ந்த முகம் மலர்ந்தது. உறங்கிக் கிடந்த உணர்ச்சி உடலெல்லாம் பொங்கிப் பரவியது.

"வா! குழந்தாய்" என்று வாத்ஸல் யத்துடன் அழைத்தாள். அவளுக்கு இன் னும் அவன் குழந்தையாகவே இருந்தான்.

விசையினால் இயங்கும் இயந்திரத்தைப் போல அவன் கட்டிலருகில் இருந்த நாற் காலியில் போய் உட்கார்ந்துகொண்டான். ஜானகி இருந்த நிலைமையைக் கண்டு கல் லாகி விட்டிருந்த அவன் மனம்கூடக் கலங்கியது. எதிரியின்முன் தன் பல வீனத்தைக் காட்டக்கூடாது என்று அடக்கிக் கொண்டான்.

எதுவும் பேசாமல் அவனையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானகி. 'பொல பொல'வென்று நீரை உகுத்துக்கொண்டிருந்தன அவள் கண்கள். அவள் பார்வை அவனை என்னவோ செய்தது.

"குழந்தாய்! என் நெஞ்சறிய உனக்கு ஒரு துரோகமும் செய்ததில்லை" என்று விம்மலுக்கிடையே அவள் சொன்னதைக் கேட்டு ராமகிருஷ்ணனுடைய உறுதி 'கல கல'க்க ஆரம்பித்தது. மங்கிய அவள் கண்களில் 'தாயன்பு' ததும்புவதை அவன் கண்டான். ஆனாலும் பேசாமலிருந்தான்.

தன் தலையணையடியிலிருந்து ஒரு காகித உறையை அவள் எடுத்தாள். "உன் அப்பா உனக்கு வைத்துவிட்டுப் போனது இதுதான்" என்று அதை அவனிடம் கொடுத்தாள்.

ராமகிருஷ்ணன் 'கவரை'ப் பிரித்துப் பார்த்தான். மொத்தமாக 12,000 ரூபாய்க்கு யார் யாருக்கோ தன் தந்தை எழுதிக் கொடுத்திருந்த 'பிராமிஸரி நோட்'டுகள் நான்கு இருந்தன. ஒன்றும் புரியாமல் அவன் விழித்தான்.

"நீ வருவதற்குள் என் உயிர் போய் விட்டால் என்ன செய்வதென்பதற்காக விவரமாக இக்கடிதத்தை எழுதிவைத் தேன்" என்று ஒரு கடிதத்தை அவனிடம் கொடுத்தாள்.

"குழந்தாய்!

உன் அப்பா உனக்கு வைத்துவிட்டுப் போன சொத்தை எனதாக்கிக் கொண் டேன் என்று பிறர் சொன்னதைக் கொண்டு நம்பியிருக்கிறாய். உன் அப்பா வைத்துவிட்டுப் போனது ரூ. 12,000 கடன்தான். இருந்ததையெல்லாம் தன் காலத்திலேயே செலவழித்து விட்டார். வளர வேண்டிய பருவத்தில் உன் இளம் உள்ளத்தில் இந்த அதிர்ச்சி படக்கூடாதே யென்பதற்காகத்தான் உன்னிடம் இது வரை சொல்லாமலிருந்தேன்.

கடன் கொடுத்தவர்கள் என் நிலைமைக்கு இரங்கிப் 'பெரிய மனது' வைத்து இவ்



"என்ன ஐயா! தலையைத் தடவிக் கொண்டு தவிக்கிறீர்?"

"உயரத்திலிருந்து பல்லி என் தலையில் விழுந்தது. பல்லி தலையில் விழுந்தால் மரணம் என்று பஞ்சாங் கத்தில் போட்டிருக்கிறது...!"

"அது உமக்கு இல்லை. ஐயா! பல்லிக்குத்தான். பல்லி உயிரோடு இருக்கிறதா, பாருங்கள்!"

வளவு வருஷங்களாக வற்புறுத்தாம லிருந்ததுடன், உன் காதுக்கும் அது எட்டாமல் பார்த்துக் கொண்டார்கள். கடனைத் தீர்க்கும் வரை உனக்கு அது தெரியக் கூடாதென்றிருந்தேன். இப்பொழுதுதான் அது சாத்தியமாயிற்று.

என்னுடைய தந்தை சென்ற வருஷம் காலமானபின் எனக்கு விட்டுச் சென்ற 30,000 ரூபாயும் சட்ட சிக்கல்களையெல்லாம் கடந்து பத்து தினங்களுக்கு முன்புதான் என் கைக்குக் கிடைத்தது. உடனே முதல் காரியமாகக் கொடுக்க வேண்டிய கடனைத் தீர்த்துவிட்டு உன் அப்பா எழுதிக் கொடுத்திருந்த 'புரோ நோட்'டுகளை வாங்கி வந்தேன்.

உன்னை எவ்விதத்திலும் நான் வஞ்சிக்கவில்லை. தாயின் ஸ்தானத்தை நீ எனக்கு அளிக்க மறுத்தாலும் நீ எனக்குப் பிள்ளைதான்.

ஜானகி''

கனவுலகில் இருப்பவனைப்போல் கடிதத்தைப் படித்தான் ராமகிருஷ்ணன். புத்தகளம்போல் அவன் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. அவனால் பேச முடியவில்லை. அவள் முகத்தைப் பார்த்தான்.

இப்போது அவள் அழுது கொண்டிருக்கவில்லை. அசாதாரணமான பிரகாசம் முகத்தில் காணப்பட்டது. ''நான் உனக்கு விட்டுச் செல்லும் ஆஸ்தி இதுதான்'' என்று 'பாங்க் புத்தகம்' ஒன்றை அவனிடம் கொடுத்தாள். நடுங்கும் கைகளுடன் அதைப் பிரித்துப் பார்த்தான் ராமகிருஷ்ணன். அவன் பேரில் 10,000 ரூ. பாங்கில் கட்டப்பட்டிருந்தது.


சித்தியின் பெருந்தன்மையையும் தியாக புத்தியையும் தான் அவளுக்கிழைத்த கொடுமைகளையும் நினைத்து அவன் நெஞ்சமே வெடித்து விடும் போலிருந்தது. அச்சமயம் அழுவதைத் தவிர வேறெதுவும் அவனுக்குத் தோன்றவில்லை. என்னென்னவோ பேச விரும்பினான். சித்தியின் காலடியில் விழுந்து தன் குற்றங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி மன்னிப்புக் கேட்கக் கதற வேண்டும் போலிருந்தது அவனுக்கு. வார்த்தைகள் நெஞ்சுடன் நின்றுவிட்டன.

"இந்த வீட்டையும் உன் பேரில் வாங்கி விட்டேன் இனிமேல் இங்கேயே வந்து இருக்கலாம்'' என்றாள் ஜானகி.

பலவந்தமாகத் தன்னிடமிருந்து பிரித்து இழுத்துச் செல்லப்படும் தாய்ப் பசுவைப் பார்த்து அலறும் கன்றைப் போல் "அம்மா'' என்றலறினான் ராமகிருஷ்ணன். அவன் உள்ளத்தில் குமுறிய உணர்ச்சிகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அந்த ஒரே வார்த்தையில் வெளிப்பட்டன.

இதற்கு முன்பு சில சமயங்களில் ஜானகியை அவன் 'சித்தி' என்றழைத்திருக்கிறான். ''அம்மா'' என்றழைத்தது அதுவே முதல் தடவை.

அதற்காகத்தானே ஏங்கியது அவள் மனமும். அந்த ஒரு வார்த்தையிலேயே எல்லையற்ற மகிழ்ச்சியைக் கண்டு விட்டவள் போல் அவள் கண்களை மூடினாள்.



''போ, அம்மா! அந்தப் பக்கம், நீயும் வந்து நின்று விட்டாயே? நாங்கள் வெல்லத்திற்காக 'க்யூ' நிற்கவில்லை. தேகப் பயிற்சிக்காக நிற்கிறோம்!''

''அதுதான் எப்பொழுது கொடுப்பார்கள்? கொஞ்சம் நின்று வாங்கிக் கொண்டு போய் விடுகிறேன்!''




## 3. அபாயம் நீங்கியது!

மயக்கம் தெளிந்து எழுந்த ராஜகுமாரனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நடந்ததெல்லாம் நினைவு வந்தது. 'ஓ' வென்று ஓலமிட்டுக் கொண்டு கரையை நோக்கி இடைவிடாமல் சுருண்டு வந்து கொண்டிருந்த சமுத்திர அலைகள் ராஜகுமாரனுக்கு அவன் இருக்கும் இடம் எதுவென்பதை அறிவித்தன.

"அரண்மனையின் அந்தப்புரத்தில் பஞ்சணை மெத்தையில் எவ்வளவோ ஆனந்தமாகத் தூங்கவேண்டிய நான் இங்கே எப்படி வந்தேன்? என் தகப்பனார் மகாராஜாவும் தாயார் மகாராணியும் எங்கே போனார்கள்? மந்திரி, சேனாதிபதி, போர் வீரர்கள், மற்றுமுள்ள பரிவாரங்கள் எல்லோரும் எங்கே போய் விட்டார்கள்? இந்தக் கடற்கரைப் பிரதேசமே எனக்குப் புதியதாகத் தோன்றுகின்றதே! இதற்கு முன் நான் எப்போதும் இங்கே வந்ததேயில்லையே! நாட்டை ஆளும் மகாராஜாவின் புத்திரனாகிய நான் இங்கே இந்தக் கடற்கரை மணலில் அநாதை மாதிரி கிடக்கிறேனே! இந்த இடத்துக்கு எப்போது வந்தேன்? எப்படி வந்தேன்? என்னோடு வேறு யாரும் வரவில்லையா? எல்லாம் ஒரே குழப்பமாயிருக்கிறதே!" என்று இப்படியெல்லாம் பலவிதமான கேள்விகளை ராஜகுமாரன் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். ஆனால் பதில் தான் தெரியவில்லை.

உடனே ராஜகுமாரனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. ஒரு வேளை அவன் காண்பது கனவோ! என்று தன்னைத்தானே கிள்ளிப் பார்த்துக்கொண்டான், ராஜகுமாரன். 'சுரீர்' என்று வலிக்கவே தான் தூங்கவில்லை என்பது அவனுக்குத் தெரிந்தது. ஆகவே அவன் கனவு காணவில்லை என்பதும் நிச்சயமாயிற்று.

சற்று நேரம் அப்படியே பிரமை பிடித்தவன் மாதிரி உட்கார்ந்து யோசித்தான். அவன் தன் ஊராகிய விஜயபுரத்தை விட்டு உல்லாசக் கடற் பிரயாணத்துக்காக நண்பர்களுடன் கப்பலேறிப் புறப்பட்டதும் பல நாட்கள் கடலில் பிரயாணம் செய்த பிறகு ஒரு நாள் மாலை நடுக் கடலில் கப்பல் பயங்கரமான புயல் காற்றில் சிக்கியதும் அவன் நினைவுக்கு வந்தன; அப்புறம் அந்தக் கப்பல் தூள் தூளாகச் சிதறியதும் ஒன்றன் பின் ஒன்றாக அவன் நினைவுக்கு வந்தது.



இன்னொரு விஷயமும் இப்பொழுது அவன் நினைவுக்கு வந்தது. "நான் கடலில் விழுந்து தத்தளித்தபோது எப்படித் தப்பினேன்?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான் ராஜகுமாரன்.

ஆமாம். 'இனி மேல் உயிர் பிழைக்க முடியாது. பிறந்த நாட்டை விட்டு விட்டு, தாய் தந்தையர்களை விட்டு விட்டு, கடலில் மூழ்கிச் சாகும்படி தலையில் எழுதியிருக்கிறதே!' என்று கண் கலங்கி, தாங்க முடியாத துக்கத்துடன் கடைசியாகக் கடலில் மூழ்கிப் போனபோது, தன்னை ஒரு பெண்மணி காப்பாற்றவில்லையா? அந்த அழகியின் முகம் அவன் நினைவில் அப்படியே பதிந்துவிட்டது.

நடுக்கடலில் ஒரு பெண்மணி எப்படித் தோன்றமுடியும்? இல்லை, ஒரு வேளை இதெல்லாம் கனவு தானோ? அதெப்படிக் கனவு என்று சொல்ல முடியும்? உடைகளெல்லாம் நனைந்து அவன் கடற்கரையில் கிடக்கும் கோலத்திலிருந்தே நடந்ததெல்லாம் உண்மை என்று தெரிகிறதே! அந்தப் பெண்மணி யார்? நீலக் கடலில் வாழும் பெண் தெய்வமோ!

ராஜகுமாரன் ஆவலோடு நாலா புறமும் பார்த்து அந்தப் பெண்ணை—அவனுக்கு உயிர் கொடுத்த அந்தப் பெண்ணை—தேடினான்.

கடல் அலைகளுக்கு மத்தியில் இருந்து கொண்டு, சுந்தரி, ராஜகுமாரன் விழித்து எழுந்ததையும் சுற்றும் முற்றும் பார்த்துப் பேந்தப் பேந்த விழித்ததையும், தனக்குத் தானே ஏதோ பிதற்றிக் கொண்டதையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"உடனே போய் ராஜகுமாரனுக்கு எதிரில் தோன்றி, நான்தான் உங்களைக் காப்பாற்றிய பெண்மணி! யாரை அப்படி விழுந்து விழுந்து தேடுகிறீர்கள்?" என்று கேட்கலாமா என்று ஒரு கணம் சுந்தரி நினைத்தாள். ஆனால் அடுத்த கணமே அந்த எண்ணம் மாறி அவள் கண்களில் நீர் பெருகியது.

அவள் ஒரு கடல் கன்னிகை அல்லவா? அவள் எப்படிச் சமுத்திரத்தை விட்டுவிட்டுக் கரைக்கு வர முடியும்? ராஜகுமாரனோடு எப்படிப் பேசமுடியும்? கடல் கன்னிகைகளால்தான் மனித பாஷையில் பேச முடியாதே!

இந்த எண்ணம் அவள் நினைவுக்கு வந்ததும், சுந்தரி ராஜகுமாரனை நெருங்கும் ஆசையைக் கைவிட்டு விட வேண்டியதாயிற்று. ராஜகுமாரனுக்குத் தன்னை யார் காப்பாற்றியது என்று தெரியாதிருப்பதே நல்லது. மனிதர்கள் கண்ணில் கடல் கன்னிகைகள் தென்பட்டால் அவர்களுக்குப் பிரமை பிடித்துவிடும் என்று அவளுடைய அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது. மேலும் ராஜகுமாரன் சுந்தரியைப் பார்த்து அவள்தான் தன்னைக் காப்பாற்றியவள் என்று தெரிந்து கொண்டால் அவளுக்கு அதனால் என்ன நன்மை ஏற்பட்டு விடும்? எப்படியோ, அபாயம் நீங்கிவிட்டது. அவன் பிழைத்து விட்டான். அவளுக்கோ அவனிடம் பேசமுடியாது. அவனோடு சேர்ந்து அவள் பூமியில் வாழமுடியாது. ஆகையால் அவன் கண்ணில் படாமல் நழுவி விடுவதே நல்லது என்று தோன்றியது அவளுக்கு. ஆனால் அதைக் காரியத்தில் நிறைவேற்ற இலேசில் முடியவில்லை. அவனை விட்டுப் பிரிவது என்பது அவளால் முடிகிற காரியமாயில்லை.

கடைசியில் வேறு வழியில்லாமல் கொஞ்ச தூரம் கடலில் மூழ்கிச் சென்று சுந்தரி தலை நிமிர்ந்து ராஜகுமாரனைப் பார்த்தாள். இன்னும் அவன் பிரமிப்போடு 'பேந்தப் பேந்த'

விழித்த படி சமுத்திர சுந்தரியின் நினைவாகவே கடற்கரை மணலில் உட்கார்ந்திருந்தான். மேலும் என்ன நடக்கிறது என்று பார்க்கச் சுந்தரிக்கு மிகவும் ஆவலாயிருந்தது. அங்கிருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

**தூ**ரத்தில் 'கலகல' வென்று சிரிப்பு ஒலியுடன் சில பெண்கள் வர்ணப் பட்டாடை அணிந்து கொண்டு வருவது தெரிந்தது. அவர்களைக் கண்ட சுந்தரி, கொஞ்சம் சமீபமாகக் கரையை நோக்கி வந்து கவனித்தாள். ராஜகுமாரனும் அந்தப் பெண்களைக் கவனித்துப் பார்த்தான். ஆகாயத்திலிருந்து வானவில் இறங்கி நகர்ந்து வருகிறதோ என்று அவனுக்குச் சந்தேகமாய்ப் போய்விட்டது. வரவர அந்தப் பெண்கள் சமீபத்துக்கு வரவே, ராஜகுமாரனுக்கு அவர்கள் பெண்கள் தான் என்பது நன்றாய்த் தெரிந்தது.

கைகோத்துக் கொண்டு, உல்லாசமாக ஆடிப்பாடிக் கொண்டு வந்த அந்தப் பெண்கள், ராஜகுமாரனைப் பார்த்ததும் அப்படியே சற்று நேரம் அசைவற்று நின்று விட்டார்கள். அவன் அழகு அப்படிப் பிரமிக்கத்தக்கதா யிருந்தது.

ராஜகுமாரன் மிகவும் ஆவலோடு அந்தப் பெண்களைப் பார்த்தான். தன்னைக் கடலில் ஆபத்திலிருந்து காப்பாற்றிய பெண்ணின் முகத்தைக் காணாமற் போகவே ராஜகுமாரனின் முகம் வாடிவிட்டது. அவன் பார்வையில், எதையோ, யாரையோ பறிகொடுத்து விட்டது போன்ற ஏக்கம் தென்பட்டது.

அந்தப் பெண்கள் 'களீர்' என்று சிரித்தனர்.

"ஐயா, தாங்கள் என்னத்தைத் தேடுகின்றீர்கள்?" என்று அந்தப் பெண்களில் ஒருத்தி கேட்டாள். அவள் தான் அந்த நகரத்து ராஜாவின் குமாரத்தி ரமா.

"பெண்ணே, நான் விஜயபுரத்து ராஜகுமாரன். கப்பலில் ஒரு சுற்றுப் பிரயாணம் என் நண்பர்களோடு கிளம்பினேன். வருகிற வழியில் நடுக்கடலில் ஒரு பயங்கரமான புயலில் சிக்குண்டு நான் ஏறி வந்த கப்பல் தூள் தூளாகச் சிதறிப்போய்விட்டது. நான் சமுத்திரத்தில் அகப்பட்டுக் கொண்டு, பேய் அலைகளுக்கு மத்தியில் உயிருக்கு யமனோடு போராடினேன். இன்னும் சில நிமிஷங்களில் உயிர் போய்விடும் என்ற நிலைமையில், பூரண சந்திரனைப் போல் ஒரு பெண் முகம் தெரிந்தது; அது என்னருகே வந்தது. அடுத்த விநாடி அவள் தன் தளிர்க் கரங்களால் என்னைத் தூக்கிக் காப்பாற்றினாள். அவளைத்தான் அப்பொழுது முதல் தேடுகிறேன்!" என்றான் ராஜகுமாரன். அவன் பார்வையில் ஏக்கம் குடிகொண்டிருந்தது.

மீண்டும் அந்தப் பெண்கள் 'களீர்' என்று சிரித்தார்கள்.

"ஐயா, நீங்கள் மணலில் படுத்துச் சரியான தூக்கம் போட்டிருக்கிறீர்கள் என்று தெரிகிறது. அத்துடன் அற்புதமான ஒரு கனவும் கண்டிருக்கிறீர்கள்!" என்று சொன்னாள் அந்த ராஜகுமாரி.



**கணவன் (மனைவியிடம்):—நான் நேரங்கழித்து வந்ததாகக் கோபித்துக் கொள்ளாதே! இன்றைக்குக் காரை விரைவாக ஓட்டிக்கொண்டு வந்ததற்காக என்னைப் போலீஸ்காரன் 'சார்ஜ்' பண்ணிவிட்டான். நாளைக்குக் கோர்ட்டுக்குப் போனால் ஐம்பது ரூபாய் அபராதமோ அல்லது இரண்டு வாரச் சிறை வாசமோ கிடைத்து விடும்.**

**மனைவி:—பேஷ்! நம் வீட்டிலிருந்த சமையல்கார அம்மாள் ஓடிவிட்டாள். நீங்கள் இரண்டு வாரம் சிறை வாசமே அநுபவிப்பதே நல்லது!**

"ராஜகுமாரன், "இல்லை, இல்லை! இதோ நான் வந்த கப்பலின் பலகை இருக்கிறது. நான் சொல்லுவது அவ்வளவும் உண்மை. சமுத்திர ஜலத்தில் நான் அகப்பட்டுக் கொண்டு மூச்சுத் திணறிய போது அந்த அழகி என்னைக் காப்பாற்றினாள். சந்திரனைப் போலிருந்தது அவள் முகம். விரிந்த கூந்தலுடன் அவள் மஹாலக்ஷ்மியைப் போலத் தோன்றினாள். ஆனால் எல்லாம் ஒரு சில விநாடிகள் தான். அப்புறம் நான் என் நினைவை இழந்து விட்டேன்..." என்று சொல்லிவிட்டு மீண்டும் ஆவலோடு சுற்று முற்றும் பார்த்தான்.

"ஐயா, ஆண் பிள்ளையாகிய உம்மாலேயே கடலிலிருந்து தப்ப முடியவில்லையென்றால் ஒரு பெண் நடுக் கடலில் வந்து எப்படி உம்மைக் காப்பாற்றியிருக்க முடியும்? நீங்கள் தயவு செய்து எங்கள் அரண்மனைக்கு வாருங்கள். அங்கே வந்து ஆகாரம் சாப்பிட்டு விட்டு இளைப்பாறினால் எல்லாம் சரியாகிவிடும். உங்களுக்கு உடம்பு சரியாயில்லை என்று தோன்றுகிறது. வாருங்கள், போகலாம்" என்று சொன்னாள் ரமா.

ராஜகுமாரனால் மறுத்து ஒன்றும் சொல்ல முடியவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, அவன் மட்டும் அறிந்த ஒரு உண்மையை அந்தப் பெண்களுக்குச் சொன்னால் அவர்கள் நம்ப மாட்டார்கள் என்பது. இரண்டு, அவனுக்கு இப்போது அதைப் பற்றிப் பேசச் சக்தியில்லை என்பது.

ராஜகுமாரன் மிகவும் சிரமப்பட்டு எழுந்து அந்தப் பெண்களைத் தொடர்ந்து மெதுவாக நடந்தான். இல்லை, அவன் கால்கள் தான் நடந்தன. அவன் மனசு மாத்திரம் நீலக்கடலிலேயே தங்கிவிட்டது. (தொடரும்)

# ரொட்டி, ரொட்டி!

அந்தத் தாடிக்காரக் கிழவன் "ரொட்டி ரொட்டி!" என்று கத்திக் கொண்டே தெருவோடு போனான். அன்றைக்கு என்னவோ ஒருவருமே ரொட்டி வாங்கவில்லை. வாடிக்கைக் காரர்களில் சிலர் ஊருக்குப் போயிருந்ததால் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ரொட்டிகளும் செலவாகவில்லை.

கிழவனுக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. "இன்றைக்கு யார் முகத்திலே விழித்தேனோ தெரியவில்லையே! ஒரு ரொட்டிகூட வியாபாரம் ஆகவில்லையே!" என்று கிழவன் முணுமுணுத்துக் கொண்டே போனான்.

சற்று நேரத்துக்கெல்லாம் அவனுக்கு ஒரு யோசனை உதித்தது. 'நாமாக வீடு தோறும் போய் ரொட்டி வேண்டுமா என்று கேட்டால் என்ன?' என்று நினைத்து அதைக் காரியத்தில் நிறைவேற்ற ஆரம்பித்தான்.

ஒவ்வொரு வீட்டிலும் அவன் படியேறி இறங்கியதுதான் மிச்சம். ரொட்டி விற்கவில்லை. கடைசியில் அவன் ஒரு வீட்டு மாடியில் மிகவும் சிரமப்பட்டு ஏறி "ரொட்டி வேண்டுமா, அம்மா?" என்றான் கிழவன்.



அந்த வீட்டு அம்மாள் வெளியே வந்து, "ரொட்டி வேண்டாம், போ!" என்று சொல்லி விட்டாள். கிழவன் சோர்ந்து போய் மாடிப்படியில் சிரமத்துடன் இறங்கிக் கீழே தெருவுக்கு வந்தான். மாடிப்படியேறி மேலே போயும் ஒரு ரொட்டி கூட விற்கவில்லையே என்ற வருத்தம் அவனுக்கு.

கிழவன் அந்த வீட்டைத் தாண்டினானோ இல்லையோ, அந்த வீட்டு மேல் மாடியிலிருந்து "ரொட்டி, ரொட்டி!" என்று ஒரு பெண்குரல் கூப்பிட்டது. கிழவன் திரும்பிப் பார்த்தான். அந்த அம்மாள்தான் கையைக்காட்டி அவனை அழைத்தாள். கிழவன் சந்தோஷத்தோடு மாடியேறிப் போனான்.

அவனைக் கண்ட அந்த அம்மாள் ஆறு வயதுப் பையனை அழைத்து வந்து "கண்ணா, இதோ, பார்த்தாயா, பூச்சாண்டி! அவனிடம் உன்னைப் பிடித்துக் கொடுத்துவிடுவேன்!" என்றாள். அழுது கொண்டிருந்த கண்ணன் அழுவதை நிறுத்திவிட்டு அம்மாளைக் கட்டிக் கொண்டான்.

கிழவன் கண்ணில் நீர் ததும்பியது. கீழே இறங்கிப் போய் விட்டான். — உமா

# அங்கப்பனின் வெற்றி

## கிட்டப்பா

அம்மாளு வாசற்படியில் உட்கார்ந்திருந்தாள். இரண்டு முழங்கைகளையும் முழங்கால்களில் ஊன்றி, இரண்டு உள்ளங் கைகளாலும் முகவாய்க் கட்டையைத் தாங்கியபடி உட்கார்ந்திருந்தாள். அவள் பார்வை ஒரே இடத்தில் சென்று லயித்திருந்தது. அவள் மனம் யோசனையில் ஆழ்ந்திருந்தது.

பக்கத்திலே இடது பக்கம் சுவர் ஓரமாக ஒரு கறுப்பு நாய், தரையில் குழி பறித்து, அந்தக் குழியில் படுத்திருந்தது. சற்றுத் தூரத்தில் எதிரேயிருந்த வாழை மரத்தருகில் குப்பை மேட்டில், ஒரு கோழி தன் குஞ்சுகளுடன் இரை பொறுக்கிக் கொண்டிருந்தது. அதன் அருகே ஒரு சேவல் கம்பீரமாக நிமிர்ந்து பார்ப்பதும், மறுபடியும் காலால் தரையைக் கொத்திக் கிளறிவிட்டு, 'கொக்கொக்' கென்று பெட்டைக் கோழியைக் கூவியழைத்து இரையளிப்பதுமா யிருந்தது. வலதுபுறம் ஒரு மூலைக் குச்சியில் கட்டப்பட்டிருந்த வெள்ளாடு படுத்தபடி அரைக் கண் மூடி அசை போட்டுக் கொண்டிருந்தது.

அம்மாளுவுக்கு இதன்மேல் எல்லாம் கவனம் செல்லவில்லை. அவளுடைய புருஷன் அங்கப்பன் இன்னும் வரவில்லை. "ஆண்டை வீட்டுக்குப் போய்விட்டு அரை நொடியில் வருகிறேன்!" என்று கூறிவிட்டுப் போனான். அவன் போய் எத்தனையோ நாழிகை யாகிவிட்டது. ஆயினும் இதுவரை அவனைக் காணவில்லை. அவனுக்காக அவள் அவசர அவசரமாக ஆக்கிய சோறு சில்லென்று ஆகிவிட்டது.

அன்று காலையிலிருந்தே அவள் மனம் என்னமோ போலிருந்தது. போதும் போதாததற்கு அங்கப்பனும் அன்று ரொம்ப சிடு சிடுவென்றிருந்தான். அதற்கு என்ன காரணமாயிருக்கும் என்று அவள் யோசிக்கக் கூட அவகாசமளிக்காமல், "இந்தா, அம்மாளு! இன்னிக்கு எசமான் வீட்டுக்கு நேரத்தோடே போவணும். சீக்கிரமா சோறாக்கிடு, துன்னுட்டுப் போயிடறேன்" என்று உத்தரவிட்டுவிட்டு வெளியே போனான் அங்கப்பன்.

வெளியே சென்ற அங்கப்பன் வெள்ளாட்டுக்கு வேண்டிய தழைகளைப் போட்டுவிட்டு, மாட்டுக்கு வைக்கோல் வாரிப் போட்டு, தண்ணீரும் தொட்டியில் ரொப்பிவிட்டு வீட்டுக்குள் வந்தான். அவன் உள்ளே நுழைந்ததுமே அம்மாளு "இன்னிக்கு எசமான் வீட்டிலே என்னவாம்!" என்றாள் சாதாரணமாக.

"என்னவானால் உனக்கென்ன! சீக்கிரமா சோறாக்கு, அவ்வளவுதான்!" என்றான்,

அம்மாளு பதிலே பேசவில்லை.

அதேசமயம் வெளியேயிருந்து "அங்கப்பா!" என்று ஒரு குரல் வந்தது.

"யாரு!" என்று கேட்டுக் கொண்டே வந்த அங்கப்பன் "வாங்கண்ணே" என்று வரவேற்று விட்டு, வாசலிலிருந்தபடியே "இந்தா, அம்மாளு! நான் எசமான் வீட்டுக்குப் போய் விட்டு அரை நொடியிலே வந்துடறேன்" என்று கூறிவிட்டு வந்தவனுடன் சேர்ந்து வெளியே போய்விட்டான்.

அவன் எதற்காகப் போனான், எப்போது வருவான் என்று பல தடவை தன் மனதுக்குள்ளேயே தர்க்கித்துக் கொண்ட அம்மாளு ஒன்றும் புரியாமல் உட்கார்ந்திருந்தாள். அவள் மனத்தில் என்னென்னவோ யோசனைகள் புதிது புதிதாக முளைவிட்டு கொண்டேயிருந்தன. கடைசியில் இப்படி யிருக்குமோ என்று தோன்றியவுடன் அவள் மனம் பக்கென்றது. தூக்கிவாரிப் போட்டவள் போல அவள் உடம்பு குலுங்கித் தணிந்தது.

மறுகணம் அவள் மனம் இரண்டு வருஷங்களுக்கு முன்பு நடந்த அந்தச் சம்பவத்தை ஞாபகப்படுத்தியது.

## 2

அம்மாளுவுக்கு அப்போது பதினாறு வயதிருக்கும். தாய், தந்தையற்ற அவள் தன் கிழ அத்தையுடன் வசித்து வந்தாள். அத்தை ஏழையானாலும், அம்மாளுவுக்கு ஒரு குறையும் தோன்றாத வண்ணம் காப்பாற்றி மனுஷியாக்கினாள். அம்மாளு பெரிய மனுஷியாகும் வரை, அத்தைக்கு உதவியாகக் கூடமாட வேலை செய்து, அத்தைக்கு அதிக சிரமம் ஏற்படாமல் நடந்து வந்தாள்.

எத்தனை நாள்தான் அத்தை தெம்பாயிருக்க முடியும்! ஒருநாள் மழையில் எங்கோ அலைந்துவிட்டு வந்த அத்தை ஜுரமென்று படுத்தாள். அவ்வளவுதான். அதன் பிறகு அவள் எழுந்து நடமாடவேயில்லை. படுத்த படுக்கையாகி விட்டாள். அன்று முதல் அம்மாளுவுக்குப் பொறுப்பு அதிகமாகியது. அவள் நாலு வீடுகளில் வேலை செய்து, அதில் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு அத்தையைக் காப்பாற்றிக் கொண்டு வந்தாள். திடீரென்று ஒரு நாள் அத்தை கண்ணை மூடிவிட்டாள். அது முதல் அம்மாளு தனியளாகிவிட்டாள்.

அந்தச் சமயம்தான், தமிழ் நாட்டில் சரியான மழையின்மையால் அரிசிப் பஞ்சம் தோன்றியது. அந்தப் பஞ்சத்தைத் தீர்க்க அரசாங்கம் எத்தனையோ முறைகளில் முயற்சி செய்துக் கொண்டது. அவைகளில், தண்ணீரில்லாத பஞ்சத்தைச் சமாளிக்கக் கிணறு வெட்டும் திட்டமும் ஒன்று.

அந்தத் திட்டப்படி கிராமம் கிராமமாக உத்தியோகஸ்தர்கள் சென்று கிணறு வெட்ட மான்யம் அளித்தார்கள். அம்மாளு இருந்த ஊரிலும் இரண்டொருவர் அந்த மான்யத்தைப் பெற்றுக் கிணறு வெட்டத் தொடங்கினார்கள். அதில் வேலை செய்ய ஆளெடுத்தபோது, அம்மாளுவும் அதில் கூலியாளாகப் போய்ச் சேர்ந்தாள்.

அவள் வேலை செய்த இடத்தில் அங்கப்பன் தான் மேஸ்திரி. அவன் அவ்வூர் பண்ணையார் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தான்.

அங்கப்பன் நல்ல அழகனல்ல என்றாலும், ஆஜானுபாகுவாய்ப் பார்ப்பதற்கு வாட்ட



சாட்டமாய் இருப்பான். யாரேனும் சரியாக வேலை செய்யா விட்டால் கூடக் கோபிக்க மாட்டான். இதமாகப் பேசி அவர்களிடம் வேலை வாங்குவதில் சமர்த்தன்.

அவன் அம்மாளு மற்றக் கூலிப்பெண்களைப் போலில்லாமல் அடக்கமாயிருப்பதைப் பார்த்ததும் அவளைப் பற்றி விசாரித்தான். பிறகு ஒரு நாள் அவளைத் தனியாய் அழைத்துப் பேசினான். ஒரு மாதம் கழித்து அங்கப்பனுக்கும் அம்மாளுவுக்கும் கல்யாணம் நடந்தது.

இது நடந்து இரண்டு மாதங்களாகி விட்டன. ஒரு நாள் மாலையில் இரண்டு போலீஸ்காரர்கள் அம்மாளுவின் வீட்டுக்கு வந்து அங்கப்பனைப் பற்றி விசாரித்து விட்டுச் சென்றார்கள். அன்று முழுதும் அம்மாளுவுக்கு இருப்பே கொள்ள வில்லை.

அங்கப்பனைப் பற்றிப் போலீசார் விசாரிக்கும்படியாய் என்ன நேர்ந்து விட்டது என்று அவளுக்குப் புரியவேயில்லை. அங்கப்பன் வந்ததும் கேட்க வேண்டுமென்று காத்திருந்தாள்.

ஆனால் அங்கப்பன் அன்றிரவு வரவேயில்லை. மறுநாள் காலையில் வாடிச் சோர்ந்த முகத்துடன் வந்தான். அவன் முகத்தைப் பார்த்ததுமே அம்மாளுவுக்குத் திகீரென்றது. 'அவருக்கு என்ன நேர்ந்து விட்டது! அவர் முகம் ஏன் இப்படிப் பேயடித்தவன் முகம் போலிருக்கிறது!' அவனைக் கேட்கவும் அவளுக்குத் தெம்பில்லை. இதெல்லாம் சில விநாடிகள் தான். அடுத்த விநாடி அவள் சமாளித்துக் கொண்டு விட்டாள். அவனிடம் ஒன்றும் பேசாமல் உள்ளே போய் ஒரு பாத்திரத்தில் ஜலம் கொண்டு வந்து கொடுத்து "சீக்கிரம் முகத்தைக் கழுவிக்கிட்டு வாங்க! கஞ்சி பொடுத்து வைக்கறேன்" என்று கூறி விட்டு மனசில் கலவரத்துடன் போனாள்.

அங்கப்பன் அம்மாளுவோடு ஒன்றும் பேசாமல் அவள் உத்தரவுப்படி நடந்தான்.

அங்கப்பன் கஞ்சி குடித்தான பிறகு, வெற்றிலைப் பாக்கைக் கொண்டு வந்து அவன் பக்கத்தில் வைத்த அம்மாளு, "நேத்து ரெண்டு போலீசானுங்க உங்களைத் தேடிக்கிட்டு வந்தாங்க" என்றாள் மெதுவாக.

அங்கப்பன் முதல் நாள் காலையில் சாப்பிட்ட அலுப்பினால் மிகவும் களைத்துப் போயிருந்தான். இப்போது கஞ்சி குடித்த பிறகு அவன் முகத்திலே பழைய தெம்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தோன்றலாயிற்று. அவன் வாயில் பாக்கை யெடுத்துப் போட்டுக் கொண்டே "ஏன், என்னத்துக்காம்?" என்று கேட்டான்.

---

அப்பாடா! இப்போதுதான் அம்மாளுவுக்கு உயிர் வந்தது போலிருந்தது. அவள் சொன்னாள்: "அதையெல்லாம் அவனுங்க சொல்லலே. உங்க பேரைச் சொல்லி, நீங்க இருக்கீங்களா! எங்கே வேலை செய்றீங்க! என்ன சம்பளம்! எத்தனை கொளந்தைங்க! நீங்க குடிப்பீங்களான்னு வேறே கேட்டானுங்க! நீ யாரு அவரு சம்சாரமா! அப்படியா இப்படியான்னு கேட்டாங்க, எனக்கோ கோபம் பழியா வந்திருச்சு......"

"அதற்கு நீ என்ன சொன்னே!" அங்கப்பன் இடைமறித்துக் கேட்டான்.

"என்ன சொல்றது. 'போங்கய்யா! போயிட்டு நாளைக்கு வாங்க. அவரு இருப்பாரு; அவரையே கேளுங்களேன்' என்றேன். அதுக்கு ஒருத்தன் சிரிச்சுக்கிட்டே 'அட, ஏம்பா! அவன் குடிக்கிறதும், மற்ற காரியங்களும் இந்தப் பொம்பளைக்கு எப்படியப்பா தெரியப் போகுது! வாப்பா, நாளைக்கு வந்து அந்த ஆளையே விசாரிக்கலாம்' னுட்டு போயிட்டானுங்க!" என்று ஒரே மூச்சில் படபடவென்று சொல்லி முடித்தாள் அம்மாளு.

அங்கப்பன் அவள் சொல்வதை யெல்லாம் கேட்டுக்கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தான். அவள் சொல்லச் சொல்ல அவன் கண்களில் ஆச்சரியம் தோன்றி, அவன் புருவங்கள் ஏறிக் கொண்டே போயின. அவள் முழுதும் சொல்லி முடித்ததும் அவன் இதழ்க் கடையில் ஒரு புன்சிரிப்புத் தோன்றியது.

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அம்மாளு, அவன் ஏதாவது பேசுவான் என்று எதிர்பார்த்தாள். அவன் பேசாமலிருந்ததைப் பார்த்து அவளால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. "என்னுங்க! அவனுங்க திடீர்னு வந்து என்னத்துக்கு விசாரிச்சானுங்க!" என்றாள் பதட்டத்துடன்.

"யாருக்குத் தெரியும்!" என்றான் சுவாரஸ்யமில்லாத குரலில், சற்று நேரம் பொறுத்துத் தனக்குத்தானே பேசிக் கொள்வதுபோல.

"நான் குடிக்கிறேனு! எனக்கு அம்மாளு தவிர ஒருத்தி வேறே!" என்று பலமாக சொல்லிச் சிரித்தான்.

அம்மாளுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவனைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். அவள் மனதில் எண்ண அலைகள் தெறித்துக் கொண்டிருந்தன. அங்கப்பன் ஏதோ விஷயத்தைத் தன்னிடம் சொல்லாமல் மறைக்கிறானோ என்றொரு சந்தேகமும் தோன்றியது. அன்று

வரை அம்மாளுவுக்குத் தெரியாத ரகசிய விஷயம் எதுவும் அங்கப்பனிடம் கிடையாது. இன்று மட்டும் அவன் மறைக்கும்படியாக என்ன ஏற்பட்டிருக்கும் என்ற சிந்தனையில் ஆழ்ந்தது அவள் மனம்.

இப்படிக் கொஞ்ச நேரம் மௌனமாகக் கழிந்தது. அங்கப்பன் எழுந்து அம்மாளுவிடம் ஒன்றும் சொல்லாமலே வெளியே சென்றான். அம்மாளுவும் அவனிடம் எதுவும் கேட்கவில்லை. அவன் குணம் அவளுக்குத் தெரியும். எதுவாயிருந்தாலும், இன்றில்லாவிட்டால் நாளை, அவன் தானே அவளிடம் சொல்லி விடுவான்: அவன் போவதையே அவள் கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றாள். பிறகு ஒரு பெருமூச்சுடன் வீட்டு வேலைகளைக் கவனிக்க உள்ளே சென்றாள்.

## 3

ஒரு வாரம் கழிந்து, ஒரு நாள் மாலையில் அம்மாளுவின் வீட்டுக்குச் சாமித்தேவன், அங்கப்பனிடம் கிணற்று வேலை செய்தவன், வந்தான். அவன் அடிக்கடி அங்கப்பன் வீட்டுக்கு வருவதுண்டு. ஆனால் கடந்த இரண்டு வாரங்களாக அவன் வரவில்லை. அதனால் அன்று மாலையில் அவனைப் பார்த்ததும் அம்மாளு ''என்ன தேவரே! இரண்டு வாரமா இந்தப் பக்கமே காணோம்'' என்று கேட்டாள் சகஜமான குரலில்.

சாமித்தேவன் பதில் சொல்லாமல் அவள் முகத்தைப் பார்த்தான். அவன் கண்களில் நீர் துளித்திருந்தது. அவன் முகம் என்னவோ போலிருந்தது. அதைப் பார்த்ததுமே அம்மாளு பதறிப் போய்விட்டாள். ''என்ன, தேவரே! என்ன சமாசாரம்! சீக்கிரம் சொல்லுங்க!'' என்றாள்.

அவனால் பேச முடியவில்லை. சிறிது நேரம் தலை குனிந்தபடி நின்றான். பிறகு நிதானமாலே ''அவரைத் தண்டிச் சுட்டாங்கம்மா! ரெண்டு மாசம் தண்டிச்சுட்டாங்க!'' என்றான் தொண்டையடைத்த குரலில்.

இதை அம்மாளு சரிவரக் கேட்டாளா என்பதைச் சொல்ல முடியாது. நின்ற இடத்திலேயே உட்கார்ந்து விட்டாள். அவள் முகத்தில் ஈயாடவில்லை. அவள் எவ்வளவு நேரம் அம்மாதிரி உட்கார்ந்திருந்தாள் என்பது அவளுக்கே தெரியாது. மறுபடியும் அவள் தன் சுய உணர்வு வந்தவுடன் பார்த்தபோது எதிரில் சாமித்தேவன் இல்லை. வீட்டை இருள்மூடியிருந்தது. தூரத்திலிருந்து ஒரு நாய் குரைக்கும் சத்தம் கேட்டது.

அவள் எழுந்திருக்கவில்லை. அவளால் எழுந்திருக்க முடியவில்லை. அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் கண்களிலிருந்து அருவிபோல நீர் பெருகி வழிந்து கொண்டிருந்தது. அதையவள் துடைக்கவுமில்லை. வாசலில் கட்டியிருந்த வெள்ளாடு 'மே' என்று கத்தியதுகூட அவள் காதில் படவில்லை. அவள் விடியும்வரை அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அவள் மனதில் கடந்த இரண்டு வார சம்பவங்களும் கோவையாகத் திரையிட்டன.

அன்று அங்கப்பன் வெளியே போனவன் மாலையில் தான் வீட்டுக்கு வந்தான். வந்ததும் அம்மாளுவிடம், ''அம்மாளு! யாராகிலும் தேடிக்கிட்டு வந்தாங்களா!'' என்று கேட்டான்.

''இல்லீங்களே!'' என்றாள் அம்மாளு.

அங்கப்பன் அங்கிருந்த கயிற்றுக் கட்டிலின் மேல் உட்கார்ந்து கொண்டு ''வெத்திலேயிருக்குதா!'' என்று கேட்டான். அம்மாளு உள்ளே போய் வெற்றிலை, பாக்கு எல்லாவற்றையும் கொண்டுவந்து அவனருகில் வைத்தாள். அவன் பாக்கையெடுத்து வாயில் போட்டுக்கொண்டு வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக் கொண்டே, ''நன்றி கெட்ட ஆளுங்க. எங்கிட்டவே தின்னுட்டு எனக்கே உலை வைக்கிறானுங்க!'' என்றான் தனுக்குத் தானே.

''யாரு! என்ன பண்ணினாங்க!'' என்று கேட்டாள் அம்மாளு.

''வேறே யாரு! எல்லாம் அந்த காமாட்சிப் பயதான். அவன் நம்ம கிணத்துக்கு மேற்காலே கிணறு வெட்டப் பணம் வாங்கினானில்லே. அவ்வளவையும் குடிக்கும் அதுக்கும் இதுக்கும் செலவழிச்சு தீத்துட்டான். அதனாலே கிணறு வெட்டறது நின்னுபோச்சு. ஆனால் அவன் உடனேயே 'அந்தப் பணம் கெணறு வெட்டப் போதல்லே. இன்னும் கொஞ்சம் பணம் வேணும்'னு சர்க்காருக்கு மனுப் போட்டான். ஏன் போதல்லேன்னு கேள்வி பிறந்திச்சு. உடனே அவன் என்னைக் காட்டி 'அவன் கூடத்தான் கிணறு வெட்டறான். அவனையே கேளுங்க'ன்னான்.

''நான் கிணறு வெட்ட ஆரம்பிச்ச எடத்திலே ஒரே பாறையா இருந்திச்சா! நான் உள்ளதைச் சொல்லி, அவங்களையும் கூட்டிக்கிட்டுப் போய்க் காட்டினேன். அவங்க நான் சொன்னதை நம்பி, மேலே கொஞ்சம் ரூவா கொடுக்க உத்தரவு போட்டுட்டாங்க.

''அவனுடைய கிணறையும் போய்ப் பாத்தாங்க, அது பாதிகூட வெட்டியாகவில்லே.



அதனாலே அவன் கிட்ட வெட்டினவரைக்கும் செலவழிஞ்ச பணத்துக்குக் கணக்குக் கேட்டாங்க. அவன் கணக்கு வச்சிருந்தாத்தானே கொடுப்பான்! மாட்டிக்கிட்டான்.

“உடனே மேல் விசாரணைக்கு ஆள் வந்திருக்க. அவன் என்ன பண்ணினான் தெரியுமா! எங்கேயோ கடனை உடனே வாங்கி, விசாரிக்க வந்தவங்களைச் சரிப்படுத்தி, அவனோடே போய்க் கணக்கைச் சரின்னு சொல்லச் சொல்லிட்டான். என்னைக் குடிகாரன், கள்ளன்னு சொல்லிக் கொடுத்து, நான் போய்க் கணக்குக் கொடுத்தேன்னு உருவேத்திப்புட்டான். அவ்வளவுதான். மறுபடியும் என்மேலே விசாரணை ஆரம்பிச்சிருச்சு” என்று கூறி நிறுத்தினான்.

அதற்குள் அம்மாளு இடைமறித்து, “அந்தப் பாவி பண்ணின அக்கிரமம் எல்லாம் நீங்க சொல்லிடறதுதானே!” என்றாள்.

“அதையெல்லாம் நான் ஏன் சொல்லணும்! தானே தெரிஞ்சுக்கிறாங்க. நான் தப்புக் கணக்கு வைக்கல்லேன்னு ருசுப்பண்ணிட்டாப் போதாதா என்ன! அந்த விசயமா யாரை வேணுமானாலும் விசாரிச்சுக்குங்க என்னுட்டேன். அவங்க அதுக்கு ஒத்துக்கிட்டாங்க. ஆனா, அந்த விசாரணை முடியற மட்டும் நான் காவல்லே இருக்கணும்னாங்க. ஆனா எசமான் சொன்னாரு ‘அங்கப்பனுக்கு நான் சாமீன் இருக்கேன். அவனைக் காவல்லே வைக்க வேணாம்’ என்று சொன்னாரு. அதுக்கப்பாலே தான் என்னை வீட்டுக்குப் போகச் சொன்னாங்க. அதனாலேதான் நேத்து ராத்திரி பூரா வீட்டுக்கே வரல்லே” என்றான்.

அம்மாளுவுக்கு மனதிலிருந்த வருத்தமெல்லாம், அவன் கூறியதைக் கேட்டதும் ஓரளவு நீங்கியது. ஆனால் அவனைக் காவலில் இருக்கச் சொன்னார்கள் என்பதை நினைத்தவுடன் அவள் முகத்தில் மறுபடியும் துயரம் தோன்றி விட்டது.

அங்கப்பன் நிமிர்ந்து பார்த்தான். அம்மாளுவின் கண்களில் தோன்றிய நீர்ப் பெருக்கத்தைக் கண்டதும் “என்ன நீ அசடாயிருக்கியே! என்னாத்துக்கு இப்போ அழுறே! நான் என்ன ஜெயிலுக்கா போயிட்டேன்! கண்ணைத் துடை” என்றான் அங்கப்பன்.

* * *

விசாரணை நடந்தது. பலபேர் விசாரிக்கப்பட்டார்கள். அவன்மீது அவதூறாகக் குற்றம் சாட்டியவன் காமாச்சி என்று ஏற்பட்டது.

அந்த சமயம் காமாச்சிக்கு ஒரு யோசனை தோன்றியது. சட்டென்று தன் கடன்காரர்களுக்கு அங்கப்பன் பணம் கொடுத்ததையும், அந்தப் பணம் ஏது என்றும் ஒரு கேள்வியைக் கிளப்பி விட்டான். அவனுக்குப் பணம் கொடுத்ததற்கும், இந்தக் கிணறு விஷயத்திற்கும் சம்பந்தமேயில்லை யென்று அங்கப்பன் எவ்வளவோ வாதாடினான். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை. அங்கப்பன் சர்க்கார் பணத்தைக் கையாடியதாகத் தீர்மானமாகி விட்டது. அதற்காக அவனுக்கு இரண்டு மாதச் சிறைத் தண்டனையும் அளித்து விட்டார்கள்.

காமாச்சி அன்று முதல் பெரிய மனுஷனாகி விட்டான். அங்கிருந்த சர்க்கார் உத்யோகஸ்தர்கள் எல்லாரும் அவனுக்கு நெருங்கிய சிநேகிதர்களாகி விட்டார்கள்.

* * *

இதெல்லாம் இரண்டு வருஷங்களுக்கு முன்பு நடந்தது.

அந்தமாதிரி மறுபடியும் ஏதாவது வில்லங்கத்தில் அங்கப்பன் மாட்டிக் கொண்டு விட்டானோ என்று அம்மாளு தவித்துக் கொண்டிருந்தாள்.

அதே சமயம் அங்கப்பன் வந்து சேர்ந்தான்.

அம்மாளு உட்கார்ந்திருப்பதைப் பார்த்து “என்ன யோசனை பண்ணிக்கிட்டு உட்கார்ந்திருக்கே!” என்றான் சிரித்துக் கொண்டே.

அவன் மலர்ந்த முகத்தைப் பார்த்த பிறகே அம்மாளுவின் மனம் தெளிந்தது. அவளும் சிரித்துக் கொண்டே “ஒண்ணுமில்லே. உங்களைக் காணமேன்னுதான் யோசனை பண்ணிக்கிட்டிருந்தேன்” என்றாள்.

“காணோம்னு யோசனை பண்ணுவானேன்!” என்று கூறி அவள் முகத்தைப் பார்த்தவன் “ஓ கோ! உனக்குப் பழைய ஞாபகம் வந்திருச்சாக்கும். சரிதான். இன்னமா அதை நீ மறக்கல்லே!” என்றான்.

“நானு அதை நெனைக்கிறேன்! நீங்க சொல்லாமக் கொள்ளாம வெளியே போயிட்டீங்கன்னு அந்த நெனப்புத் தானே வந்திடுது” என்றாள்.

“ஆமாம்! இன்னிக்கு நான் எங்கே போனேனென்று நீ கேக்கல்லையே! அந்தக் காமாச்சிப் பய இன்னிக்கு மாட்டிக்கிட்டான். யாரோ சர்க்காரு ஆளை ஏமாத்தி, அவன்கிட்டேயிருந்து பணத்தை வாங்கிப்புட்டானாம். அதுமேலே, ஆபீசுக்குத் தெரிஞ்சு போயி அவனையும் அந்த ஆளையும் பிடிச்சுக்கிட்டாங்க. அதோட அந்தப் பழைய விஷயத்திலேயும்தான் அநியாயமா என்மேலே பழி சுமத்தினதையும் ஒத்துக்கிட்டானாம். பாவம்! அதைச் சொல்லத்தான் காலையிலே ஆள் வந்திச்சு.

“அதைக் கேட்டதும் எனக்குப் பரிதாபமாயிருந்திச்சு. அவனுக்கு ஜாமீன் கொடுத்து அவனைக் கூட்டியாந்து நல்ல புத்தி சொல்லலாம் என்றுதான் அவசரமாப் போனேன். அவன் தான் பிடிவாதமா ‘சாமீனும் வேணாம்; ஒண்ணும் வேணாம். நான் பண்ணின பாவத்துக்குத் தண்டனையை அனுபவிக்கப் போறேன்னு பிடிவாதம் பண்ணிப்பிட்டான். சர்க்கார்கிட்டே சொல்லிப் பார்த்தேன். அவங்களும் அவனை விடமாட்டேன்னுட்டாங்க. அதான் இவ்வளவு நேரமாச்சு” என்றான் இரக்கத்துடன்.

“நல்லவேளை. மறுபடியும் உங்களை மாட்டி வைக்காமே, அவனே மாட்டிக்கிட்டானே. அதுவரைக்கும் சேமந்தான்” என்றாள் அம்மாளு. அவள் வாய் இந்த மொழிகளைக் கூறின என்றாலும், தன் கணவன் எத்தகைய பெருந் தன்மையுள்ளவன் என்பதை மனதுக்குள் நினைத்து நினைத்து அவள் பெருமிதமும் பேரானந்தமும் அடைந்தாள்.

# ராமன்பட்டி ஜமீன்தார்

எஸ். வி. எஸ்.

"லலிதா! லலிதா!" என்று கூவிக்கொண்டே, மிக்க உற்சாகத்துடன் உள்ளே நுழைந்தான் ராமபத்ரன்.

சோகமே உருவாய் இருந்த லலிதா, "என்ன?" என்று ஈனஸ்வரத்தில் கேட்டுக்கொண்டே உள்ளிருந்து அவன் எதிரே வந்தாள்.

"இதோ பார்த்தாயா, செட்டியார் பொம்மை! இனி..." என்று உற்சாகமாகச் சொல்லிக்கொண்டே வந்தான்.

அதற்குள் லலிதா குறுக்கிட்டு, "போதுமே, வீடுபற்றி எரிகிறச்சே, பீடி பத்த நெருப்புக் கேட்டானும்! இங்கே ஒருவேளை பிண்டத்துக்கே திண்டாடுகிறது, இந்த லக்ஷணத்தில் நாம் இரண்டு பேரும் எதிரும் புதிரும் உட்கார்ந்து விளையாடுவதற்குப் பொம்மை வாங்கி வந்துவிட்டீர்களாக்கும், செட்டியார் பொம்மை!" என்றாள்.

"அடி, அசடே! நான் சொல்லவந்ததை முழுதும் கேட்காமல் என்னமோ உளறுகிறாயே! இது சாதாரண பொம்மையில்லை. அதிர்ஷ்ட பொம்மையாக்கும்! இது நம்ம வீட்டில் புகுந்த நிமிஷத்திலிருந்து அஷ்ட ஐசுவரியமும் கொட்டப் போகிறதாக்கும். இதை நான் எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதித்தேன் தெரியுமா?" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டான்.

"ஒரு உத்தியோகத்தைச் சம்பாதித்துக் கொள்ளத் துப்பு இல்லாவிட்டாலும், இம்மட்டும் பொம்மை சம்பாதிக்கத் துப்பு இருந்ததே! அது சரி, நீங்கள் காலை ரேஷனுக்கு, உங்கள் சிநேகிதர் அப்பாசாமியைக் கேட்டு, ஐந்து ரூபாய் கடன் வாங்கி வருகிறேன் என்று போனீர்களே! அது என்ன ஆச்சு? காயா, பழமா?"

"ராமபத்ரன் போய்க்கூட ஒரு காரியம் காயாகப் போச்சு என்று உண்டா?" என்று சொல்லிக் கொண்டே மடியைத் தடவினான். மடியில்தான் அவன் அப்பாசாமி கொடுத்த ஐந்து ரூபாய் வைத்துக் கொண்டிருந்தான். அது இப்போது எங்கே போய்விட்டது?— அவன் என் தேள் கொட்டியவன் போல் விழிக்கிறான்.

முதலில் அவன் முகத்தில் எவ்வளவு சந்தோஷம் தாண்டவமாடிற்றோ, அதைவிடப் பத்துமடங்கு அதிகமாக அல்லவோ ஏமாற்றக் களை தாண்டவமாடுகிறது.

"பார்த்தீர்களோ இல்லையோ, உங்கள் அதிர்ஷ்டத்தை, அதிர்ஷ்ட பொம்மை வந்த முகூர்த்தத்தில் கடன் வாங்கிய ஐந்து ரூபாய் கூடக் காணாமல் போகிறது! ஆகா! எப்படிப்பட்ட அதிர்ஷ்டம்! எப்படிப்பட்ட அதிர்ஷ்ட பொம்மை!" என்று பரிகசித்தாள் லலிதா.

ராமபத்ரனுக்குச் சொல்லி முடியாத கோபமும் வேதனையும் உண்டாயிற்று. அந்தப் பொம்மையைச் சுக்கு நூறாக உடைத்தெறிய வேண்டும் போல் தோன்றியது. ஏன், கையைக்கூட ஓங்கி விட்டான். அந்தச் சமயம் லலிதா அவனைத் தடுத்து, "அந்தப் பொம்மையை உடைக்கிற முகூர்த்தத்திலே இதைவிடத் தீம்பாக ஏதாகிலும் சேரப்போகிறது, வேண்டாம்!" என்று தடுத்தாள். ராமபத்ரன் அந்த மொழிகளைக் கேட்டுச் சற்றுத் தயங்கினான்!

★

எங்கேயோ வெளியேபோயிருந்த ராமன்பட்டி ஜமீன்தார் ராமசாமி அய்யர் சரியாக பன்னிரண்டு மணிக்கு வீட்டுக்குள் நுழைந்தார். வீட்டில் இரேழிக்கு அடுத்தாற்போல் தான் அவருடைய அறை. அறையின் நடுவில் ஒரு மேஜை, ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தன. மேஜைக்கு எதிர்த்தாற்போல் நீண்ட பெஞ்சு ஒன்றிருந்தது. அதில் தான் வருவோர் போவோர் உட்கார்ந்து ஜமீன்தாரிடம் பேசுவது வழக்கம். ஜமீன்தார் நாற்காலியில் உட்காருவார். அறையின் ஒரு பக்கச் சுவரில், கோதண்டராம ஸ்வாமி படமும், ருக்மிணி பாமா சமேத கிருஷ்ணர் படமும் இருந்தன. அதற்கு எப்பொழுதோ சூட்டப்பட்ட மாலை, காய்ந்து சருகுமாலையாக அதன்மீது மிளிர்ந்து கொண்டிருந்தது. அதன் எதிர்ப்புறத்தில் ஒரு முக்கோண வடிவமான 'ஸ்டாண்'டிருந்தது. அதில் வைக்கப்பட்டிருந்த பொருள் காணவில்லை என்பதை, இன்று ராமசாமி அய்யர் தம் அறைக்குள் நுழையும்போதே கண்டு திடுக்குற்றார்.

"ஓய்! அதிர்ஷ்டச் செட்டியாரே! எங்கெக்காணும் ஓடிவிட்டீர்? எனக்கு அதிர்ஷ்டம் தருவதற்கு முன்பே ஓடிவிட்டீர் போலிருக்கிறதே!" என்று தம் மனசுக்குள் சொல்லிக் கொண்டார். ஆனால் அறைக்குள் இரண்டடி எடுத்து வைத்ததும், காலில்

ஏதோ காகிதத் துண்டு தட்டுப்பட்டது. குனிந்து பார்த்தார், ஐந்து ரூபாய்நோட்டு கிடந்தது. உடனே ராமசாமி அய்யர், "ஓய், செட்டியாரே! உம்முடைய பெருக்குக் குந்தகமில்லாமல் போகிற போக்கில் ஐந்து ரூபாய் கொடுத்து விட்டுப் போய்விட்டீர் போலிருக்கிறது! என் அதிர்ஷ்டம், ஐந்து ரூபாய் தானா?" என்று தம் மனசுக்குள் சொல்லிக் கொண்டார். அப்புறம் "கமலம்! விசாலி! கோண்டு!" என்று ஒரு குரல் கொடுத்தார். கமலமும் விசாலியும் அவருடைய புதல்விகள். கோண்டுதான் கோதண்டராமன் என்ற நாமதேயமுள்ள புத்திரன். இவர்களைக் கூப்பிட்டு இவர்களில் யாராவது செட்டியார் பொம்மையை எடுத்தார்களா? யாராவது ஐந்து ரூபாய் நோட்டைக் காணாமல் கெட்டுப் போக்கியதுண்டா என்று புலன் விசாரித்தார். அவருக்கு ஒன்றும் துப்புக் கிடைக்கவில்லை. பின்னர் இதைப்பற்றிக் கவலைப் படுவதில் பயனில்லை என்று அந்த ஐந்து ரூபாய் நோட்டை மடியில் செருகிக் கொண்டார்.



## 2

ராமன்பட்டி ஜமீன்தார் ராமசாமி அய்யருக்கு, எப்படி அந்தச் செட்டியார் பொம்மை கிடைத்தது என்று இவ்விடத்தில் சொல்லியாக வேண்டும்.

ஆம், ராமசாமி அய்யர் அந்தப் பொம்மையைப் பெறுவதற்குச் சின்னக் குழந்தைகளைப்போல் அடம்பிடித்து அழவில்லை; நவராத்திரிக்குப் பொம்மை வாங்கும் பெண்களைப்போல், தெருவில் எப்போது 'புதுச்சேரி பொம்மை' என்ற குரல் கேட்கும் என்று காத்திருந்து, கூப்பிட்டு வாங்குவார்களே, அப்படியும் வாங்கவில்லை.

ஒருநாள், அவர் வீட்டு வாசலில் ஒரு பண்டாரம், "சந்தவனத்தில் ஓர் ஆண்டி" என்று பாடிக்கொண்டு நின்றான்.

"என்னப்பா வேண்டும்?" என்றார்.

"ஐயா. பசிக்குது! ஒரு வாய் சோறு இருந்தால் போடுங்கள்!" என்றான்.

ராமசாமி அய்யர் ரொம்ப நல்ல மனிதர். அவருக்குத் 'தர்மப் பிரபு' என்ற புகழ் கூட உண்டு. இந்தக் கையால் செய்யும் உதவி அந்தக் கைக்குத் தெரியக் கூடாது என்று சொல்வார்களே, அந்த முறைப்படி வழங்குபவர். இந்தப் பஞ்ச காலத்திலும் அவரை அண்டி யாராகிலும் ஒரு வாய் சோறு கேட்டால் இல்லை என்னாமல் போடுவார். ஆகவே, அன்று பண்டாரத்தின் வயிறு நிறையவே சோறு போட்டார். சோற்றைத் தின்ற பண்டாரம், இந்தப் பொம்மையைக் கொடுத்து, "பத்திரமாக வைத்திருங்கள். இதன் விளைவாக ஒருகாலத்தில் ஒரு நல்ல அதிர்ஷ்டம் தங்களுக்கு அடிக்கலாம்" என்று சொல்லிக் கொடுத்தான். "அப்பா! எனக்கு எதற்குப் பொம்மையும் அதிர்ஷ்டமும்? ஈசன் ஏதோ கொஞ்சம் கருணை புரிந்திருக்கிறான். அதற்குக் குறைவு வராமலிருந்தாலே போதும். அப்படி வந்து விட்டாலும் கவலைப் படுபவன் நானல்ல. எல்லாம் அவன் செயல் என்றிருப்பவன். ஆகவே எனக்குப் பொம்மை வேண்டாம்" என்றார். பண்டாரம் வற்புறுத்திக் கொடுத்துவிட்டுப் போனான். இது நடந்து ஒரு வருஷமாகி விட்டது. ஆனால் இதுவரை அவருக்கு விசேஷமாக 'அதிர்ஷ்டம் அடித்தது' என்று சொல்லும்படியான லாபம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை! மேலும் இப்படி ஒரு பொம்மை இருக்கிறது என்பதைக் கூட மறந்து இருந்தார்.

அவருடைய தூரபந்துவான ராமபத்ரன் மட்டும் "ஏது மாமா இந்தப் பொம்மை?" என்று ஒருமுறை கேட்டான். அவனிடம் மட்டும் இந்தக் கதையைச் சொல்லியிருந்தார். அவன் உள்ளூர்வாசி; கஷ்டதசையிலிருந்தான். பி. ஏ. வரை படித்திருந்தும், வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தான். வறுமை வாட்டியது. அந்த நிலைமையில், இந்தப் பொம்மையைப் பற்றிக் கேட்டதும் ஏன் இந்தப் பொம்மையைக் களவாடிக் கொண்டு போய்விடக் கூடாது என்று நினைத்தான். பாவம், ராமபத்ரன்! சும்மா கேட்டிருந்தால்கூடக் கொடுத்திருப்பார் ராமசாமி அய்யர். அனுவியமாக, ராமசாமி அய்யர் வீட்டிலில்லாத சமயமாகப் பார்த்து, மற்றவர்கள் அவனைக் கவனிக்காதபோது, மெள்ள பூனைபோல் அடிமேல் அடிவைத்து, அந்த அறைக்குள் சென்று, அந்தப் பொம்மையைத் திருடிக் கொண்டு வந்தான். அந்தக் காரியத்தில் ஈடுபட்ட போதுதான் தன் மடியிலிருந்த

ஐந்து ரூபாயைப் பறி கொடுத்தான்! அதிர்ஷ்ட பொம்மை, முதலில் அவனுக்கு ஐந்து ரூபாய் கஷ்டத்தைக் கொடுத்தது!

3

ஏன், பிறகுங்கூட அவனுக்கு அடுக்கடுக்காகக் கஷ்டங்கள்தான் வரலாயின. வீட்டுக்காரன், ஆறுமாத வாடகை பாக்கியிருந்ததால், 'வீட்டைக் காலி பண்ணு' என்று வற்புறுத்திக் கொண்டிருந்தான்.

அவனுடைய நான்கு வயதுக் குழந்தை ஒன்று அகால மரணமடைந்தது.

இனி, கடன் கொடுப்பார் யாருமில்லை என்று சொல்லும் அளவுக்கு எல்லாரிடமும் ஐந்து, பத்து, பதினைந்து என்று கடன் வாங்கியிருந்தான்.

இந்த நிலையில் அவன் மனைவி லலிதா படுத்த படுக்கையில் கிடந்தாள்.

அவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. இந்தக் கஷ்டங்களிலிருந்து விடுதலை பெற மார்க்கமில்லையா என்று ஏங்கிக் கொண்டிருந்தான். அவன் மனைவி, "உங்களுக்கு ஒருவிதத்தில் தூர பந்து என்கிறீர்களே ராமசாமி அய்யரை. அவரைப் போய்ப் பார்த்து, நம் கஷ்ட நிலைமையைச் சொல்லி, ஒரு நூறு ரூபாயாவது கடன் வாங்கி வரக் கூடாதா? அவர் எவ்வளவோ தர்மிஷ்டன் என்று சொல்லிக் கொள்ளுகிறார்களே!" என்று சொல்வாள்.

ராமபத்ரனுடைய குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்னும்போது, அவன் எப்படி ராமசாமி அய்யரைப் பார்ப்பான்? அதனால் அவள் கூறும்போதெல்லாம், "எச்சில் கையால் காக்காயைக் கூட ஓட்டாதவன். அவன் தர்மிஷ்டனுமே, தர்மிஷ்டன். ஊரார் ஒன்றும் இல்லாதவனை, 'ஆஹா' என்று ஸ்தோத்திரம் பண்ணித் தூக்கி விடுவார்கள்" என்று மனதறிந்து பொய் சொல்லிவிடுவான்.

ஆனால் அவள் தன் நிலை நாளுக்கு நாள் க்ஷீண தசை அடைவதைக் கண்டு, வேறு ஒரு விஷயமும் சொல்லிவந்தாள். "என்னு! அந்தப் பொம்மையையாகிலும், கிணற்றிலே குளத்திலே எங்கேயாகிலும் போட்டு விடுங்களேன்! இல்லென்னு, இதை யார் அதிர்ஷ்ட பொம்மை என்று சொல்லிக் கொடுத்தார்களோ, அவரண்டையே இந்த அதிர்ஷ்டங்கள் எல்லாம் இருக்கட்டும் என்று சொல்லிக் கொடுத்து விடுங்களேன்! புண்ணியமாகப் போகிறது உங்களுக்கு!' என்பாள். ராமபத்ரனுக்கும் அவள் சொல்லுகிறபடி இதையாகிலும் செய்வோமே என்று தோன்றியது.

ஒருநாள் ராமபத்ரன் புறப்பட்டான். பொம்மையைத் திருடிக்கொண்டு வருவது எளிதான காரியமாகப் பட்டது; ஆனால் திருப்பிக் கொண்டுபோய் அதே இடத்தில் வைப்பது அவனுக்கு மிகவும் சிரம சாத்தியமான காரியமாகத் தோன்றியது.

தவறு செய்வதற்கு உதவியாக எத்தனையோ உதவிகள், உபகரணங்கள் உலகில் கிடைக்கின்றன. ஆனால் அந்தத் தவறைத் திருத்திக்கொள்ள முயலும்போது, உலகில் எதுவுமே உதவியாக, பக்கபலமாக நிற்பதில்லை போல் தோன்றுகிறது.

இருந்தாலும் எப்படியோ, ராமசாமி அய்யர் வெளியே போய்விட்டாரா என்று பார்த்துக் கொண்டிருந்து அவர் வெளியே போய்விட்டார் என்ற தகவல் தெரிந்ததும், மெள்ள அடி மேல் அடி எடுத்துவைத்து, இரேழிக்குப் போய், அவர் அறைக் கதவையும் சத்தப் படுத்தாமல் மெள்ளத் திறந்தான். அவனும் ஒரு அடி எடுத்து வைத்தான். திரும்பி ஒரு முறை பார்த்துக்கொண்டான் யாராகிலும் வருகிறார்களோ என்று; ஒருவருமில்லை. பின்னர் அடுத்த அடி எடுத்துவைத்தான். அவ்வளவுதான்! "யாரடா அது?" என்று ஒரு பயங்கரக் குரல் கேட்டது. ராமபத்ரனுக்கு உடல் எல்லாம் கடகடவென்று நடுங்கிவிட்டது. கையிலிருந்து பொம்மை 'படார்' என்ற பலத்த சத்தத்துடன் கீழே விழுந்தது. சுக்கு நூறாகத் தகர்ந்தது. அதைக்கூடச் சரியாகப் பார்க்கவில்லை. உடனே எடுத்தான் ஓட்டம் ராமபத்ரன்!

எங்கேயோ வெளியே போயிருந்த ராமசாமி அய்யர் அந்தச் சமயம்தான் திரும்பி வந்து கொண்டிருந்தார். தமது வீட்டிலிருந்து தலைதெறிக்க ராமபத்திரன் ஓடுவதைப் பார்த்ததும், அவருக்கு ஒன்றும் புரியவில்லை!

ஆனால் வீட்டுக்குள் நுழைந்ததும் அவருக்கு ஒரு ஆச்சரியங் காத்திருந்தது. அவர் அறையில் செட்டியார் பொம்மையல்லவா உடைந்து கிடக்கிறது! அதனிடையில் பளீர் பளீர் என்று கண்ணைப் பறிக்க மின்னும் கற்கள் வைரம் போன்றிருக்கிறதே! ஆம், வைரமேதான்! மூன்று வைரங்கள்.

இப்படிப் பிரமித்து நின்ற அவர் உள்ளுக்குள் இன்னும் ஒரு அடி எடுத்து வைத்ததும்,



எழுத்தாளர் :—இதுவரையில் நான் எழுதின புஸ்தகங்களில் இந்தப் புத்தகம் மோசம் என்று சொன்னீராமே?

மற்றவர் :—நான் அப்படி உங்களைச் சுட்டிக்காட்டி சொல்லவே இல்லை. இதுவரையில் வந்த புஸ்தகங்களிலே இது தான் ரொம்ப மோசம் என்று சொன்னேன்!

"யாரடா அது?" என்ற குரல் வந்தது! உடனே, ராமபத்திரன் ஓடியதன் காரணம் சுலபமாகப் புரிந்து விட்டது. அத்துடன், செட்டியார் பொம்மையைக்கூட அவன்தான் திருடியிருக்க வேண்டும் என்ற அளவுக்கும் ஊகித்துவிட்டார்.

அடுத்த கணம் 'அவன் எதற்காக அப்படித் திருடினான்' என்று யோசித்தார். அவன் என்ன கஷ்டத்தி லிருக்கிறானோ? அவன் துன்பம் அல்லவா அவனை இக்காரியம் செய்யத் தூண்டி யிருக்கிறது! சரி, ஒரு ஆள் அனுப்பி... இல்லை... இல்லை... ஆள் அனுப்பினால் வரமாட்டான். அவன் ஏற்கெனவே, பயந்து செத்துக் கொண்டிருப்பான்! கூப்பிட்டால் வரமாட்டான்! விபரீதமாக ஏதாகிலும் நடந்தாலும் நடந்து விடலாம். ஆகவே, 'நாமே போவோம்' என்று புறப்பட்டார் ராமன்பட்டி ஜமீன்தார்.

ராமபத்ரன் வீட்டை அடைந்ததும் "ராமபத்ரா!" என்று கூப்பிட்டார் ஜமீன்தார்.

"மாமா, என்னை மன்னித்து விடுங்கள். தெரியாமல் அந்தப் பொம்மையைத் திருடி வந்துவிட்டேன். அதை அப்படியே தங்களிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று வந்தேன். கைதவறிக் கீழே விழுந்து உடைந்துவிட்டது. மன்னிக்க வேணும்!" என்று கெஞ்சினான்!

"நன்றாய்ச் சொன்னாய், ராமபத்ரா! நீ உடைத்ததற்கு என்ன கைம்மாறு செய்வது என்று தெரியாமல் தவிக்கிறேன். நீயோ 'என்னை மன்னித்துவிடு' என்கிறாயே! நீ உடைத்ததனால் அல்லவோ பொம்மைக்குள் மூன்று வைரங்கள் இருப்பது தெரிய வந்தது! இந்தா உனக்குப் பரிசாக ஒரு வைரம் தருகிறேன். வாங்கிக்கொள்" என்றார்.

"வைரங்களா இருந்தன?......" என்று ஒரு கணம் அதிசயித்தான். பின்னர், "ஆனால் மாமா! எனக்கு எதற்கு வைரம்? என் பெண்டாட்டி சாகக் கிடக்கிறாள். வீட்டில் ஒரு மணி அரிசியில்லை. மூலை முடுக்கில் எல்லாம் கடன் வாங்கித் திண்டாடுகிறேன். இந்த லக்ஷணத்தில் எனக்கு எதற்கு வைரம்? வைர நகை போட்டு என் மனைவியை அழகு பார்க்கும் நிலையில் நான் இல்லையே மாமா?" என்று கண்ணீரும் கம்பலையுமாகச் சொன்னான்.

ராமசாமி அய்யர் உள்ளம் நெகிழ்ந்து விட்டது. "ராமபத்ரா! எனக்கு இத்தனை நாளும் நீ இவ்வளவு கஷ்டப்படுகிறாய் என்று தெரியாது. என்னாலான உதவி உனக்குக் கட்டாயம் செய்கிறேன்" என்றார்.

"மாமா, எனக்கா, உங்கள் வீட்டில் திருடிய எனக்கா, இவ்வளவு அன்பும் அனுதாபமும்" என்றான் நா தழதழக்க.

"அப்பா, உன் குற்றத்தைத் தண்டிப்பதற்கு நான் யார்!" என்றார்.

"மாமா! நீங்கள் இவ்வளவு அன்பும் இரக்கமும் உள்ளவர்களாக இருக்கிறீர்கள். ஆனால் உங்கள் வீட்டில் யாரையோ கொண்டு வந்து வைத்திருக்கிறீர்கள் கொஞ்சம்கூட மரியாதை இன்றி 'யாரடா அது?' என்று கூவுகிறானே? அவன் யார்?" என்றான்.

ராமசாமி அய்யர் 'இடி இடி' என்று சிரித்துவிட்டு, "அவன் யாருமில்லை—ஒரு பச்சைக்கிளி. ஒரு வேடன், ஒரு கந்தல் துணியையும், ஒரு கவளம் சோறும் வாங்கிக் கொண்டதற்குப் பிரதியுபகாரமாக இந்தப் பச்சைக் கிளியைக் கொடுத்து விட்டுப் போனான். அதற்கு அவன் வீட்டுக்குள் யார் நுழைந்தாலும் இப்படி மரியாதையின்றிக் கேட்கப் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறான், அவ்வளவுதான்! அதைக் கண்டு நீ பயந்து, பொம்மையைக் கீழே போட்டு விட்டாய். பொம்மையை நீ உடைத்ததனாலன்றோ அதற்குள் வைரம் இருப்பதும் பொம்மை அதிர்ஷ்ட பொம்மை என்பதும் தெரியவந்தது" என்றார்.

"மாமா, தங்கள் ஒரு பண்டாரத்துக்குத் தர்மம் செய்ய, வைரம் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கும் பொம்மை கிடைத்தது; இன்னொரு வேடனுக்கு உதவ, ஒளிந்திருக்கும் வைரங்கள் வெளியாயின. இதில் நான் செய்தது என்ன இருக்கிறது? எல்லாம் உங்கள் தர்மத்தின் சிறப்பு!" என்றான் ராமபத்ரன் நன்றி பொங்க.



# ஆரோக்கிய ரகசியம்

## 19. காலை கன்று போடுமா?

நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டுமானால் நம் உடலிலுள்ள நரம்புகள் சரியாக வேலை செய்ய வேண்டும். மூளை மட்டும் சரியாக வேலை செய்தால் போதாது. நுரை ஈரல் இருக்கும் குடல்கள், பித்தப்பை, மண்ணீரல் முதலியவைகள் சரியாக வேலை செய்ய வேண்டும். இவைகளையெல்லாம் ஆளும் சக்தி சில நரம்பற்ற சதைக் கோளங்கள் வசம் இருக்கிறது.

நம் சரீரத்திலுள்ள கோளங்களை எல்லாம் எடுத்துச் சேர்த்தால் ஒரு உள்ளங்கையில் அடக்கி விடலாம். இவை பல உருவங்களில் இருக்கின்றன. கோலியைப் போல் உருண்டையாகவும், சப்பையாகவும், கோணலாகவும் பல தினுசில் இருக்கும். இவைகள் பலவித ரஸங்களைச் சுரக்கின்றன. இந்த ரஸங்களுக்கு ஹார்மோன் என்று பெயர். இது ஒரு கிரேக்க மொழி. 'நான் ஊறி விடுகிறேன்' என்பது இதன் அர்த்தம். இவை வாஸ்தவத்தில் நாம் உயிர் வாழக் ஊறி விட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இவைகள் ஒழுங்காகத் தம் வேலையைச் செய்யா விட்டால், மனிதன் மனிதனாகவே வாழ முடியாது. உருவம், குணம் எல்லாமே மாறி கோரமாகிவிடும்.

இந்தக் கோளங்களிலிருந்து சுமார் இருபது வித ரஸாயனப் பொருளுடைய ரஸங்கள் சதா உற்பத்தியாகி ரத்தத்துடன் கலக்கின்றன. இவைகளுக்கென்று தனி நரம்பு இணைப்புக்கள் கிடையாது. இரத்தம் அதன் வழியாகப் பாய்ந்து செல்லும் போது, அத்துடன் தன்னுடைய ரஸங்களையும் சேர்க்கின்றன.

இந்தக் கோளங்களெல்லாம் சேர்ந்து ஒரு அரசாங்கமே நடத்துகின்றன என்று சொல்லலாம். பிட்யூடரி என்று ஒரு சிறிய கோலி அளவேயுள்ள கோளமிருக்கிறது. இதனை ராஜ கோளமென்று சொல்லலாம். இக்கோளம் செய்யும் வேலை அபரிமிதமானது. ஆனால் இதன் வேலைகள் தைராய்ட் என்னும் கோளத்தின் மூலமாகத்தான் செய்யும்.

பிட்யூடரியை ராஜ கோளமென்றால், தைராய்ட் கோளத்தைச் செயலாற்றும் மந்திரி என்று சொல்லலாம். இது கழுத்தில் முன் பக்கம் குரல் வளைக்கு ஒட்டினாற்போல் இருக்கிறது. பாரா தைராய்ட் என்பது அதன் பக்கத்தில் இரண்டாக அமைந்திருக்கின்றது. இவை உப மந்திரிகள் என்று சொல்லலாம். இவைகளின் முக்கியத் தொழில்களைப் பற்றியும் அபரிமிதமான பலனைப் பற்றியும் இனி வரும் சர்வாங்காசனத்தைப் பற்றிச் சொல்லும்போது விவரமாக எழுதுகிறேன்.

மற்றும் இரைப்பையை அடுத்து ஒரு கோளம் இருக்கின்றது. அது கணையம் என்னும் நீரைச் சுரக்கின்றது. மூத்திரக் காய்களின் மேல் இருக்கும் அட்ரீனல் கோளம், சில சமயம் முழு வேகமாகவும், நிதானமாகவும் வேலை செய்யும். நாம் திடுக்கிடும்போதும், திடீர் என்று பயப்படும்போதும் இது முழு வேகமாய் ரஸத்தைக் கக்கும். நாம் கதைகளில் படிக்கிறோமல்லவா பயத்தினால் முகம் வெளுத்து விட்டது என்று. பேயறைந்தாற்போல் முகம் தோன்றியது என்று. ஏன், நேரில்கூடக் காண்கின்றோமே. அப்



பாடப் பயப்படும்போது அட்ரீனல் கோளம் அதிக ரஸம் கக்கி விடுகிறது. இந்த ரஸம் இரத்தத்தின் நிறத்தையே மாற்றி விடுகிறது. உடனே நமக்கு வெளுத்தாற்போல் தெரிகிறது. அந்த ரஸம் இன்னும் கொஞ்சம் அதிகப் கக்கப் படுமானால் உயிருக்கே ஆபத்தாகவும் முடியும். ரத்தம் கண்டினாற்போல் இருக்கும்; இருதயம் படபடக்கும்; சிலருக்கு நின்றேவிடும். பேய் இருக்கிறதோ இல்லையோ நமக்குத் தெரியாது ஆனால் அட்ரீனல் கோளம் அதன் ரஸத்தின் மூலம் பேய் செய்யும் பல காரியங்களைச் செய்து விடுகிறது. ஆகையால் நாம் பயப்படாமல் இருக்கப் பழக்கிக் கொள்ள வேண்டும்.

ஆண், பெண் பீஜக் கோளங்கள் பருவ காலம் வரும்போது வேலை செய்யத் துவங்கும். பிறகு தீவிரமாக இக்கோளங்கள் வேலை செய்து சந்ததிகளை உற்பத்தி செய்யும். குறிப்பிட்ட வயது அதாவது இனி வர்க்க விர்த்தி வேண்டியதில்லை எனும் முதுமை நிலை அடையும்போது, இதன் வேலை படிப் படியாய்க் குறைந்து மந்தப்பட்டு விடும்.

மற்றும் சலைவா எனும் கோளம் உமிழ் நீரை உற்பத்தி செய்கிறது. இம்மாதிரி பல இருப்பினும், முக்கியமானவற்றை மட்டும் குறித்திருக்கிறோம். இந்தக் கோளங்களிலிருந்து ஹார்மோன்கள் சரியாய் ரத்தத்தில் கலந்தால்தான் ஒருவன் ஆரோக்யமாக வாழ முடியும். உடல் உறுப்புகளும் ஒழுங்காக வேலை செய்யும். அவை குறைந்தாலோ, அதிகப்பட்டாலோ, அந்தந்த ஹார்மோன்களின் குணத்திற்குத் தக்க பல கோளாறுகள் உண்டாகும்.

ராஜகோளமாகிய பிட்யூடரியை எடுத்துக் கொள்ளுவோம். இதிலிருந்து வரும் ஹார்மோன் அதிகப்பட்டால் ராட்சஸ உருவம் உண்டாகும். குறைந்தால் குள்ளர்களாக இரண்டு, மூன்று அடி உயரத்திலேயே வளர்ச்சி நின்று விடும். இதனை அந்த ஸ்தானத்திலிருந்து எடுத்து விட்டால் மனிதன் சில விநாடிகளில் துடிதுடித்து இறந்து விடுவான்.

ஸ்திரீகளுக்குச் சுகப் பிரசவமாகவும் குழந்தைக்குப் பால் சுரக்கவும் பிட்யூடரி தனியாக அந்தச் சமயங்களில் வேலை செய்ய வேண்டி யிருக்கிறது. பிரசவ வேதனை உண்டாகாமல், குழந்தை வயிற்றிலேயே மரித்து விடும் என்ற நிலைமையில் உள்ளவர்களுக்கு ஒரு இன்ஜெக்ஷன் செய்வார்கள். அது பிட்யூடரி கோளத்தின் ரஸத்தில் தயார் செய்தது. பால் சுரக்கவும் இதன் ரஸம் அதிகம் வேண்டும்.

ஆண்களுக்குப் பிட்யூடரி கோளத்தின் ரஸத்தை ஊசியின் மூலம் உடலுக்குள் செலுத்தித் தூண்டி வேலைசெய்யச்செய்து, அவர்களாலும் பாலைக் கொடுக்கும்படி செய்ய முடியும் என மேல் நாட்டில் நிரூபித்திருக்கிறார்கள்.

நமது நாட்டில் கேலியாகச் சொல்லுவதுண்டு 'காளை மாடு கன்று போடுமா? காளை மாட்டிடம் பாலைக் கறக்கச் சென்றாலும்' என்பார்கள். ஆனால் அவர்கள் காளை மாட்டைக் கன்று போடச் செய்யா விட்டாலும், அதிலிருந்து பாலைக் கறக்கிறார்கள். காளை மாட்டின் தலையிலிருக்கும் பிட்யூடரியை ஹார்மோன் சத்துள்ள மருந்தை ஊசி மூலம் செலுத்திக் கிளர்ச்சி உண்டாக்கினால் பால் சுரக்கிறதாம். இங்கு பசுமாடே பால் கறக்கவில்லை. 'காமதேனு' என்று தெய்வமாக வழிபடும் நமது நாட்டில் பாலுக்கு வழியில்லை. ஒரு பசு ஒருபடி ஒன்றரைப் படிக்கு மேல் கறப்பதில்லை. கறக்கச் செய்யவும் பிரயாசையும் நாம் எடுத்துக் கொள்வதில்லை. மேல் நாடுகளில் பசுமாடுகள்தாம் பால் சுரக்கும் மடியைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு அசைந்து அசைந்து நடக்க முடியாமல் போகுமாம். ஒரு வேளைக்கு ஆறு, ஏழு படி என்று பால் கறக்குமாம். அவர்கள் உபயோகித்தது போக மிகுதியாகும் பாலை மாவு ஆக்கி டப்பிகளில் அடைத்து இங்கு நமக்காக, நமது குழந்தைகளுக்காக அனுப்பி விடுகிறார்கள். அப்படியிருக்கக் காளை மாட்டிலிருந்தும் அவர்கள் பால் கறக்க ஆரம்பித்தால் சொல்லவா வேண்டும்! இன்னும் டப்பி, டப்பிகளாகத் தள்ளுவார்கள். நாமும் பால் இல்லையென்று, சொல்லி அந்தப் பால்டப்பிகளை வாங்குவோம்.

ஆனால் எந்த ஆணுக்கும் குழந்தைக்குப் பால் கொடுக்கும் அளவு பொறுமை இருக்காது; அவசியமும் இல்லை. ஆனால் பெண்களாவது தம் குழந்தைக்குப் போதுமான பால் கொடுக்கும்படி செய்யலாமல்லவா? அது இந்த ஹலாசனத்தில் அமைந்திருக்கிறது. பெண்கள் கருப்பம் கொள்வதற்கு முன்னும், கருப்பங் கொண்ட மூன்று மாதங்கள் வரையிலும் ஹலாசனம் பழகுவார்களானால், குழந்தைக்குப் பால் பற்றாக்குறையே ஏற்படாது.

மேல் நாடுகளிலெல்லாம் புடலங்காயை யானைத் துதிக்கை போலவும், உருளைக் கிழங்கைப் பூசணிக்காய் அளவும், பூசணிக்காயை வண்ணான் மூட்டை பருமனும், ஒன்றுக்கும் உதவாத சப்பாத்திக் கள்ளியை முள்ளின்றி வளரச் செய்தும் ஆகாரமாக உபயோகிக்கிறார்கள். தாங்கள்

உபயோகித்தது போக எஞ்சியதை நமக்கு அனுப்புகிறார்கள். நாம்தான் இருக்கிறோமே எது வந்தாலும் சாப்பிட! நமக்கு அழகான டின்களில் சூப்புகளாகவும், ஜாம்களாகவும் செய்து அனுப்பிவிடுகிறார்கள். நாமும் காசைக் கப்பலேற்றி அனுப்பிவிடுகிறோம். நமது செல்வத்துடன் விலை மதிப்பற்ற ஆரோக்கியமும் கப்பலேறிப் போய்விடுகிறது.

குழந்தைக்குப் பால் போதவில்லை யென்றால், எதனால் அப்படி ஆயிற்று? காரணம் என்ன? குழந்தை தாயின் பாலினால் வளரவேண்டு மென்று இயற்கை நியதி இருக்க, பால் சுரக்கவில்லை யென்றால், இயற்கைக்கு மாறு பட்ட வாழ்வை நாம் வாழ்வதால்தான் இவ்விதம் நேருகிறது என்பதை உணர வேண்டாமா? அதனால் நாம் சிந்திக்கும் சக்தியையும் கப்பலேற்றி விடவேண்டுமா? பால் இல்லையா? சரி, டப்பா பால் வாங்கு, கரைத்துக், குழந்தைக்குப் போட்டு, என்கிறோம். அதற்குத் தகுந்தாற்போல் அந்தப் பாலைச் சாப்பிடும் மேல் நாட்டுக் குழந்தைகளை விளம்பரப் படுத்தி யிருப்பதைப் பார்த்தால் கண்ணைப் பறிக்கிறது, மனதை மயக்குகிறது. ஆனால் நம் நாட்டில் ஒரு குழந்தையாவது அந்தப் பாலைச் சாப்பிடுவதனால் அந்தக் குழந்தையைப் போல வளருவதில்லை. அதற்குப் பதில் ஈரல் குலைக்கட்டி விழுகிறது. கையும், காலும் குச்சி போல் இருக்கிறது.

சிலர் குழந்தைக்குப் பால் போட்டுவது இல்லற இன்பத்துக்கு இடைஞ்சலாக இருக்குமென்று, குழந்தைக்குப் பால் மறக்கடித்து விட்டு டின் பாலைக்கொடுத்து வளர்க்கிறார்கள். மிருகங்களுக்கும் கீழான நிலைமைக்குமல்லவா மானிட வர்க்கம் வந்து கொண்டிருக்கின்றது! மிருகங்களுக்குப் பகுத்தறிவு இல்லையாம். அதனால் அது இயற்கைக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டியது அதன் தலை விதியாம். பகுத்தறிவு படைத்த மானிடன் இயற்கையாய் வாழ வேண்டுமென்பது என்ன சட்டமா? குழந்தைக்குத் தாய்ப்பால்தான் கொடுக்க வேண்டுமென்பது என்ன கட்டளையா? நாம் பார்த்துக் குழந்தைகளை எப்படியும் வளர்க்கலாம் என்று விஞ்ஞானம் பேச ஆரம்பித்து விடுவார்கள். ஏன்? ஆகார மாத்திரை சாப்பிட்டே மனிதன் உயிர் வாழலாம் என்று கண்டு பிடித்திருக்கிறார்களே! இவர்கள் அதைச் சாப்பிட்டுப் பார்த்தால் பிறகு தெரியும்.

பேசுகிறவர்கள் தாராளமாகப் பேசிக் கொள்ளட்டும். ஆனால் ராஜகோளமாகிய பிட்யூடரியை ஒவ்வொருவரும் ஆணும் பெண்ணும் எப்பொழுதும், எந்த வயதிலும் ஆரோக்கியமாய் வைத்திருந்தால் தான் சுகமாக வாழ முடியும். ஆரோக்கிய சந்ததிகள் உண்டாகும். நோய் எனும் அரக்கனிடமிருந்து விடுபடலாம். அதற்கு ஹலாசனம்தான் சிறந்த கருவி. மற்ற மருந்துகள் எல்லாம் பிரயோஜனமற்றவை அந்த மருந்துகளும் எல்லோருக்கும் கிட்டக் கூடியது மல்ல. இயற்கை முறையுமல்ல. நீடித்தும் நிற்காது.

(தொடரும்)

## கடிகார சரித்திரத்தில் மகிழ்ச்சி தரும் ஓர் செய்தி

பல ஆண்டு இடைவிடாத ஆராய்ச்சியின் பயன் கைக் கடிகாரத்தின் சரித்திரத்திலேயே ஓர் மிகப் பெரிய மாறுதலை உண்டாக்கி யிருக்கிறது. அதுதான்—பிறர் உதவியின்றி தானாகவே சாவி இயக்கிக் கொண்டு ஓடும் "எடர்னா மாடிக்" கடிகாரம்.

நான்கு வருடங்களுக்கு அதிகமாக எடர்னா கடிகார தொழில் நிபுணர்கள் இப் புதிய முறையைப் பல தடவைகள் பரிசோதித்து திருப்தி அடைந்த பின்னரே பொது மக்களின் பூரண திருப்திக்கு உகந்ததாக இந்தக் கடிகாரத்தை வழங்க முற்பட்டுள்ளனர்.

தானாகவே சாவி இயக்கிக் கொண்டு ஓடும் கடிகாரங்களில், உலகத்திலேயே மிகச் சிறியது இதுதான்.

கடிகாரத்தினுள் ஐந்து சிறிய எஃகு கோலிகள் வெகு லாகவமாக இணைக்கப்பட்டு, கடிகாரத்தின் ஓட்டத்திற்கு வேண்டிய கருவிக்கு ஆதாரவாகவும் பொருத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு எஃகு கோலியின் கனம் ஒரு குண்டூசியின் கொண்டையின் கனத்தில் பாதி. ஏறக்குறைய நாற்பது மணிக்கு வேண்டிய ஓடும் சக்தியை இக் கடிகாரம் சேமித்து வைத்துக் கொள்ளுகிறது. நேரத்தை எப்பொழுதும் வித்தியாசமின்றிக் காட்டுகிறது.

தண்ணீரினால் கெடாது. அதிர்ச்சியினாலும் பழுதடையாது. காந்தக் கவர்ச்சியினால் பாதிக்கப்படாது. கடிகாரத்தின் ரிப்பேர்களும் வெகு சுலபமாக செய்யக் கூடும். உதாரணமாக தானாகவே இயங்கி சாவி கொடுக்கும் கருவியைக் கடியாரத்திலிருந்து நாற்பத்தைந்து செகண்டுகளுக்குள்ளாகவே கழற்றி எடுக்கலாம். சாதாரணமாக வேலைஸ் கடிகாரங்களில் ஏற்படும் சாவிக் கோளாறுகளை எடர்னா மாடிக் கடிகாரம், நூற்றுக்கு நூறுபங்கு தவிர்க்கிறது.

இவ்வளவு அரிய உண்மைகளை பேவர்-லூபா கம்பெனியாரின் விளம்பர ஆலோசகர்களான மெஸர்ஸ் ஸ்ட்ரோனக்ஸ் கம்பெனியாரின் மதராஸ் கிளை ஆபீஸ் மானேஜர் ஸ்ரீ எம். தேவராஜன் அவர்கள் கன்னிமரா ஹோட்டலில் நடந்த தேனீர் விருந்தில் (10-12-50) மக்களுக்கு எடுத்துச் சொல்லி விளக்கினார்.

# மிஸ்டர் பராங்குசம்

## விஜயம்

மிஸ்டர் பராங்குசம் ஒரு சாதாரண மேதையல்ல. துப்பறியும் மேதை. சிறு வயதிலிருந்தே எதிலும் துப்பு துலக்கும் சூட்சம புத்தி அவரிடம் பிரகாசித்தது. காப்பி டம்ளரை யெடுத்து ஒரு வாய் குடித்தவுடனேயே சர்க்கரை போட்டிருக்கிறது,இல்லை என்பதைக் கண்டு பிடித்து விடுவார், பராங்குசம்! சர்க்கரைக்குப் பதிலாக வெல்லம் போட்டிருந்தால் அதை ஒரு விநாடியில் உணர்ந்து விடுவதுடன் தம் முக பாவத்தின் மூலம் அதைச் சுலபமாக வெளிப்படுத்தியும் விடுவார்.

அவரது துப்பறியும் திறமை சம்பந்தமாக யாருக்கு அபிப்பிராய பேதம் இருந்தாலும், ஒரே ஒரு ஆத்மாவுக்கு மட்டும் ஒரு சின்ன அபிப்பிராய பேதமும் இருந்தது கிடையாது. அந்த மனிதர் வேறு யாரும் இல்லை—மிஸ்டர் பராங்குசம்தான்!

மிஸ்டர் பாராங்குசம் மிகவும் தன்னம்பிக்கை யுடையவர். இல்லா விட்டால் தம் வீட்டு வாசலில், துப்பறியும் நிபுணர் என்று போர்டு போடுவாரா?

சில சிக்கலான திருட்டுக்களில் பராங்குசம் உண்மைத் திருடனை அவன் திருட்டு விழிகளைக் கொண்டே கண்டு பிடித்திருக்கிறார்; திருடர்கள் கறுப்பா யிருக்கவேண்டும் என்று சட்டமில்லை என்ற பேருண்மையை அநாயாசமாகக் கண்டு பிடித்திருக்கிறார் பராங்குசம். திருடர்கள் இரவில் தான் வருவார்கள் என்பதில்லை; கன்னம் வைத்துத்தான் திருடுவார்கள் என்றும் நிச்சயிக்க முடியாது; திருடர்கள் தனி வகுப்பினர் அல்ல; எந்த வகுப்பினரிலும் திருடர்கள் இருக்கிறார்கள்—என்பவை போன்ற மாபெரும் உண்மைகளை மிஸ்டர் பராங்குசம் பல முறை நிதர்சனமாக எடுத்துக் காட்டி எத்தனையோ பேர்களைத் தம் மேதையினால் பிரமிக்க வைத்திருக்கிறார்.

அத்தகைய துப்பறியும் மேதையிடம் பணம்பட்டி மிராசுதார் கொலை வழக்கு வந்து மாட்டிக் கொண்டால் அவர் அதை இலேசில் விட்டுவிடுவாரா?

மேற்படி வழக்கில் இருந்த சிக்கல் அந்த மிராசுதாரைக் கொன்றவன் யார் என்பதுதான். போலீஸாருக்கும் ஒன்றும் விளங்கவில்லை.

பணம்பட்டி மிராசுதார் தம் அறையில் உயிரற்றுக் கிடந்ததைக் கொண்டு மிஸ்டர் பராங்குசம், அவர் இறந்துவிட்டது நிச்சயம்தான் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டார். சந்தேகத்துக்கு டாக்டர்கள் ரிப்போர்ட்டையும் ஒரு தடவைக்குப் பல தடவையாகப் பார்த்துக் கொண்டார். பிறகு அவர் தம் துப்பறியும் வேலையை ஜரூராக ஆரம்பித்தார்.

பூதக் கண்ணாடியைக் கையில் வைத்துக் கொண்டு கீழே குனிந்து அந்த அறை முழுதும் துருவித் துருவி ஆராய்ந்தார். தம்முடைய அடிச்சுவடுகளும் அவற்றுடன் கலந்து போய்க் குழப்பம் விளைவிக்கக்கூடும் என்று கருதி மிஸ்டர் பராங்குசம் அந்த வீடு முழுவதும் தலை கீழாக, அதாவது தமது கைகளை ஊன்றிக் கொண்டே நடந்தார்!

'டக்' கென்று ஒரு வஸ்து பராங்குசத்தின் கையில் சிக்கியது. அது பூதக் கண்ணாடியில் பார்க்கக் கூடிய அளவு சின்ன வஸ்துவல்ல; அது ஒரு 'ட்ரௌசர்' பொத்தான். அது கிடைத்ததும் பராங்குசத்தின் மூளை பலமாக வேலை செய்தது. 'இந்தக் கொலை சம்பந்தமான ஒரு தடையமாக ஏன் அந்தப் பொத்தான் இருக்கக் கூடாது?' என்ற கேள்வியும் பளிச்சென்று உதயமாயிற்று. அது கொலைகாரன் அணிந்து கொண்டிருந்த 'ட்ரௌசர்' பொத்தானாகத்தான் இருக்க வேண்டும் என்பதில் அவருக்குத் துளியும் சந்தேகம் ஏற்படவில்லை.

உடனே மிஸ்டர் பராங்குசம் சந்தோஷத்துடன், தலை கீழாக நிற்பதை விடுத்து ஒரு துள்ளுத் துள்ளி நேராக நின்றார். போலீஸாரிடம் இந்தத் தடையத்தைக் காட்டலாம் என்பது அவர் அபிப்பிராயம். ஆனால் அடுத்த கணம் அந்த அபிப்பிராயம் மாறி விட்டது! அதற்குக் காரணம் இடுப்பிலிருந்து நழுவிக் கொண்டிருந்த அவரது 'ட்ரௌசர்தான்!' தம்முடைய 'ட்ரௌசர்' பொத்தானே கீழே விழுந்து தம்மை ஏமாற்றி விட்டது என்பதைக் கண்டு கொள்ள அந்த மேதைக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை! மேலும் இந்த அபூர்வ நிகழ்ச்சியை நினைத்துச் சிரித்துப் பொழுதை வீணாக்கிக் கொண்டிருக்க வில்லை அவர். உடனேயே தம் 'ட்ரௌசரை'ச் சரி செய்துகொண்டு மீண்டும் துப்பறியும் வேலையைத் தொடங்கி விட்டார்.

மிஸ்டர் பராங்குசத்தின் முயற்சி வீண் போகவில்லை. துப்புக் கிடைத்து விட்டது! மிராசுதாரின் அறையில் கிடைத்த ஒரு நுண் பொருளை அவர் பத்திரமாக ஒரு டப்பியில் வைத்துக் கொண்டு தம் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டார். நாலைந்து தினங்கள் விடாமல் மிராசுதார் வீட்டைச் சோதனை போட்டது வீண் போகவில்லையென்ற பெருமிதம் அவர் முகத்தில் ததும்பியது!

ஆனால் போலீஸ் புலிகள் முகத்தில் மட்டும் மிருகக் காட்சிச் சாலையில் இருக்கும் புலிகளின் முகம்போல் ஈயாடாமல் இருந்தன! என்னென்னவோ முயற்சிகள் செய்தும் அந்தக் கொலை சம்பந்தமாக அவர்களுக்கு ஒரு துப்பும் கிடைக்கவில்லை. இந்தச் சமயத்தில் பராங்குசம் போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்து, "இன்ஸ்பெக்டர் ஸார், இன்று மாலை வரையில் எனக்கு அவகாசம் கொடுங்கள்! நிச்சயம் கொலைகாரனைப் பிடித்துத் தருகிறேன். பத்துப் போலீஸ்காரர்களைத் தயாராக வைத்திருங்கள். நான் எங்கிருந்து டெலிபோனில் கூப்பிட்டாலும் அவர்கள் உடனே அங்கே வந்து சேர வேண்டும், என்ன!" என்று கூறி விட்டு மிஸ்டர் பராங்குசம் உற்சாகத்துடன் வெளியேறினார்.

அன்று முழுவதும் மிஸ்டர் பராங்குசம் ஓரிடத்தில் நிற்கவில்லை. டிராமில் போனார்; பஸ்ஸில் போனார்; ரிக்ஷாவில் போனார்; ஜட்காவில் போனார்; மாட்டு வண்டியில் போனார்; கால் நடையில் போனார். போகும்போது அவர் மிராசுதார் வீட்டில் கிடைத்த வஸ்துவை டப்பியிலிருந்தபடி அணு தரிசினியால் கூர்ந்து பார்ப்பதும் பிறகு தெருவில் போகிறவர்களைப் பார்ப்பதுமாகப் போனார். யாருடனெல்லாமோ என்னென்னவோ பேச்சுக் கொடுத்தார்.

மாலை ஆறு மணி இருக்கும். பராங்குசம் சென்ட்ரல் ஸ்டேஷனில் மிகவும் பரபரப்புடன் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தார். அவர் கண்கள் யாரையோ, எதையோ தேடியலைந்தன; அந்தத் தேடும் விழிகள் சில பேரைக் கண்டதும் சலனம் அடையாமல் அவர்களிடமே 'டக்' கென்று நிலைத்து நின்றன.

சற்று நேரத்துக்கெல்லாம் பராங்குசம் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செய்தி யனுப்பி விட்டுப் பிளாட்பாரத்தில் வெற்றிநடைபோட்டார்.

சில நிமிஷங்களில் போலீஸ் அதிகாரி போலீஸ் கான்ஸ்டபிள்கள் சகிதம் பிளாட்பாரத்தில் காட்சியளித்தார். அப்பொழுது பராங்குசம், ஒரு ரயில் வண்டித் தொடருக்கு அருகில் நின்று கொண்டிருந்த ஒரு மனிதரைச் சுட்டிக் காட்டி, "இன்ஸ்பெக்டர், இந்த ஆசாமியை உடனே கைது செய்யுங்கள். இவர்தான் பனம்பட்டி மிராசுதாரைக் கொன்றவர்!" என்று கம்பீரமாக மொழிந்தார்.

அந்த மீசைக்கார ஆசாமி ஒன்றும் புரியாமல் விழித்தார். "உளறுதேயும்! எனக்கும் அந்தக் கொலைக்கும் என்ன சம்பந்தம்! எப்படி என் மீது குற்றம் சாட்டுகிறீர்?" என்று கேட்டார்.


"தடையம் இல்லாமல் நான் உங்கள் மீது குற்றம் சாட்டவில்லை. இதோ, இந்த டப்பியில் உள்ளதைப் பாருங்கள்!" என்று கூறி மிஸ்டர் பராங்குசம் தம்மிடமிருந்த டப்பியைத் திறந்து காண்பித்தார். அதைப் பார்த்துவிட்டு, குற்றம் சாட்டப்பட்டவர் ஒன்றும் புரியாமல் தவித்தார்.

போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அந்த டப்பியை உற்றுப் பார்த்துவிட்டு, "என்ன மிஸ்டர் பராங்குசம், இதில் ஒரு பல் இருக்கிறது. இதற்கும், இந்தக் கொலைக்கும், இந்த ஆசாமிக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார்.

"ரொம்ப லட்சணம்தான். போங்கள்! சம்பந்தமில்லாவிட்டால் இதை ஏன் நான் எடுத்து வைத்துக் கொள்கிறேன்? இது மிராசுதார் வீட்டில் அவர் அறையில் நாலு நாள் விழுந்து விழுந்து தேடியதில் கிடைத்தது. ஒருகால் இது மிராசுதார் பல்லாகவே இருக்கலாமோ என்கிற சந்தேகம் எழுந்தது. உடனே அவரது பிரேத பரிசோதனை சர்ட்டிபிகேட்டிலிருந்து அவர் பல் அத்தனையும் சரியாக இருந்தது என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டேன். பிறகு இந்தப் பல்லை எடுத்துக் கொண்டு பட்டணம் முழுவதும் சுற்றி வந்தேன். எனக்குத் தெரிந்த பல் டாக்டர் ஒருவரிடம் சென்று அவ



## பாட்டும் களைப்பும்!



ருக்குப் பதிலாக நான் பல் டாக்டராக நடித்துப் பல பேருடைய பல்லைப் பிடித்துப் பார்த்தேன். அங்கே மட்டும் பார்த்தால் போதுமா? சும்மா தெருவிலே போகிறவர்களைப் பரிசோதிக்க வேண்டாமா? தெருவில் போகிறவர்கள் பல்லைப் பார்க்க வேண்டும் என்றால் அது சுலபமாயிருக்கிறதா?

"அதற்கு ஒரு வழி செய்தேன். காலஞ் சென்ற பழைய ஹாஸ்யத் துணுக்குகளையெல்லாம் நினைவுக்குக் கொண்டு வந்து, அவற்றைச் சம்பாஷணையில் கலந்து பேசி எத்தனையோ பேருக்குச் சிரிப்பு மூட்டினேன்! அந்தச் சிரிப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அவர்கள் பல்லைக் கவனித்து, அவர்கள் அறியாவண்ணம் என் டப்பியிலிருக்கும் பல்லோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். ஒன்றும் சரிப்படவில்லை. கடைசியில் இந்த ஆசாமிதான் என்று நிச்சயம் செய்தேன், எப்படி என்கிறீர்களா? இவரை நான் வேவு பார்க்கிறேன் என்பதை இவர் எப்படியோ புரிந்து கொண்டார். இவர் பற்கள் தெரியா வண்ணம், மீசை ஒத்துழைக்கிறது. ஆனாலும் நான் என் வேலையை நிறுத்தவில்லை. என்னைப் பார்க்கும் போதெல்லாம் இவர் பற்களைக் கடிக்கிறதைக் கவனித்தேன். தப்பியோட நினைத்து இவர் ரயிலில் ஏற முயலுவதையும் குறிப்பாகக் கவனித்தேன். இன்ஸ்பெக்டர் ஸார், இவர்தான் குற்றவாளி என்பதில் துளியும் சந்தேகம் இல்லை. தயவு செய்து உடனே இவரைக் கைது செய்யுங்கள்!" என்று கூறி மிஸ்டர் பராங்குசம் ஒரு வெற்றிப் பார்வை பார்த்தார்.

அப்பொழுது மீசைக்காரரின் மீசை துடித்தது. "அந்த மிராசுதார் யார் என்று கூட எனக்குத் தெரியாது. எங்கே, இன்னொரு முறை நான் தான் குற்றவாளியென்று சொல்லும், பார்க்கலாம்!" என்று அழுத்தமாகக் கேட்டார்.

"ஒரு முறை என்ன? நூறு முறை சொல்லுகிறேன்! நீர்தான் குற்றவாளி!" என்று கூறினார் பராங்குசம்.

"அப்படியா?" என்று கேட்டு அந்த மீசைக்காரப் பேர்வழி தம் வாயைத் திறந்து பொய்ப் பல்லை எடுத்தார்.

இன்ஸ்பெக்டர் உள்பட யாவரும் கொல்லென்று சிரித்தார்கள், சிரித்தார்கள், அப்படிச் சிரித்தார்கள். சிரிப்பை அவர்களால் அடக்கவே முடியவில்லை. சிரிப்பு அடங்கி, எல்லோரும் நிமிர்ந்து பார்த்த போதுதான் மிஸ்டர் பராங்குசம் மறைந்து வெகு நேரம் ஆகிவிட்டது என்பது அவர்களுக்குத் தெரிந்தது!

# கம்பர் தரும் காட்சி

**டி.கே.சி.**

## 315. போய்விட்டான் அதிகாயனும்

**அ**திகாயன் இறந்த காரணமாகத் தாய் தானமாலையும் மற்றும் பக்கத்திலுள்ள மகளிர் எல்லோருமே என்றுமில்லாத துயரத்தில் மூழ்கியவராய் அழுது அரற்றினார்கள். அப்படி அழுக ஒலி இந்திரஜித்தின் காதில் விழுந்தது. விழுந்த மாத்திரத்தில் பயமும் பல வித சந்தேகங்களும் மனசில் உதித்தன. ராவணனே இறந்து போனானோ என்ற சந்தேகம் கூடப் பிறந்தது.

* * *

**ப**க்கத்திலுள்ளவர்களைப் பார்த்து "என்ன நேர்ந்தது! சொல்லுங்கள்?" என்று கேட்டான் இந்திரஜித்து.

கேட்டான் இடை
உற்றதென் என்று;
இனைத்தல் யா ரும்
மாட்டா து
நடுங்கினர் மாற்றம்
மறந்து நின்றார்;—
ஓட்டா நெடுந்
தேர்கடி(து) ஓட்டி
இமைப்பின் உற் றான்,
காட்டா தன
காட்டிய தாதையைச்
சென்றுகண் டான்.

[கேட்டான் இடை உற்றது என் என்று: இடையில் நிகழ்ந்தது என்ன என்று கேட்டான்; இனைத்தல் யாரும் மாட்டாது நடுங்கினர்: யாராலும் பேச முடியவில்லை, மௌனமாக நடுங்கிக் கொண்டு நின்றார்கள்; மாற்றம் மறந்து நின்றார்: பேசும் தன்மையையே மறந்து போய்விட்டவர்கள் போல் நின்றார்கள்;. ஓட்டா நெடுந்தேர் கடிது ஓட்டி: தான் ஓட்டாது சாரதியே ஓட்டும் தேரை இந்திரஜித்துதானே வேகமாக ஓட்டி; இமைப்பின் உற்றான்: ஒரு நொடியில் குறித்த இடம் போய்ச் சேர்ந்தான்—அதாவது ராவணனுடைய அரண்மனையை அடைந்தான்; காட்டாதன காட்டிய தாதையைச் சென்று கண்டான்: ராவணனது முகத்தில் துயரத்தை ஒரு நாளும் இந்திரஜித்து பார்த்ததில்லை. இப்போது அந்த முகத்தில் என்றுமில்லாத துயரம் நிறைந்து நின்றது. அதைப் பார்த்தான் இந்திரஜித்து.]

* * *

**ரா**வணனைப் பார்த்ததும், அவன் உயிரோடிருக்கிறான் என்ற உறுதி பிறந்தது. இந்திரஜித்துக்கு மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலும் உண்டாயிற்று.

கண்டான்; இறை
ஆறிய நெஞ்சினன்
கைகள்கூப் பி,
'உண்டா ய(து) என்
இவ்வழி' என்றலும்,—
'உம்பிமா ரைக்
கொண்டான் உயிர்
காலனும்; கும்ப
நிகும்பரோ டும்
விண்தான் அடைந்
தான்அதி காயனும்
வீர'என் றான்.

[கண்டான்: தந்தையைப் பார்த்துக்கொண்டான்; இறை ஆறிய நெஞ்சினன் கைகள் கூப்பி: சிறிது ஆறுதல் ஏற்பட்ட நெஞ்சினனும்க் கைகளைக் கூப்பிக்கொண்டு; உண்டாயது என் இவ்வழி என்றலும்: என்ன நடந்தது இங்கே என்று இந்திரஜித்து கேட்கவும்; ராவணன் சொல்லுகிறான்:

உம்பிமாரைக் கொண்டான் உயிர், காலனும்: உன்னுடைய தம்பிமார்களது உயிரை வாங்கி விட்டான் எமனும்; கும்ப நிகும்பரோடும்: உன் சிறிய தந்தை கும்பகர்ணனது புதல்வர்களான கும்ப நிகும்பரோடு; விண்தான் அடைந்தான் அதிகாயனும்: வானுலகத்தை அடைந்து விட்டான் உன் தம்பி அதிகாயனும்; வீர என்றான்: வீரனாகிய இந்திரஜித்தே என்று மனந் தளர்ச்சியவனாய்ச் சொன்னான் இராவணன்.]

இந்திரஜித்து ராவணன் இருவருடைய குணநிசயங்களைப் பார்க்கப் போகிறோம் இனி.

# மருக்கொழுந்துக் கூடைக்காரி

**வேம்பு**

**பார** வண்டிகள் மெள்ள ஆடி அசைந்து சென்று கொண்டிருந்தன. வண்டிகளிலே கட்டியிருக்கும் புகையேறிய ஹரிகேன் விளக்குகள், வீசும் காற்றில் ஒரு சமயம் அணைவது போலிருப்பதும், மறுகணம் 'குபுக் குபுக்' என்று நிற்பதுமாக இருந்தன.

பாதித் தூக்கத்திலே மாட்டை 'ஹைஹை' என்று விரட்டினாலும், முதலிலே போகும் வண்டிக்காரனிடமல்லவா 'விசை' இருக்கிறது?

நல்லப்பன் தூங்கவே முடியாது; தூங்கவும் மாட்டான்.

**'மானா மதுரையிலே மருக்கொழுந்து**
**கூடைக்காரி......'**

என்று எடுப்பான குரலில் தெம்மாங்கு பாடிக் கொண்டு வண்டியை ஓட்டுவதில் அவனுக்குத் தனி உற்சாகம்.

கார்த்திகை மாதக் கடைசியில் அந்தக் குளிருக்கு, உற்சாகமான பாட்டல்லவா தேவையாயிருக்கிறது!

மரங்களடர்ந்த அந்தச் சாலையில் 'தடக் தடக்' என்ற ஓசையுடன் சென்று கொண்டிருந்த வண்டிகள் சட்டென்று நின்றன. நல்லப்பனும் பாட்டை நிறுத்த வேண்டித்தான் வந்தது.

சட்டென்று கீழே குதித்தான் நல்லப்பன், "யாரு புள்ளே அது......நடுத் தடத்திலே......! கொஞ்ச நேரம் இருந்தால் வண்டியிலே அரைபட்டுப் போயிருப்பாயே......புத்திசாலி மாடுங்க நிக்காட்டிப் போனா...!" என்று சொல்லிக் கொண்டே, ஹரிகேன் விளக்கையும் எடுத்துக்கொண்டு குனிந்து முகத்தைப் பார்த்தான்.

அந்தச் சில்லென்று காற்று வீசும் குளிர் வேளையிலே, வேண்டுமென்று யாரும் படுத்திருக்க முடியாது. இதற்குள் இன்னும் நாலைந்து வண்டிக்காரர்களும் இறங்கி வந்தனர்.

மெள்ள அச் சிறுமியை வண்டியின் மேல் தூக்கிப் போட்டுக் கொண்டனர். வண்டி பழையபடி போக ஆரம்பித்தது.

"அப்பன் குன்னக்குடி முருகன்தான் துணை சேஞ்சான். நல்ல முகத்திலே முழிச்சேன். கொஞ்சம் மாடுங்க நிக்காட்டிப் போனா என்ன கதியாயிருக்கும்!" என்று கூறிக்கொண்டே வண்டியை விரட்டினான் நல்லப்பன்.

"**எ**ன்ன நல்லப்பா,...விசாரிச்சயா அந்தக் குழந்தை யாருன்னு...?" என்றான் சக வண்டிக்காரன் ஒருவன்.

"அண்ணாத்தை, இதைக் கேளு! அந்தப் பொண்ணு சொன்னதிலிருந்து பார்த்தால் அவள் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறான் என்று தெரிகிறது. அவளுக்கு மானாமதுரையாம். இங்கிருந்து முப்பது நாப்பது கல்லு இருக்குமில்லே! அது தான் அவள் இருந்த ஊராம். அப்பா அம்மா யாரு என்று அவளுக்குத் தெரியாதாம். விவரம் தெரிந்ததிலிருந்து ஒரு தோட்டக்காரன் குடிசையிலே வளர்ந்தது ஒன்றுதான் தெரியுமாம். தோட்டத்திலே அரளி, மல்லிகை, குண்டு மல்லிகை, ரோசா, தவனம், மருக்கொழுந்து என்று எத்தனையோ விதவிதப் பூவாம்! தினந் தினம் பாத்தி கொத்தி, தண்ணீர் கொட்டி, பூப்பறிச்சு, தொடுத்து, விற்று வரவேண்டிய வேலை இந்தப் பெண்ணினுடையது தானாம்" என்றான் நல்லப்பன்.

"ஆமாம்...... இதையெல்லாம் எப்படிக் கேட்டுத் தெரிஞ்சிக்கிட்டே?" என்றான் சக வண்டிக்காரன்.

"நல்லாக் கேட்டே. நான் கேட்டா சொல்லுவாளா?......என்னைக் கண்டதும் தான் ஓடி ஒளிஞ்சுக் கொள்ளுகிறாளே!... அன்னிக்கு இருட்டிலே அதன் முகத்தைப் பார்த்ததுதான். எல்லாம் நம்ப அத்தைப் பாட்டி மெல்ல சொருக்கிக் கொண்டே அதனுடைய பூர்வோத்திரமெல்லாம் விசாரிச்சா."

"அந்தத் தோட்டக்கார வீரண்ணன் அதட்டி மிரட்டி வேலை வாங்குவானாம். தன் தாய்—தகப்பன் யாரும் இல்லை. இந்தத் தோட்டத்து வீரண்ணனும் தனக்குச் சொந்தக்காரன் கூட இல்லை என்பது அதுக்குத் தெரியுமாம்.

"கூடையிலே கொத்துமலி, மருவு, முல்லை, எல்லாத்தையும் எடுத்துப் போட்டுக்கிட்டு மானாமதுரை சந்தைக்குப் போயி வித்துக் குலுங்கக் குலுங்கச் சில்லறையை வீரண்ணனிடம் கொண்டாந்துக் கொடுக்காட்டிப் போனா அன்னைக்குப் பிண்டம் பெருங்காயம் தானாம்!

"வயசு ஆக ஆக, விவரம் தெரியத் தெரிய ஒரு வேடிக்கை, ஒரு அதிசயம் என்றால் வியப்பாகப் பார்த்துக் கொண்டு தன்னை மறந்து நிற்கிற வழக்கம் தலை காட்ட ஆரம்பிச்சது சகஜந்தானே?

"காழி கழிக்க வந்தா—கொஞ்சம் பொழுது சாஞ்சுப் போயிட்டா—அந்தக் கொடுங்கண்கள் இந்தப் பிஞ்சு உள்ளத்தை வெம்பச் செஞ்சுவிடும்.

"பதிமூன்று பதினாலு வருஷங்கள் அவஸ்தைக்கும் அதிகாரத்துக்கும் பயந்து, தள்ளிப் போட்டு அந்த முரடனிடம் இருந்தாலும் விடிவு வராமேயா போய்விடும்?

"குடிசைப் பக்கம் ஒருத்தரையும் அண்டவிடமாட்டானும் அந்தப் பாதகன்.

"ஆனால் அவனுக்குச் சதிகார எண்ணம் இல்லாமல் இல்லே மெள்ள மெள்ள மூனியாண்டிச் சேர்வை என்ற பண்ணையான் ஒருத்தனுக்கு இவளைக் கல்யாணம் கட்டிக் கொடுக்க முடிவு செய்து விட்டானும், அத்துடனில்லாமல் இவளையும் அடிக்கடி அவன் வீட்டிலே 'அது இது'ன்னு சாக்குச் சொல்லிப் போகச் சொல்லுவானும்.

"இவ்வளவு கோரமாக அவனுடைய பேரைச் சொல்லாமல் சொல்லிக்கொண்டு வரேனே கதையை—அவள் பெயர் சொர்ணக்கொடி—எவ்வளவோ தடை சொல்லுமாம். 'இந்தா இந்தக் கத்தரிக்காயைக் கொடுத்து விட்டுவா' என்பானும்.

"ஒரு நிமிஷத்திலே போய், அவங்க வீட்டுத் தோட்டப்பக்கமாக நுழைஞ்சு சமையல்காரங்கக் கிட்டே கொடுத்தூட்டு வந்தூடுமாம்.

"தனது பயங்கரக் கண்களைக் காட்டி முழிப்பானும் அந்த முரடன். சில நாள் உதை கூட விழுமாம்.

"அன்னிக்கு அந்தப் பண்ணைக்காரன், வீரண்ணனுடைய குடிசைக்கே வந்து விட்டான். ரூபாய் — நோட்டுகள் — கலகலத்தன; சலசலத்தன. 'ஏ புள்ளே! இன்னிக்குச் சாயங்காலம் கூடையைத் தூக்கிக்கிட்டு பூப்போடப் போயிடப் போறே சந்தைக்கு...! ஐயாவோட கூடாரச் சினிமாவுக்குக் கிளம்பறும் ஜாக்கிரதை' என்றானும் வீரண்ணன்.

"சொர்ணக் கொடி முடிவு செய்து விட்டாள். பகல் ஒரு மணிக்கு வீரண்ணன் நன்றாகத் தின்று விட்டுத் தூங்கும் போது கூடையோடே கிளம்பி விட்டாள். வேகமாக நடந்தாள்."

"அப்புறம்?"

"அப்புறமென்ன? அன்னிக்கெல்லாம் எங்கெங்கோ அலைஞ்சாள். கோயில்லே படுத்துக் கொண்டாள்.

"மறு நாளும் நடந்தாள். நேற்று ராத்திரிதான் கம்ப வண்டிவாசத் தடத்துலே விழுந்தூட்டா. பசி வேறே, குளிரு வேறே. அவளாலே ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியல்லே."

கல்லப்பன் சொல்லி முடிக்கும் போது அவன் முகத்திலே கனிந்த பாசத்தைக் கூறுவதா? காப்பாற்றிய பெருமிதத்தைச் சொல்லுவதா; தன் வீட்டிலே சொர்ணக் இனி இருக்கும் பெருமை காட்டும் முகத் தெளிவை வர்ணிப்பதா?

* * *

சொர்ணக்கொடி வீட்டு வேலையை யெல்லாம் செய்தாள். தோட்டத்திலே செடிகள் நட்டாள்; கட்டாந் தரையாகக் கிடந்த புறக்கடையை ஒரு நந்தவனமாகச் செய்தாள்.

அன்று தண்ணீர் எடுக்க வெளியே போனவள், திரும்பும் பொழுது திண்ணையிலே வீரண்ணன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். குடம் நழுவியது.



டாக்டர் :—உங்களை 'எக்ஸ்ரே' போட்டோ எடுக்க வேண்டும் ஐயா!

நோயாளி :—சரி! கொஞ்சம் இருங்கள். நான் வீட்டுக்குப்போய் நன்றாக டிரஸ் பண்ணிக் கொண்டு மனைவியையும் அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன். அவளுக்கு ரொம்ப நாளாக நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து போட்டோ எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை!

ஓலெனக் கூவி வீட்டுக்கு உள்ளே ஒரே ஓட்டத்தில் ஓடி விட்டாள்.

கொல்லையில் மாட்டுக்குத் தண்ணீர் காட்டிக் கொண்டிருந்த நல்லப்பன் ஓடி வந்தான்.

வீட்டுக்குள்ளே நுழைய வந்த வீரண்ணனைத் தடுத்தான்.

ஏகப்பட்ட ரகளை உண்டாகியது. வீரண்ணனுடைய மண்டையை நல்லப்பனின் குண்டாந்தடி பதம் பார்த்தது.

சிதறிய இரத்தத் துளிகளுடன் வீரண்ணன் ஓடினான். எங்கேயோ போனான். நாலைந்து பேர்களுடன் வந்தான்.

வீரண்ணனுக்கு வந்த இடத்தில் நாலு பேர் துணையென்றால், நாலு தலை முறையாக அங்கேயே இருக்கும் நல்லப்பனுக்கு உதவக் கேட்க வேண்டுமா?

அந்தத் தெருவே யுத்தகளமாகி விடும் போலிருந்த சமயம்தான், வீரண்ணன் போலீசுக்கு ஓடிப் பிராது கொடுத்தான்.

தன் இறந்துபோன தமக்கையின் மகள் சொர்ணக் கொடியைத் தான் வளர்த்து வந்ததாகவும், நல்லப்பன் தனது அனுமதியின்றித் திருட்டுத் தனமாகக் கூட்டி வந்து விட்டதாகவும், இடம் தெரிந்துகண்டு பிடித்துச் சொர்ணக் கொடியை கூப்பிட வந்த இடத்திலே, நல்லப்பன் ஆட்களைச் சேர்த்து அடித்து விரட்டியதாகவும் புகார் செய்தான்.

சட்டப்படி கைது செய்யப்பட வேண்டியவன்தானே நல்லப்பன்?

போலீசிலே சொர்ணக் கொடியை அழைத்துப் பல கேள்விகள் கேட்டார்கள்.

"வீரண்ணன் உன் மாமனா?"

"இல்லை."

"உன் அம்மாவைத் தெரியுமா?"

அழுது கொண்டே "தெரியாதுங்க" என்றாள்.

இந்தச் சமயம் வீரண்ணன் குறுக்கிட்டு, "இந்தச் சொர்ணக் கொடி நாலு வயசுப் பொண்ணாக இருந்த போது அம்மை போட்டு இவ அம்மா செத்துப் போனா. இவ அம்மா சாகறத்துக்கு ரெண்டு வருஷம் முந்திதான் இவ அப்பனும் கண்ணை மூடிவிட்டான். நான்தான் என் தமக்கையையும் அவ பொண்ணையும் வளர்த்து வந்தேன். எல்லாம் வளர்க்கிற வரையில் தான். திடீர்னு எங்கிருந்தோ வந்தானே பாவி!" என்று பிலாக்கணம் வைக்க ஆரம்பித்துப் டசப்பு நாடகம் நடித்தான்.

* * *

இன்ஸ்பெக்டருக்கு என்ன வந்தது? வீரண்ணனையும் உள்ளே தள்ளி, நல்லப்பனையும் ரிமாண்டிலே தள்ளி விட்டார்.

நல்லப்பன் மேலே இரண்டு கேஸ். அனுமதியில்லாமல் பெண்ணைக் கடத்தி வந்தது, இரண்டாவது உயிருக்கு ஹானி விளைவிக்கும்படியாக ஆட்களைச் சேர்த்து அடித்தது.

நடுவழியிலே இருட்டிலே கிடந்தவளை வண்டியிலே போட்டுக்கொண்டு வந்தோம் என்று நல்லப்பன் எவ்வளவோ தடவை சொல்லிப் பார்த்தான். ஆனால் சாட்சி சொல்லுவதற்கு, கூட வந்த வண்டிக்காரன் சவரி முத்து புதுக் கோட்டைக்குப் போயிருந்ததில் நல்லப்பனால் ருஜு செய்ய முடியவில்லை.

'எங்கிருந்தோ வந்தாள், இவளால் என் மவன் ஜெயிலுக்குப் போகவேண்டியதாக வந்துட்டதே' என்று நல்லப்பனின் தாயார் புலம்பினாள்.

ஆனால் அத்தைப் பாட்டி மட்டும் "கரிக்காதங்கடி அம்மா! எல்லாம் அந்தக் குன்னக்குடி முருகன் அருளாலே சரியாப் போயிடும். பாத்தால் ராசாத்தி மாதிரி நல்ல பொண்ணாப் படுது" என்பாள்.

கேஸ் நடக்க ஆரம்பித்தபோது, சவரி முத்து வந்து விட்டான். கோர்ட்டாருக்கு அவன் சில ருசிகரமான விவரங்கள் கொடுத்தான்.

அந்த விவரங்கள் மூலம் வீரண்ணன் குற்றவாளிதான் என்பது ருசுவாகியது. நல்லப்பன் நல்லவனாகவே வெளியே வந்துவிட்டான்.

* * *

அதே கார்த்திகை மாதத்துக் கடைசியில் குளிர் நாளில் பார வண்டியின் மீது சொர்ணக் கொடி உட்கார்ந்து வந்தாள். கழுத்தில் மஞ்சள் மாங்கல்யம் மின்னியது. மாட்டை விரட்டிக் கொண்டே நல்லப்பன் மெள்ள பாடத் தொடங்கினான்.


"மானா மதுரையிலே
மருக் கொழுந்துக் கடைக்காரி
தேனொழுகப் பேசி யென்னைத்
திக்கு திசை மாற்றி விட்டாள்"

"அண்ணாச்சி, தடத்தைப் பார்த்து ஓட்டுங்க......போன வருசம் மாதிரி...ஏதாவது...!" என்றான் பின்னால் வந்த வண்டியோட்டி சவரிமுத்து. 'களுக்' கென்று சிரித்து விட்ட சொர்ணக் கொடியின் கன்னங்கள் வெட்கத்தால் சிவந்தன.


நல்லப்பனுக்கு இதெல்லாம் எங்கே கவனம். இன்னும் ராகம் போட்டுத் தெம்மாங்கைப் பாடிக் கொண்டே மாட்டை விரட்டலானான்.

## அதி அற்புத ரகங்கள்!

புகழ் பெற்ற ஸ்விஸ் பாக்டரிகளில் தயாரானது
ஒவ்வொன்றும் 5 வருஷ உத்திரவாத முள்ளவை

NO-81


5 ஜுவல் க்ரோம் 30/- ரோல்டுகோல்டு 33/-
7 ,, க்ரோம் 35/- உயர் ரகம் 38/-
15 ,, க்ரோம் 44/- ரோல்டுகோல்டு 48/-

NO-82


5 ஜுவல் க்ரோம் 28/- ரோல்டுகோல்டு 33/-
7 ,, க்ரோம் 33/- உயர் ரகம் 35/-
15 ,, க்ரோம் 42/- ரோல்டுகோல்டு 45/-

NO-83


முழுவதும் ஜுவல் 19/- உயர் ரகம் 21/-
ரேடியத்துடன் 21/- செண். செகண்டு 23/-
ஸ்பெஷல் உயர்ந்த ரக மெஷின் 27/-

NO 84


5 ஜுவல் க்ரோம் 26/- ரோல்டு கோல்டு 32/-
7 ,, க்ரோம் 32/- ரோல்டு கோல்டு 36/-
15 ,, க்ரோம் 48/- ரோல்டு கோல்டு 58/-

NO-85


5 ஜுவல் க்ரோம் 22/- உயர் ரகம் 25/-
5 ,, ரோல்டு கோல்டு 30/- உயர் ரகம் 33/-
15 ,, க்ரோம் 45/- ரோல்டு கோல்டு 55/-

டைம் பீஸ் 20/- உயர் ரகம் 25/-
பாக்கெட் வாட்ச் 12/- உயர் ரகம் 15/-

*தபால் செலவு பிரத்தியேகம். இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு தபால் செலவு இலவசம்*

★

**PIONEER WATCH CO.**
**POST BOX No. 11428 - CALCUTTA**



# ப்ளாண்டர்ஸ்
ஹை க்ரோன்
நீலகிரித்
தேயிலை




நீங்கள்
ரசிக்கக்கூடிய
ருசிக்காக

THE PLANTERS COMPANY, LTD.,
COONOOR. NILGRIS S. INDIA.

# தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

வழங்கி வாக்களிக்கப் பட்ட மூலதனம்
ரூ. 4 கோடிகள்.
செலுத்தப்பட்ட மூலதனம்
ரூ. 2 கோடிகள்.
ரிசர்வ் நிதி
ரூ. 52½ லக்ஷங்கள்.

தலைமை ஆபீஸ்
கல்கத்தா.

G. D. பிர்லா
சேர்மன்.

B. T. தாகூர்
ஜெனரல் மானேஜர்.



*Each Drop of*

**SUGARINE**

PUTS NEW LIFE
*into a patient of*



# DIABETES

மிகக் கொடிய நிலையிலுள்ள டியாபெடிஸ் வியாதிக்கு 'ஷுகரைன்' ஓர் சிறந்த ஔஷதம். நோய் குணமாகாதென நம்பிக்கையை இழந்தோரும் 'ஷுகரைன்' உட்கொள்ளலாம். முதல் நாளே நீர்க் கழிவின் எண்ணிக்கையிலும் அளவிலும் குறைவு ஏற்படும். சில தினங்களிலேயே நீரிலுள்ள சர்க்கரை சத்தைக் குறைத்து சம நிலைக்குக் கொண்டு வரும். மருந்து சாப்பிட ஆரம்பித்த உடனேயே தாக உணர்ச்சி மறைகிறது. தேகத்தின் மீது ஏற்படும் நமைச்சலும், அதனால் பரவும் படை முதலிய சரும நோய்களும் மாயமாக மறையும். உணவில் பத்தியம் (கட்டுப்பாடு) இன்ஜெக்ஷன் முதலிய தொல்லைகளும் கிடையாது. மருந்து உட்கொண்ட சில நாட்களிலேயே கொடியதும், குணப்படுத்த முடியாதென குறிப்பிடப்படும் இந்த வியாதியை பூரண குணமடையச் செய்யும்.

**ஒரு பாட்டில் விலை ரூ. 10**

தபால் செலவு தனி

குணமில்லையென நிரூபித்து, காலிப் பெட்டியை வாபஸ் செய்பவர்களுக்குப் பணம் திரும்பக் கொடுக்கப்படும்.


(கெமிஸ்டுகள் வியாபார நிபந்தனைகளுக்கு எழுதவும்)

**MAYOR & BROOKS**

LABORATORIES (K. M.) JULLUNDUR

Telegrams: SERVICE


## 52 BOOKS COMBINED INTO ONE GIANT VOLUME




Book Size - 10" X 7" - Stamped in Gold. This Stupendous volume answers hundreds of Every-day questions-Essential knowledge for all the Family - Price is Rs. 21/- plus postage. Order a copy or send As. 0-1-0 for gleaming colourful leaflets describes fully about this WONDER BOOK. Don't delay.

•

**K. L. KANNAPPA MUDALIAR**
POST BOX NO. 2227 - MADRAS - 2
and also at Calcutta
P. B. No. 8920 - CALCUTTA - 13



தற்போது கிடைக்கிறது
அமெரிக்கன் மாடல்
ரோல் பிலிம்
பாக்ஸ்

## காமிரா

திருஷ்டி உபகரணத்துடன் உயர்ந்த லென்ஸுகள் பொருத்தப்பட்ட, விலையில் மலிவான மேன்மையான காமிரா. புதிதாகக் கற்றுக் கொள்பவர்களும் எளிதாக உபயோகிக்கலாம். பிலிம் நெ. 120-ல் நீண்ட காலம் திருப்தி அளிக்கும் $2\frac{1}{4}'' \times 3\frac{1}{4}''$ சைஸ் போட்டோக்கள் எடுக்கலாம். திருப்திக்கு உத்திரவாதம் முழு விவரங்களடங்கிய குறிப்புகளுடன் விலை ரூ. 10-8-0 பாக்கிங் தபால் செலவு ரூ. 1-8-0. தனி. தோல் கேஸ் ரூ. 3/- சரக்குகள் சொல்பமே உள்ளதால் உடனேயே தேவைக்கு எழுதவும். கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதப்படல் வேண்டும்.

•

**BENGAL CAMERA HOUSE**
(108) P. O. 21, ALIGARH U. P.




உங்கள்
பிரியமான
பானம்

## நறுமணம் உள்ளது.

NCF-7 TM



எல்லா வயல்களிலும்
தரிசு நிலங்களிலும்
பயிரிடுங்கள்.

உணவு
உற்பத்தியைப் பெருக்குக

AC.133TM

Edited, Printed and Published by R. Krishnamurthy at "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

## மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள் நம்பர் 80 வரை நூல்கள்

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒற்றை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய சாரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள். எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்: ஏ. & எப். ஹார்வி லிமிடெட்



## ஆஸ்துமா சளி ஒரே நாளில் அகற்றப்படுகிறது

மெண்டாகோ கண்டு பிடிக்கப்பட்டது முதல் மூச்சுத் திணறி, சுவாச இழுப்புடனும் ஆஸ்துமாவினால் யாரும் அவதியுறவேண்டாம். மெண்டாகோவை உபயோகித்தால் இன்ஜக்ஷனும் கெடுதலான புகையும் வேண்டாம். ருசியற்ற இரு மெண்டாகோ மாத்திரைகளை ஆகாரத்துடன் சாப்பிட்ட 10 நிமிஷத்தில் உடலிலுள்ள சளி உடனேயே கரைகிறது. சுலபமாக மூச்சு விடலாம். நரம்புகளுக்கு விச்ராந்தி சுவாசப் பைக்கு நன்மை. விருவிருப்பு ஏற்படும்.

### சிசுவைப்போல் அயர்ந்த நித்திரை

ஆஸ்துமாவினால் அவதியுறும் ஆயிரக்கணக்கானவர்கள் முதன் முதலில் மெண்டாகோவை உட்கொண்டு சுகமடைந்தனர். இரவே ஆழ்ந்த நித்திரை செய்தனர் என்றும் கூறுகின்றனர். திடஆரோக்யமாகவும் 5 முதல் 10 வருஷம் இளமை படைத்ததாகவும் உணர்ந்தனர். காரணம் ஆஸ்துமாவினால் ஏற்படும் இடையூறுகளை மெண்டாகோ இயற்கையில் தவிர்க்கிறது. (1) சளியையும் கோழையையும் இளக்குகிறது. (2) சுவாச மார்க்கத்திலுள்ள சிறு நரம்புகளுக்கும் பலம் அளிக்கிறது. (3) தேகத்திற்கு விருவிருப்பையும் சக்திபுஷ்டியையும் அளிக்கிறது.

### ஐந்து வருஷமாக ஆஸ்துமா இல்லை

சுலபமாக சுவாசிக்க சக்தி அளித்து சுகமான நித்திரையையும் உண்டாக்குகிறது. ஆஸ்துமா அண்டாமல் தேகத்தைப் பலப்படுத்துகிறது. ஜே. ஆர். என்பவர் எழுதுகிறார்: "ஆஸ்துமாவினால் என் உயிரே போய் எடையிலும் 40 பவுண்டு குறைந்து விட்டது. இழுப்பு, இருமல், மாரடைப்பு, தூக்கமே இல்லை. சாவைத்தான் எதிர்பார்த்தேன். மெண்டாகோ முதல் இரவிலேயே எனக்கிருந்த பிடிப்பை விடுவித்தது. கடந்த இரண்டு வருஷங்களாக ஆஸ்துமாவே இல்லை. மிஸஸ். ஏ. டபிள்யூ எழுதுகிறார்: "கடந்த 25 வருஷமாக எனக்கு ஆஸ்துமா உண்டு. மெண்டாகோவை உபயோகித்ததிலிருந்து இரவில் நல்ல தூக்கம். பிறபாடு ஆஸ்துமா உண்டாகவே இல்லை." மிஸஸ். ஜி. ஈ. வீ. எழுதுகிறார்: "மெண்டாகோவைப் பற்றிக் கேள்விப்பட்ட நன்னாளை வாழ்த்துகிறேன். கடந்த 35 வருஷங்களாக இராத் தூக்கத்தையே அறியாத என்போன்ற ஏழைகளுக்கு ஆண்டவன் அளித்த அமிர்தம் மெண்டாகோவே. தூக்கமின்றி ஆஸ்துமாவினால் உருகிப் போகிறேன். இந்த கஷ்டங்களை சொல்லாம் இப்போது மறந்துவிட வேண்டும் என்று உணருகிறேன்.

### கைமேல் காணும் பலன்

மெண்டாகோ முதல் வேளை சாப்பிட்டதுமே ரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ அதிவிரைவில் மௌனமாக உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்திரவாதத்தின் கீழ் மெண்டாகோ உபயோகித்துப் பார்த்து நீர் பரீக்ஷியுங்கள். மெண்டாகோ சாப்பிட்ட பின் பூரண குணம் பெறது. திருப்தி யளிக்காவிடில் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறுநாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிறது என்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

**Mendaco**

மெண்டாகோ

● ஆஸ்துமா ● மார்ச்சளி நோய் ● தேம ஜுரம் இவற்றை நிவர்த்திக்கிறது

REGD. No. M. 4392





சௌந்தரியவதி கண்ணாம்பா

தன் சருமத்தை வசீகரமாக வைத்துக்கொள்ள ஏன்

# லக்ஸ் டாய்லட் சோப்பை

விரும்புகிறார் என்று சொல்கிறார்!



"அழகு பராமரிப்புகளிடையே மிக சுலபமானதும், சிறிதளவே செலவுள்ளதும், திண்ணமாக பலனளிப்பதும் இதுவே. நான் முகம் கழுவும் போதெல்லாம் இதை உபயோகிக்கிறேன். இது வதனத்தை மிக மிருதுவாகவும், தொடுவதற்கு மழுமழுப்பாகவும் இருக்கச் செய்கிறது. லக்ஸ் டாய்லட் சோப்பின் ரமமியமான பரிமளத்தை நான் மிகவும் விரும்புகிறேன்."

இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக செய்யும்!

**சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்**

LTS. 238-172 TM